விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005




இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 09 சனிக்கிழமை (26.09.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 281

## நீதி வழங்குவதற்கான பொதுவான பொறிமுறை!

### புதிய தீர்மானம் தொடர்பில் ஜோன் கெரி அறிக்கை



(நியூயோர்க்)

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மான வரைவானது உண்மை, நீதி, பரிகாரத்தை அனைவருக்கும் வழங்குவதற்கான வழிகளை குறிப்பதுடன் கௌரவம் மற்றும் தொழில்சார் நிபுணத்துவத்துடன் நடந்து கொண்ட இராணுவத்தில் உள்ளவர்கள் உள்ளடங்கலாக அனைவரினதும் நற்பெயரை பாதுகாக்கும் அதேவேளை மீள நிகழாதிருப்பதற்கான உத்தரவாதத்தையும் அளிக்கிறது என அமெரிக்க இராஜங்க செயலர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

விரிவான செய்தி 03-ம் பக்கத்தில்...

## ஆசிரிய தம்பதியர்களை தாக்கிய இளைஞர்களில் ஒருவர் கைது

### கணவர் மரணம்; கமராவில் ஆதாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் வைத்து தம்பதிகள் மீது மோசமான தாக்குதலை மேற்கொண்டு அவர்களில் ஒருவரை கொலை செய்த இளைஞர் குழுவினை சேர்ந்த ஒருவர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏனையவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் விரைவில கைது செய்யப்படுவார்கள் என யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவத்தில் யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியினைச் சேர்ந்த ஆசிரியர்களான மாதவமணி வண்ணன் (வயது 44), எம்.தர்சனி (வயது 41) என்னும் தம்பதிகளே காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இவர்களில் மாதவமணிவண்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நாவின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப்படுத்தும்

### வெற்றியான முடிவு என்கிறார் மங்கள

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனையின் பரிந்துரைகளை அர்ப்பணிப்புடன் நடைமுறைபடுத்தவுள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர இதனை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனையானது, இலங்கையை பொறுத்தவரை வெற்றியானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பல வருடங்களாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தனிமைப்பட்டிருந்தது.

24ஆம் பக்கம் பார்க்க....

## ரி.ஐ.டியினரால் குடும்பஸ்தர் கைது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கச்சாயைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 23-ம் திகதி பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மார்க்கண்டு நேமிநாதன் என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே கைதானவராவார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையில் நடந்த இறுதிப் போரில் 40 ஆயிரம் மக்களின் உயிரிழப்பை இந்தியா தடுக்க தவறிவிட்டது

### நவநீதம்பிள்ளை பகிரங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்தியா உரிய நேரத்தில் தலையிட்டிருந்தால் இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் 40 ஆயிரம் பொது மக்களின் உயிரிழப்பை தவிர்த்திருக்க முடியுமென ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் தந்தி தொலைக்காட்சிக்கு வழங்கிய விசேட செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகள் சர்வதேச நீதி பொறிமுறைகளை தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றன. இந்த நிலையில், இலங்கை யுத்தக்குற்ற விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும் என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தியா ஐக்கிய நாடுகள் சபையில மிக முக்கியமான நாடு என்பதோடு, சர்வதேச ரீதியில் செல்வாக்கு மிகுந்த நாடாகவும் திகழ்கின்றது. இந்நிலை

23ஆம் பக்கம் பார்க்க....



## சுன்னாகத்தில் தாலி, சங்கிலி அறுப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் இரண்டு இளைஞர்கள் வீதியில் சென்ற பெண்ணின் தாலிக் கொடியையும் சங்கிலியையும் அறுத்து சென்ற சம்பவம் சுன்னாகம் பிரதேசத்தில்

24ஆம் பக்கம் பார்க்க....


## நிலச்சரிவு 5 பேர் பலி

(கொழும்பு)

மத்திய மாகாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை நிகழ்ந்த மண்சரிவில் சிக்கி ஐவர் உயிரிழந்துள்ளனர்.

நுவரெலியா கொத்மலை பிரதேசத்திலுள்ள வெதமுலவத்தை பகுதியில் ஏற்பட்ட இந்த மண்சரிவுக்குப் பிறகு ஐந்து பெண்கள் உயிரிழந்ததுடன், நான்கு பேர் காணாமல போயுள்ளதாகவும் இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....



வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவை நியூயோர்க்கில் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோது...

## நவம்பர் 20-ல் புதிய பட்ஜெட்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய அரசாங்கம், கவர்ச்சிகரமான நிவாரணங்களுடன் மக்களுக்கு சார்பான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும் என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும்போது சகல தரப்பினரின்

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### குற்றச்செயல்களை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

# சந்தேகநபர்கள் பலர் கைதாகி நீதிமன்றங்களில் ஆஜர்

## பொலிஸ் அதிகாரிகள் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக கப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் சந் தேக நபர்கள் பலர் கைது செய்யப்பட்டு அந்தந்த நீதிமன் றங்களில் ஆஜர் செய் யப்பட்டிருப்பதாக தெரி விக்கப்படுகிறது.

யாழ் மாவட்ட உதவி பொலிஸ் அத் தியட்சகரும், மாவட் டத்தின் பல்வேறு பொலிஸ் நிலையங் களைச் சேர்ந்த பொறுப் பதிகாரிகளும் யாழ்ப பாணம் மேல் நீதி மன்ற நீதிபதி இளஞ் செழியன் முன்னிலை யில் ஆஜராகி இவ் விடயத்தை தெரிவித் திருக்கின்றனர்.

சுன்னாகத்தில் கடையொன்றுக்குள் புகுந்த ரவுடிக் கும்பல ஒன்று இருவர் மீது வாள்வெட்டு நடத திய சம்பவத்தை யடுத்து, குற்றச் செயல் களைக் கட்டுப்படுத்து வதற்காக மேற்கொள் ளப்பட்டுள்ள நீதிமன் றச் செயற்பாடுகளுக்கு சவால் விடுக்க முற் பட்டிருக்கின்ற ரவுடி களுக்கும், ரவுடி கும் பல்களுக்கும் எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேல் நீதி மன்ற நீதிபதி வட மாகாண பிரதி பொலிஸ் மா அதிபரை அழைத்து நேரடி யாக உத்தரவு பிறப்பித்திருந்தார்.

நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமை வாகக் குற்றச்செயல் களைக் கட்டுப்படுத்த வும், குற்றவாளிகளை யும் சந்தேக நபர் களையும் கைது செய வதற்காக விசேட அதிரடிப் படையினரை அமர்த்தி தேடுதல் மற் றும் கண்காணிப்பு நடவடிககைகள் சுன னாகம் மற்றும் அத னைச் சூழ்ந்த பிர தேசங்களில் தீவிர மாக மேற்கொள்ளப் பட்டிருந்தன.

அதேநேரம் மாவட் டத்தின் ஏனைய பொலிஸ் நிலைய பிரதேசங்களிலும், குற்றச் செயல்களைக் கட்டுப் படுத்துவதற் குரிய தீவிர நடவ டிககைகளை எடுக்கு மாறு வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங் களின் பொறுப்பதிகாரி களுக்கு உத்தரவிட்டி ருந்தார்.

இதனையடுத்து கடந்த ஒரு வாரத் தில் அந்தந்த பொலிஸ் நிலைய பிரிவுகளில் சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்துவதற் காக மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கை கள் குறித்து மேல் நீதி மன்றத்துக்கு நேரடி யாக ஆஜராகி முன் னேற்ற நிலைமை கள் தொடர்பிலான அறிக்கை சமர்ப்பிக் குமாறு வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் விடுத்திருந்த உத்தரவுக்கமையவே நதிபதியிடம் பொலிஸ அதி காரிகள் இத னைத் தெரிவித்துள்ள னர்.

**சுன்னாகம்**

கடந்த ஒரு வாரத தில் யாழ் நகரம் மற்றும் கொக்குவில் சுன்னாகம் பொலிஸ் பகுதிகளில் நடை பெற்ற வாள்வெட்டுக் கள், தெருரவுடித்த னங்களை விசேட அதிரடிப்படையின் துணைகொண்டு கட டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் சந தேக நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன றத்தில் ஆஜர்படுத்தப் பட்டுள்ளதாகவும், சம் பவத்தின் பின்னர் தலைமறைவாகி யுள்ள சந்தேக நபர் களைக் கைது செய்ய தொடர் நடவடிக்கை கள் எடுத்து வருவதாக வும் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேல் நீதிமன்ற நீதிபதி முன் ஆஜராகி அறி வித்துள்ளார்.

சுன்னாகத்தில் வாள்வெட்டு குற்றச் செயல் நடைபெற்ற போது, மனைவியின் சுகவீனம் காரண மாக தான் விடுமுறை யில் நின்றதாகவும் சம்பவம் நடைபெற் றதை அறிந்ததும், உடனடியாக கடமைக் குத் திரும்பி குற்றம் புரிந்தவர்களைக்கைது செய்ய நடவடிக்கை எடுத்ததாகவும், அவர தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலப் பகுதியில் சுன்னாகம பிரதேசத்தில் எது வித குற்றச்செயல்களும், நடைபெறாவண்ணம் கவனிப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், குற்றச செயல்கள் புரிந்தவர் கள், புரிபவர்கள் என சந்தேகிக்கப்படும் அனைவரும் பொலிஸ நிலையத்துக்கு அழைத்து இரவு பகல பாராமல் விசாரணை கள் மேற்கொள்வதாக வும் முக்கிய சூத்திர தாரிகள் தலைமறை வாகியுள்ளதால், விசேட அதிரடிப்படை யின் உதவியுடன் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கை கள் எடுக்கப்பட்டிருப் பதாகவும் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரி வித்துள்ளார்.

**யாழ்ப்பாணம்**

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விடு முறையில் இருப்பத னால், அவருக்காக பதில் கடமையாற் றும் யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் அத் தியட்சகர் நீதிபதி முன்னிலையில் ஆஜராகி, யாழ் குடா நாட்டு குற்றச் செயல் கள் மிக விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் எனவும் குற்றச்செயல் கள் புரிந்தவர்கள் கைது செய்யப்பட்டு அந்தந்த மன்றுகளில் ஆஜர் செய்யப்பட்டு வருவதாகவும் தெரி வித்துள்ளார்.

மேல் நீதிமன்ற உத்தரவையடுத்து பிரதி பொலிஸ்மா அதிபரின் கட்டளையின் பேரில் அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான உத்தரவுகள் பிறப்பிக கப்பட்டிருப்பதாகவும் நீதிபதியிடம் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, நீதி பதி முன்னிலையில் ஆஜராகிய யாழ்ப் பாணம் பொலிஸ் நிலைய பொறுப்பதி காரி கொக்குவிலில் நடைபெற்ற வாள் வெட்டு தனிப்பட்ட பகை காரணமாகவே இடம பெற்றதாகவும் எதிரி அடையாளம் காணப் பட்டு, அவரைக் கைது செய்வதற்கான நட வடிக்கை எடுக்கப்பட்டி ருப்பதாகவும் தெரி வித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தி, குற்றச் செயல்களைக் கட் டுப்படுத்துவதற்காக யாழ் நகரப் பகுதியில் விசேட பொலிஸ் பாது காப்பு நடைமுறை தொடங்கப்பட்டுள்ள தாகவும் அவர் நீதி பதியிடம் தெரிவித் துள்ளார்.

**வீதிகளில் ஹீரோ வீடுகளில் ஸீரோ**

இதனையடுத்து யாழ்ப்பாணத்தின் நிலைமைகள் குறித் தும், அங்கு எடுக்கப் பட வேண்டிய நட வடிக்கைகள் குறித் தும் நீதிபதி இளஞ் செழியன் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறி வுறுத்தியபோது தெரி வித்ததாவது,

பாடசாலை மாண வர்கள் பகிரங்க இடங் களில் மது அருந்து வதாக முறைப்பாடு கள் வந்துள்ளன. அவ வாறான மாணவர் களை சாராயப் போத் தல்களுடன் கையு மாகக் கைது செய்ய வேண்டும்.

மாணவர்கள் பாட சாலை நேரத்தில் சீருடையில் வீதி களில் காணப்பட்டால அவர்களை விசா ரணைக்கு உட்படுத்த வேண்டும்.

மாணவிகளின் பின்னால் மாணவர் கள் கூக்குரலிட்டுச் செல்வதை அனு மதிக்க முடியாது. அவ் வாறு செல்வர்களைக் கண்காணித்து நட வடிக்கை எடுக்க வேண்டும் அத்துடன் மாணவர்கள் இளை ஞர்கள் சந்திகளிலும், மதகுகளில் கூடிநின்று கும்மாளம் அடிக்கும செயல்களையும் கட் டுப்படுத்த நடவடிககை எடுக்க வேண்டும்.

விசேடமாக ரியுட் டரிகளின் முன்னால் 4 மணிக்கும் 6 மணிக்கும் இடை யில் மாணவிகளி டம் சில்மிசம் செய் யும் இளைஞர்ளை யும், ரியுட்டரிகள் முன்னால் கூடி காதல் விவகாரம் என, மாணவிகளுக்குப் பாதுகாப்பு வழங்கிச் செல்பவர்களையும், அவர்களுடன் கோஷ் டியாக மோதல்களிலீடு படுபவர்களைக்கைது செய்ய வேண்டும்.

விசேடமாக யாழ் நகரப்பகுதிகளில் கூட் டமாக கூக்குரலிட்டு மோட்டார் சைக்கிள் களில் இளைஞர்கள் பவனி வருவது அவ தானிக்கப்பட்டிருக்கின றது.

இதனால் பாட சாலைமாணவமாண விகள், யுவதிகள் பொதுமக்கள் அச் சமடைய நேரிட்டுள் ளது. வீதிகளில் கூட் டமாக மோட்டார் சைக் கிள்களில் வெட்டி வெட்டி வேகமாக ஓடுவதனால்,வாகன போக்குவரத்துக்கும் பொதுமக்களின் போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்படு கின்றது. இவர்களைக் கண்ட இடத்தில் கைது செய்ய பொலிஸார் தயங்கக் கூடாது. இவர்களைக் கைது செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வேலையில்லா மல் வெட்டியாக மோட் டார் சைக்கிள்களில் திரியும் இளைஞர் களிடம் ஒரு மோட் டார் சைக்கிள், ஒரு கைத்தொலைபேசி, கழுத்தில் ஒரு தங் கச் சங்கிலி என் பனவே அவர்களின் சொத்தாக உள்ளது.

இவைகள் மூன் றும் வெளிநாடுகளில் இரவு பகல் பாராது உழைக்கும் உறவு களின் வியர்வை சிந் திய சம்பாத்தியத்தில் பெறப்பட்டவை.

ஆனால் இவர் கள் வீதிகளில் மோட் டார் சைக்கிள்களில் தேவையில்லாமல் ஓடித்திரிகையில் தங் களை ஹீரோவாக கற்பனை செய்து கொள்கின்றார்கள்.

தொழில் இல்லாததால், வீட்டில் இவர் க்ளின் நிலைமை ஸ்ரோ. இதன் வெளிப்

23ம் பக்கம் பார்க்க....


## நாடகவிழா - 2015

தென்மராட்சி கலைமன்றம் பெருமையுடன் நடாத்தும் நாடகவிழா - 2015 இன்று 26.09.2015 (சனிக்கிழமை) மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை சாவகச்சேரி சிவன்கோவில் வீதியில் அமைந்துள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெற உள்ளது. யாழ்.செயல்திறன் அரங்க இயக்கம் வழங்கும் குழந்தை சண்முகலிங்கத்தின் இயக்கத்திலான "பஞ்சவர்ண நரியார்" தே.தேவானந் இயக்கத்திலான "மரணச் சான்றிதழ்" மற்றும் "வேடதாரிகள்" ஆகிய நாடகங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. பிரவேசம் இலவசம்.

(C-2303) **கலைமன்ற நிர்வாகத்தினர்**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்

### இடைநிறுத்தப்பட்ட விரிவுரைகள் மீள ஆரம்பம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட 3-ம், 4-ம், வருட மாணவர்களுக்கான இடை நிறுத்தி வைக்கப்பட்ட விரிவுரைகள் யாவும் மீண்டும் எதிர்வரும் 28.09.2015 திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. மேற்படி மாணவர்கள் அனைவரையும் காலை 8.30 மணிக்கு கைலாச பதி கலையரங்கில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

விடுதி வசதிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் 26.09.2015 சனிக்கிழமையில் இருந்து விடுதிகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

பதிவாளர்,
25.09.2015

(C-2298)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AF மட்டுமே அங்கி கரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS(DELF, DALF) ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழி பெயர்புகள்.யாழ்,வன்னி,மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA... செல்கிறார் கள். யாரும் படிக்கலாம்.

இன்று ஆரம்பம். 2.10.15 வரை பதிவுசெய்யலாம்..

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் கச்சேரி பக்கம் → புகையிரதகடவை → AF (வெள்ளைமாடிக்கட்டடம்)

குறிப்பு : யாழில் பல பொய்களை கூறிமோசடிசெய்வோரிடம் ஏமாந்தபலர் எமது AFக்குவந்துள்ள னர்.நம்பிக்கை, கற்றல் கற்பித்தல் தரம், சர்வதேச அங்கீகாரம் உள்ள எமது நிறுவனத்தை தெரிவுசெய்யுங்கள். வெளிநாடு ஒன்றில் இருக்கும்போதுபிரெஞ் பேசதேவையான ஆற்றலை வழங்கு கிறோம்.021 222 8093

(C-1893)

ஓம் விராட் விஸ்வம் பிரம்மனே நமஹ

### அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்

**திருவண்ணை கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.**

## கேதார கௌரி விரதம்

| | | |
|---|---|---|
| விரதாரம்பம் | : | 22.10.2015 வியாழக்கிழமை |
| விரதபூர்த்தி | : | 11.11.2015 புதன்கிழமை |

**கௌரிவிரதம் அனுஷ்டிக்கும் அடியார்களே!**

எதிர்வரும் பூரணைதினமான 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை முதல் தங்கள் பெயர் நட்சத்திரங்களை பதிவு செய்து கொள்ளும் வண்ணமும், விரதாரம்பம் முதல் தேவஸ்தானத்தில் நடைபெற விருக்கும் சிவலிங்க பூஜையில் பக்தி சிரத்தையுடன் கலந்து கொண்டு சிவசக்தி ஐக்கிய சொரூபமாகிய அம்பிகையின் கிருபா கடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

(1984) **தேவஸ்தான ஆதீன கர்த்தாக்கள்**

## விற்பனைக்கு

QB XXXX எனும் இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள ஆட்டோ விற்பனைக் குண்டு.

**தொடர்பு : 077 436 6704** (C-2301)

## வாடகைக்கு

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையில் 554 A, 554 B, 554 C எனும் இலக்க முடையகடைகள் வாடகைக்கு விடப்படும். **விபரங்களுக்கு நேரில் வரவும்**

**தொடர்புகளுக்கு :- ஜ.தயாளன்**
**இல.556, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** (1892)

## தேவை

ஈரல் மாற்றுச் சிகிச்சைக்கு (Liver transplantation)ஈரல் தேவை ப்படுகிறது. வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-2269)

**தொடர்புகளுக்கு**
**077 8792384**

தரம் 4 மாணவர்களுக்கான

**புலமைப்பரிசில் - 2016**
**மாதிரி வினாத்தாள்**

### புலமைச் சிட்டு - 1 ல்

**அதிகூடிய புள்ளி பெற்றோர்**

- ச.ஹரிஸ்ராகவி - 174 (யா/ஆனைப்பந்தி மெ.வித்)
- மு.நிலாமுகை - 164 (யா/சுண்டிக்குளி மகளிர் பாடசாலை)
- கோ.யதுவர்ஷி - 162 (யா/புனித ஜோன் பொஸ்கோ)

(C-2300)

அடுத்த பரீட்சை - 27.09.2015

- ஞாயிறுதோறும் பரீட்சை.
- பரீட்சை விரும்பிய நேரங்களில்.
- வெளி மாணவர்களும் பரீட்சை எடுக்க முடியும்.

தொடர்பு : புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
T.P : 0774598440

# இலங்கையர்களுக்கு உரித்தான நீதிமுறையே செயற்படுத்தப்படும்

(கொழும்பு)

**சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் இலங்கையர்களுக்கு உரித்தான நீதிமுறை செயற்படுத்தப்படும் என அமெரிக்காவினால் இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தில் நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்ட யோசனை தொடர்பில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.**

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

உண்மை, நீதி மற்றும் பரிகாரத்திற்கான முக்கியத்துவத்தின் பகிரப்பட்ட அங்கீகாரத்தின் மைல்கல்லை பிரதிநிதித்துவம் செய்யும், நல்லிணக்கத்தை முன்னிறுத்தல் மற்றும் அனைத்து இலங்கையர்களுக்கும் நீடித்த சமாதானம் மற்றும் அபவிருத்தியை உறுதிசெய்வதில் மீள நிகழாதிருப்பதற்கான உத்தரவாதத்தை வழங்கும் பிரேரணை ஒன்றை அமெரிக்காவும் இலங்கையும் எமது பங்காளரகளும் ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பித்தோம்.

இணை அனுசரணையாளர்களாக இணைந்து கொள்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் தீர்மானமானது, பிரேரணையில் குறிப்பிடப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான வழியை ஏற்படுத்துகின்றது.

இலங்கையை சமாதானப் பாதையில் இட்டுச் செல்வதற்காக கடந்த வருடத்தில் இலங்கை மக்கள் இருமுறை வாக்களித்துள்ளதுடன், இலங்கையை நீண்டகாலம் வலுவிழக்கச் செய்து கொண்டிருந்த பிளவுபடுத்தல் அணுகுமுறையிலிருந்தும் நாட்டினை மாற்றியுள்ளனர். ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்கும், அனைத்து இலங்கையர்களதும் சிவில் சுதந்திரத்தை மீட்டெடுப்பதற்கும் உற்சாகமிகு நடவடிக்கைகளை எடுத்து வரும் இலங்கைக்கான எமது ஆதரவை இந்தப் பிரேரணையானது வெளிப்படுத்துவதுடன், மீள நிகழாதிருப்பதனை உறுதி செய்வதற்கு கடந்த காலத்தின் வலிமிகு அனுபவங்களையும் அடையாளப்படுத்துகின்றது.

இலங்கையர்களுக்கு உரித்தான மற்றும் சர்வதேச சமூகத்தின் ஆதரவு மற்றும் ஈடுபாட்டுடனான நம்பகமான இடைக்கால நீதிச் செயற்பாட்டின் ஊடான முக்கியமான படிநிலையை இந்த பிரேரணை குறிக்கின்றது. காணாமற் போனவர்களின் குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்கள் குறித்த பதில்களை அறிந்து கொள்வதற்கு இந்தப் பிரேரணை உதவும். உண்மை, நீதி, பரிகாரத்தை வழங்குவதற்கான வழிகளை குறிப்பதுடன், கௌரவம் மற்றும் தொழிற்றுறை நிபுணத்துவத்துடன் நடந்துகொண்ட இராணுவத்தில் உள்ளவர்கள் உள்ளடங்கலாக, அனைவரினதும் நற்பெயரை பாதுகாக்கும் அதேவேளை, இலங்கை மக்கள் தகுதியுடையதாயிருக்கும் மீளநிகழாதிருப்பதற்கான உத்தரவாதத்தையும் அளிக்கின்றது.

இந்த வருடத்தின் முற்பகுதியில் கொழும்பில் வைத்து நான் உறுதியளித்ததைப் போல, இந்த முக்கியமான, ஆனால் சவால் நிறைந்த படிநிலைகளை முன்னெடுக்கும் இலங்கையுடன் இணைந்து செல்லும் எமது உறுதிப்பாட்டில் அமெரிக்கா தொடர்ந்தும் திடமாக இருக்கும் என அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## கலப்பு நீதிமன்றத்தின் மூலமே தமிழ் மக்களுக்கு நீதிகிடைக்கும்

### வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை



போரினால் பாதிப்படைந்த தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமாயிருந்தால் ஆணையாளரால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு கலப்பு நீதிமன்றத்தின் மூலமே சாத்தியமாகும் என வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தற்போது அமெரிக்காவின் யோசனைக்கு அமைய கலப்பு நீதிமன்றத்துக்கு பதிலாக சர்வதேச ஒத்துழைப்புடன் கூடிய உள்ளக பொறிமுறையினை வலியுறுத்தியுள்ளனர்.

உள்ளக விசாரணை எவ்வளவு இதயசுத்தியுடன் நடைபெறும் என்பது இலங்கையில் தமிழ் மக்களின் விவகாரங்களில் கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் சான்று பகிரும். இது ஓர் கண்துடைப்பு நாடகமாக அமையுமே தவிர தமிழ் மக்களுக்கு நியாயத்தையும் பெற்றுக் கொடுக்காது.

நடக்கப் போகின்ற விசாரணை ஓர் குற்றவியல் விசாரணையாகும். இதில் வழக்குத் தொடுநரிலிருந்து விசாரிப்பவர்கள் வரை இதயசுத்தியுடன் நடப்பார்களா என்பது எமது கடந்தகால வரலாற்றிலிருந்து எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

ஆதலால் தமிழ்த் தலைமைகள் சர்வதேச நீதிபதிகள், வழக்குத் தொடுப்பவர்கள், சட்டத்தரணிகள் மற்றும் விசாரணையாளர்களை உள்ளடக்கிய ஒரு கலப்பு நீதிமன்றத்தை ஏற்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இல்லையேல் தமிழ் மக்களுக்கு நீதிகிடைப்பது கேள்விக் குறியாகவே காணப்படுமென்றும் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் வடமாகாண ரீதியாக நடத்தும் "வடமாகாண வல்லவன்" எனும் மாபெரும் உதைபந்தாட்ட தொடர் இறுதிப்போட்டி இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. கழுகுகள் விளையாட்டுக்கழகத்தின் தலைவர் லயன் சுதீஸ் தலைவராகப் பங்கேற்கும் இந்தப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஏ. நடராஜன், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் அநுர டீ சில்வா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் லலித் ஏ.ஜெயசிங்க, யாழ்ப்பாண கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த, வடக்கு கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் ஏ.வி.பீ.லி, காணி மேலதிக அரசாங்க அதிபர் சு.முரளிதரன், லங்வேர்ஸ் கோணர் நிர்வாக இயக்குநரும் தலைவருமான இ.ஜெகதீஸ்வரன், தினச் செய்தி பிரதம ஆசிரியர் கே.ரி.இராஜசிங்கம், பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்கத்தின் தலைவர் ம.ர. நவநீதமணி மற்றும் சங்கத்தின் செயலாளர் அ. அருளானந்த சோதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## கடுவலை நீதிமன்ற துப்பாக்கிப் பிரயோகம்; சிறைச்சாலையில் திட்டமிடப்பட்டதாக தகவல்

கடுவலை நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவம் சிறைச்சாலைக்குள்ளிருந்து திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக கொழும்பு விளக்கமறியல் சிறையில் இருந்த சமயங் எனப்படும் படேபொல அருண படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதன்போது ஏற்பட்ட பதற்றத்தைப் பயன்படுத்தி இரண்டு கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் துப்பாக்கிச் சம்பவத்தின் சூத்திரதாரி நேற்றுக்காலை தொம்பே பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின் சம்பவத்துடன் தொடர்புடைய கைத்துப்பாக்கியும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அறிமுகமற்ற நபர் ஒருவர் ஒரு வாரத்திற்கு முன்னர் அதனை தன்னிடம் கையளித்ததாக சந்தேக நபர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே சிறைச்சாலை வளாகத்தினுள் அங்கொட லொக்கா மற்றும் சமயங் குழுவினரிடையே ஏற்பட்டுள்ள மோதல் போக்கு காரணமாகவே குறித்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கான திட்டமிடல்கள் மற்றும் வழிகாட்டுதல் அனைத்தும் சிறைச்சாலைக்குள்ளிருந்தே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-7)

## யாழில் 27 சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம்!

யாழ்.மாவட்டத்தில் கடந்த 6 மாதங்களில் 27 சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாக யாழ். மாவட்ட புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் கடந்த 3 வருடங்களில் 167 சிறுவர் மீது பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் கடந்த 2013 ஆம் ஆண்டு 71 துஷ்பிரயோக சம்பவங்களும் 2014 ஆம் ஆண்டு 69 துஷ்பிரயோக சம்பவங்களும் 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை 27 துஷ்பிரயோக சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் இளவயது திருமணம் மற்றும் இளவயது கர்ப்பம் என்பன கடந்த 2013 ஆம் ஆண்டு 104 சம்பவங்களும் 2014 ஆம் ஆண்டு 83 சம்பவங்களும் 2015 ஆம் ஆண்டு 29 சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் யாழ். மாவட்டத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு ஆயிரத்து 17 சிறுவர்களும் 2014 ஆம் ஆண்டு ஆயிரத்து 71 சிறுவர்களும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையான தரவின்படி ஆயிரத்து 156 சிறுவர்களும் சிறுவர் இல்லங்களில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இத்தொகை கடந்த ஆண்டுகளை விட அதிகரித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-9)

## யாழ். இளைஞன் கைது

போலிகடவுச்சீட்டை பயன்படுத்தி பிரித்தானியாவுக்கு செல்ல முயற்சித்த இளைஞன் ஒருவன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 23 வயதான நபர் என குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் நேற்று நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விமான நிலைய பிரிவினர் தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ-7)

## சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு விசாரணைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும்

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் நீண்டகால தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி கலாநிதி நடாஷா பாலேந்திரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஒரு நீண்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொட்டதெனியாவை 5 வயது சிறுமி கொலைச் சம்பவம் மற்றும் கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கவலை வெளியிடுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை தடுப்பதற்கு, சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான வழக்குகள் விரைவாக விசாரணை செய்யப்பட்டு தற்போது காணப்படக் கூடிய தண்டனைகளையாவது உடனடியாக குற்றவாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## பட்மிண்டன் தரவரிசை சாய்னா தொடர்ந்து முதலிடம்



பட்மிண்டன் வீர, வீராங்கனைகளின் புதிய தரவரிசைப் பட்டியலை சர்வதேச பட்மிண்டன் சங்கம் நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். இந்திய வீராங்கனை பி.வி.சிந்து 13ஆவது இடத்தில் உள்ளார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய வீரர்கள் ஸ்ரீகாந்த் 5ஆவது இடத்தையும், காஷ்யப் 8ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.

தென் கொரியா ஓபன் போட்டியில் இறுதி ஆட்டத்தில் தோல்வி கண்ட இந்திய வீரர் அஜய் ஜெயராம் 7 இடங்கள் முன்னேற்றம் கண்டு 25ஆவது இடத்தை பெற்றுள்ளார். இந்திய வீரர் பிரனாய் ஒரு இடம் பின்தங்கி 16ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

பெண்கள் இரட்டையர் பிரிவில இந்தியாவின் ஜுவாலா கட்டா - அஸ்வினி பொன்னப்பா ஜோடி 11ஆவது இடத்தை தொடருகிறது. (க)

## சாய்னா, ரெய்னா, தோனி ஒன்றாக சினிமா பார்த்தனர்



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் தோனி, ரெய்னா, ஹர்பஜன் சிங் ஆகியோர் நேற்று முன்தினம் ஒன்றாக புதிய படத்தை பார்த்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் பட்மிண்டன் வீராங்கனை சாய்னா நேவாலுடன் சேர்ந்து பெங்களூரில் உள்ள ஒரு ஸ்ரூடியோவில் கபில ஷர்மாவின் கிஸ் கிஸ்கோ பியார் கரூன் (Kis Kisko Pyaar Karoon) என்ற திரைபடத்தை சிறப்பு காட்சி பார்த்தனர்.

மிகவும் ரசித்து பார்த்ததாக சாய்னா நேவால் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவு செய்தார். (க)

## வட மாகாண வல்லவன் யார்? சென்.மேரிஸ் - மன்னார் கில்லரி இன்று இரவு பனிப் போர்





## பார்சிலோனாவுக்கு அதிர்ச்சி கொடுத்த செல்டா விகோ



ஸ்பெயினில் நடைபெறும் லாலிகா கழக கால்பந்து தொடர் உலக அரங்கில் மிகவும் பிரபலமானதாகும். 85-வது லாலிகா தொடர் கடந்த மாதம் தொடங்கியது.

அடுத்த ஆண்டு மே 15ஆம் திகதி வரை நடைபெறும் இந்த போட்டிகளில் 20 அணிகள் பங்கேற்று மோதுகின்றன. இதில் 23 முறை சம்பியனான பார்சிலோனா அணி கடந்த புதன்கிழமை நடைபெற்ற செல்டா விகோ கழகத்துக்கு எதிரான ஆட்டத்தில் அதிர்ச்சி தோல்வியை தழுவியது.

இத்தனைக்கும் லியோனல் மெஸ்சி, நெய்மார், லூயிஸ் சுவாரஸ் போன்ற உலக கால்பந்து நட்சத்திரங்கள் பார்சிலோனா அணியில் அணிவகுத்து நின்றும், செல்டா கழகத்தை அசைக்க முடியவில்லை.

இந்த ஆட்டத்தில் நடப்பு சம்பியன் பார்சிலோனாவின் தடுப்பு ஆட்டம் பலவீனமாக காணப்பட்டது. இதை சாதகமாக பயன்படுத்திக் கொண்ட செல்டா விகோ அணியினர் அடுத்தடுத்து கோல்களை திணித்தனர்.

அகுடோ நோலிட்டா (26ஆவது நிமிடம்), லாகோ அஸ்பாஸ் (30, 56ஆவது நிமிடம்), ஜோன் கிடெட்டி (83ஆவது நிமிடம்) ஆகியோர் செல்டா அணியில் கோல் போட்டு அசத்தினர்.

பார்சிலோனா தரப்பில் ஆறுதல் அளிக்கும் வகையில் 80ஆவது நிமிடத்தில் நெய்மார் கோல் திருப்பினார். முடிவில் செல்டா விகோ 4:1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனோவை பந்தாடியது.

கடந்த பெப்ரவரி மாதத்துக்கு பிறகு பார்சிலோனா சந்தித்த முதல் தோல்வி இதுவாகும்.

இந்த தோல்வியால் புள்ளி பட்டியலில் பார்சிலோனா 5ஆவது இடத்துக்கு (4 வெற்றி, ஒரு தோல்வியுடன் 12 புள்ளி) சரிந்துள்ளது.

கிறிஸ்டியானோ ரொனால்டா தலைமையிலான ரியல் மாட்ரிட் கழகம் (4 வெற்றி, ஒரு சமனிலையுடன் 13 புள்ளி) முதலிடத்திலும், செல்டா கிளப் (13 புள்ளி) 2ஆவது இடத்திலும் உள்ளன. (க)

## குவாங்சோ ஓபன் டெனிஸ் இறுதிப் போட்டியில் சானியா ஜோடி



சீனாவில் குவாங்சோ ஓபன் டெனிஸ் போட்டி நடந்து வருகின்றது. இதன் பெண்கள் இரட்டையர் பிரிவில் 'நம்பர் 1' ஜோடியான இந்தியாவின் சானியா மிர்சா - ஹிங்கிஸ் (சுவிட்சர்லாந்து) ஜோடி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

அரை இறுதியில் சானியா ஜோடி ரெபேக்கா பீட்டர்சன் (சுவிட்சர்லாந்து) - ஜுலியா (இஸ்ரேல்) ஜோடியை எதிர்கொண்டது. இதில் 6:3, 6:4 என்ற நேர்செட் கணக்கில் வெற்றி பெற்று சானியா ஜோடி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

முதல் செட்டில் எளிதாக வீழ்ந்த ரெபேக்கா- ஜுலியா ஜோடி, 2ஆவது செட்டில் சானியா ஜோடிக்கு கடும் நெருக்கடி கொடுத்தது. இருந்தாலும் ஐந்து முறை டபுள் போல்ட்ஸ் செய்ததால் செட்டை இழந்து நேர் செட்டில் தோல்வியடைந்தது.

இந்த வெற்றியைப் பெற சானியா - ஹிங்கிஸ் ஜோடிக்கு ஒரு மணி நேரம் 12 நிமிடங்கள் மட்டுமே தேவைப்பட்டது. (க)

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் சிறப்பாக விளையாடுவோம் - ராயுடு

தென்னாபிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப்பயணம்செய்து மூன்று 20 ஓவர் போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகள், 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதற்கான இந்திய அணி பயிற்சி முகாம் பெங்களூரில் நடந்து வருகிறது. வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். ஒருநாள் போட்டி அணியில் இடம் பெற்றுள்ள அம்பதி ராயுடு கூறியதாவது:

கடந்த 3 நாட்களாக பயிற்சி முகாமில் சூழ்நிலை சிறப்பாக இருந்தது. தற்போது எங்களது திறனை மேம்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறோம்.

பயிற்சியாளர்கள் வழங்கிய ஆலோசனைகளை பெற்று பயிற்சி செய்து வருகிறோம். தென்னாபிரிக்கா மிக வலிமையான அணி. அவர்களுக்கு எதிரான சிறப்பாக தயாராக வேண்டும். இதற்காக தீவிரமாக பயிற்சி செய்து தயாராகிறோம். இத்தொடரில் சிறப்பாக விளையாடுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார். (க)

# ஐ.நா.அறிக்கையின் உள்ளடக்கத்தை நிராகரிக்கும் லங்கா சமசமாஜக்கட்சி

(கொழும்பு)—

**ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் வெளியிட்டுள்ள இலங்கை சம்பந்தமான அறிக்கை நிராகரிப்பதாக லங்கா சமசமாஜக் கட்சியின் செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் அறிக்கையை தயார் செய்த விதம் மற்றும் அதில் உள்ளடங்கியுள்ள விடயங்களை நிராகரிப்பதாக விதாரண வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லிணக்கம், இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தை ஏற்படுத்த தற்போதைய



அரசாங்கம் மேற்கொள்ளும் நேர்மையான அனைத்து முயற்சிகளுக்கும் லங்கா சமசமாஜக் கட்சி ஒத்துழைப்பு வழுங்கும். எனினும் எந்த வெளிநாட்டு தலையீடுகளுக்கும் அனுமதி வழங்கக் கூடாது.

குற்றம் சுமத்தப்படும் போர்க் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியது இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்பதுடன் அதனை நாட்டில் உள்ள பொறிமுறைகளுக்கு அமைய முன்னெடுக்க முடியும்.

ஏதேனும் வெளிநாட்டு உதவிகள் தேவைப்படுமாயின் அது இலங்கையின் விருப்பத்திற்கு அமைய அதனை பெற்றுக்கொள்ள முடியும். ஐ.நா மனித உரிமை ஆணையகம் வெளிநாட்டு தலையீடு நோக்கி தள்ள முயற்சித்துள்ளது.

இதனால், அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களையும் அறிக்கையை ஆணையாளரின் அலுவலகம் தயார் செய்த விதத்தையும் லங்கா சமசமாஜக் கட்சி நிராகரிப்பதாகவும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மேலும் தெரிவித்தார். (இ-7)

SRI AMBAAL JEWELLERS
ஸ்ரீ அம்பாள் ஜுவலர்ஸ்
22 கரட் நகைவியாபரம்
கோவில் பாவனைப்பொருட்கள் விற்பனையாளர்கள்
ஸ்ரீ சக்தி மாடம்
Sri Sakkthy Madam
நெல்லியடி
தொ.பே.இ.021 320 5743
(இ-2295)


## கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளரின் (உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட நிறுவனத்தின்
## வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக தெரிவும்

மேற்படி வருடாந்த பொதுக் கூட்டம் சங்கத்தின் தலைவர் தங்கராசா ஜெகதீஸ்வரன் தலைமையில் கிளிநொச்சி கரைச்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பண்பாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

தகவல்:செயலாளர்
க.யமுனாதரன்
கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளரின் (உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட நிறுவனம்
(சி-2291)

# மரண அறிவித்தல்

## இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரன் (ஆசை)



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி ஜெகதீஸ்வரன் (ஆசை) அவர்கள் 22-09-2015 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற இரத்தினசபாபதி (அப்பாத்துரை) மனோன்மணி (பட்டு) தம்பதியினரின் அன்பு மகனும்,காலஞ்சென்ற கந்தசாமித்துரை பிள்ளையம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி (வசந்தி) யின் அன்புக் கணவரும் சுத்தானந்தன் (ஸ்ரீ), சந்திரலீலா, சந்திரமோகனா, சத்தியானந்தன் (ராசன்) சந்திரகாந்தா, கிருபானந்தன் (ஈசன்-பிரான்ஸ்) காலஞ்சென்ற சந்திரவசந்தியின் அன்புச் சகோதரனும்,சாவித்திரி,செல்வராஜா, பத்மநாதன், தர்மலதா, கோபிநாதன்; குமுதா, புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம், விஜயலக்சுமி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், உமாசுதன், கனேசுதன்(அவுஸ்திரேலியா), பிரமிளா (U.K), கஜிந்தா(U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரதீபா, ரதிவதனா (அவுஸ்ரேலியா) மதனசூரியா(U.K), பவதீசன்(U.K)ஆகியோரின் அன்பு மாமனாரும், நிஷோத்ரா, யாதவி, டஸ்வின், ரேனுஜன், கிஷாரா, ஆரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிச்சடங்கு அவரின் இல்லத்தில் 27-09-2015 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று ஈமக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(1871)

கோண்டாவில் மேற்கு,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 205 3142
077 981 4312

தகவல் :
குடும்பத்தினர்.

# ராசி பலன்

26.09.2015
(புரட்டாதி 09, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 1.57 மணிவரை
சதயம் முன்னிரவு 11.21 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
நடேசரபிஷேகம், புரட்டாதிச்சனி
வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| சந் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூசம், ஆயிலியம்<br>மேல்நோக்கு நாள் | | சுக் |
| | | | குரு<br>செவ்<br>புத |
| | | சனி | ராகு<br>சூரி |

**மீனம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேகநலன்கள் பாதிக்கப்படலாம், போசன சுகமுண்டு.

**மேடம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், போசன சுகமுண்டு.

**இடபம்** செய்தொழில் மேன்மையுண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், ஆரோக்கியமான நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், அரசு வழியில் சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கும்பம்** உடல் நலனில் கவனம் தேவை மறக்க முடியாத சம்பவமொன்று இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள் சிந்தனை மிகுதியான நாள்.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், பிரயாண பயமுண்டு.

**மகரம்** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவு கள் நனவாகலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், சந்தித்த நண்பர்களால் சந்தோசங்கள் கிடைக்கலாம், தொலைபேசி வழித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு** மனதில், புதிய சிந்தனைகள் தோன்றும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயரும், பாகப் பிரி வினைகள் சுமுகமாக முடியும்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**துலாம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரலாம்.

**கன்னி** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பகைவர்கள் உங்களை விட்டு விலகுவர், காரிய அனுகூலமுண்டு, தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், உடல் நலன் சீராகும்.

# விற்பனைக் கண்காட்சி இன்றும் நாளையும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் நடத்தும் விற்பனைக் கண்காட்சி இன்றும் நாளையும் காலை 9மணி தொடக்கம் மாலை 6மணிவரை நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைவராகப் பங்கேற்கும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட செயலக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களக் கணக்காளர் திருமதி. யூட்வோல்டன் மஞ்சுளா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் உதவிப் பிரதேச செயலர் திருமதி.மதியழகன் சுபாஜினி, நல்லூர் பிரதேச செயலக கணக்காளர் திருமதி ரமணன் கலைச்செல்வி, நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை அதிபர் ரி.மனோகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது மாபெரும் மலிவு விற்பனையில் வீட்டுக்குதேவையான பல வகையான பொருட்களை விலைக் கழிவுடன் பெற்றுக் கொள்ள முடியும்.

இதில் குறிப்பாக உணவுப் பொருட்கள், ஆடை அணிகள், மரக்கறிகள் மற்றும் பழவகைகள், பயன்தரு மரக்கன்றுகள் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், பனம் பொருட்கள் மற்றும் சிற்றூண்டி, குளிர்பான வகைகள் என்பவற்றை பெற்றுக்கொள்ளமுடியும். (இ-5)

# பொதுச்சுகாதார பரிசோதகர்களுடன் இராணுவத்தினர் வீட்டுக்குச் செல்வது குறித்து பொதுமக்கள் கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

**வீடுகளில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் குறித்து பரிசோதனை மேற்கொள்ளும் சுகாதார பரிசோதகர்களுடன் இராணுவத்தினர் செல்வது தொடர்பில் பொதுமக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.**

எனினும் சுகாதார பரிசோதகர்களுடன் இராணுவத்தினர் செல்வதற்கு தாம் அனுமதியளிக்கவில்லை என யாழ். மாநகர சபையின் ஆணையாளர் வாகீசன் தெரிவித்தார்.

அண்மைய நாட்களாக யாழ். மாநகர சபைக்குட்பட்ட இடங்களில் டெங்கு நுளம்பு அதிகரிப்பு குறித்து சுகாதார பரிசோதகர்களினால்சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.வீடுகள், கடைகள் மற்றும் காணிகள் ஆகியவற்றுக்கு நேரில் செல்கின்ற இவர்கள் அங்கு டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் குறித்து பரிசோதனை மேற்கொண்டு வருகின்றனர்.இவ்வாறு பரிசோதனைகளையடுத்து அங்கு டெங்கு பரவும் இடம் இனங்காணப்பட்டால் அவர்கள் மீதும் வழக்குத்தொடரப்பட்டும்வருகின்றது.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளில் பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினரோடும் இராணுவத்தினரும் இணைந்து செல்கின்றனர்.

சிவில் நடவடிக்கைகளில் இராணுவ பிரசன்னம் குறித்து பொதுமக்கள் மத்தியில் காணப்படும் விசனம் குறித்து யாழ்.மாநகரசபையின்ஆணையாளரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் குறித்து யாழ்.மாநகர சபையின் சுகாதார பிரிவினரால் யாழ்.மாநகரசபைக்குட்பட்ட இடங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆறுகால்மடம், நல்லூர், வண்ணார்பண்ணை, யாழ். நகர் புறநகர்ப்பகுதி எனப் பல இடங்களில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு டெங்கு நுளம்பு பரவும் வகையில் காணியை வைத்திருந்தவர்கள் மீது வழக்கும் தொடரப்பட்டு வருகின்றது.

எனினும் இந்த நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுவது குறித்து எமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை அவர்களது வரவேட்டிலும் இராணுவத்தினர் செல்வது குறித்து தெரியப்படுத்தவில்லை இது குறித்து உரிய அதிகாரிகளுடன் பேசி தெளிவுபடுத்துவதாக ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# 30வருடத்துக்குரிய நீண்டகாலத் திட்டம்

## கல்வி அமைச்சு விசேட நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

கல்வித்துறையில் புதிய இலத்திரனியல் சாதனங்களை உள்ளடக்கி எதிர்வரும் 30 வருடத்துக்குரிய நீண்ட காலத் திட்டத்தை செயற்படுத்தவுள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் உரையாற்றுகையில்,

கல்வித்துறையில் பாட விதானங்கள் பல புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாக இருக்கின்றது.

ஏனென்றால் உலகத்துடன் எமது கல்வி முறையை ஒப்பீட்டு நோக்கும் பொழுது தொழில்நுட்ப ரீதியிலும் இலத்திரனியல் சாதனங்களை உள்ளடக்கி ஏனைய நாடுகளில் கல்வி வளர்ச்சி அடைந்துள்ளது.

அந்த வகையில் ஏனைய நாடுகளுடன் ஒப்பீட்டளவில் எமது கல்வித்துறையை வளர்க்கக்கூடிய அனைத்து செயற்பாடுகளையும் எமது அமைச்சின் ஊடாக மேற்கொள்ளவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பௌர்ணமி விழா

(கரணவாய்)

கரணவாய் இளங்கோ சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு தலைவர் கு.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு வள்ளுவர் சனசமூக நிலையத்தின் தலைவர் மு.மகேந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.இதன்போது கவிதை, கட்டுரை,பேச்சு போன்ற போட்டிகளும் சனசமூக நிலையத்தால் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகளுக்கு கரணவாய் இளங்கோ சனசமூக நிலையத்திற்குட்பட்ட மாணவர்கள் கலந்து கொள்ளமுடியும் என சனசமூக நிலையம் அறிவித்துள்ளது.(இ-5-60)

# அபிஷேக ஆராதனையும் பிரார்த்தனை வழிபாடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனையும் பிரார்த்தனைவழிபாடும் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.

பன்னெடுங்காலமாக இந்நாட்டில் இடம்பெற்றுவரும் இனமோதல்களால் சொல்லொணாத் துன்பங்களை தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்றனர். பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக பெண்கள் கணவனை இழந்தும் பல குழந்தைகள் அநாதைகளாக்கப்பட்டும் அங்கவீனர்களாக்கப்பட்டும் உள்ளனர்.

பல கோடிக்கணக்கான சொத்துக்கள் அழித்து நாசமாக்கப்பட்டுள்ளதோடு மக்கள்தத்தமது வாழ்விடங்களை விட்டும் சொத்துக்களை இழந்தும் வாழ்கின்றனர்.

எதுவித நியாயமுமின்றி தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே நீண்ட நாட்களாக தீர்க்கப்படாத தமிழ்மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவும் தமிழ் அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்ய வேண்டியும் மேற்படி பிரார்த்தனை வழிபாடு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வடக்கு விவசாய அமைச்சரின் நன்கொடை நிதியில் இருந்து ரூபா 3 மில்லியன் பெறுமதியான பொருட்கள் வழங்கி வைப்பு



வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் 2015 ஆம் ஆண்டுக்குரிய பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து ரூபா 3 மில்லியன் பெறுமதியான பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இப்பொருட்களை வழங்கி வைக்கும் நிகழ்ச்சி விவசாய அமைச்சின் அலுவலகத்தில்கடந்த புதன்கிழமை நடைபெற்ற போது அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு உரிய பயனாளிகளுக்குப் பொருட்களை வழங்கி வைத்துள்ளார்.

பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதி பொருளாதார ரீதியாகப் பின்தங்கியவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல், சமூக அமைப்புகளை வலுப்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற நிதி ஒதுக்கீடு ஆகும். இவற்றின் அடிப்படையில், அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலைகள், முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள் போன்றவற்றுக்குக் கணனிகள், ஒலிபெருக்கி சாதனம், தொலைக்காட்சிப் பெட்டி, சங்கீத உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள், பாதணிகள், தளபாடங்கள், நூல்கள் மற்றும் சீமெந்து போன்ற பொருட்களும் தனிப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவியாக தண்ணீர்ப்பம்பி, மீன்பிடி உபகரணங்கள், துவிச்சக்கரவண்டிகள், தையல் இயந்திரங்கள், மரவேலை இயந்திரம், சமையல் தொழில் உபகரணங்கள் ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன.

வாழ்வாதார உதவியாக கோழிவளர்ப்பு, நல்லின பசு மற்றும் ஆடு வளர்ப்பில் ஈடுபடுவதற்கான உதவி கோரிய விண்ணப்பங்களில் இருந்து உரிய பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கான உதவிகள் விரைவில் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருட்களை வழங்கி வைக்கும் நிகழ்ச்சியில் வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் கலாநிதி க.சர்வேஸ்வரன், பிரதம செயலாளர் அ.பத்திநாதன், விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் சி.வசீகரன் ஆகியோரும் கலந்து கொண்டு பயனாளிகளுக்குப் பொருட்களை வழங்கி வைத்துள்ளனர். (இ-7)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததான முகாம் இன்றையதினம் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்த இரத்ததான முகாமில் கல்லூரியின் பழைய மாணவர் மட்டுமன்றி குருதிக் கொடை செய்வதற்கு ஆர்வமுடைய அனைவரையும் வருகை தந்து குருதிக் கொடை செய்யுமாறு பழைய மாணவர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.(இ-9)




# தென்மராட்சி கலைமன்றத்தின் நாடக விழா இன்று மாலை

(யாழ்ப்பாணம்)


தென்மராட்சி கலைமன்றம் வழங்கும் நாடக விழா-2015 இன்று சனிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை சாவகச்சேரி சிவன்கோவில் வீதியில் உள்ள தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது குழந்தை ம.சண்முகலிங்கம் இயக்கத்திலான பஞ்சவர்ண நரியார் நாடகமும், தே.தேவானந் இயக்கத்திலான மண்சுமந்த சான்றிதழ் மற்றும் வேடதாரிகள் போன்ற நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.

முற்றிலும் இலவச அனுமதியுடன் நடைபெறவுள்ள இந்நாடகத்திருவிழாவிற்கு அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி கலைமன்றம் அறிவித்துள்ளது. (இ-5-29)

# வல்லிபுரத்தாழ்வார் இன்று தேரிலே ஆரோகணிக்கிறார்!

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளாகிய ஸ்ரீ மகா விஷ்ணு மூர்த்தியானவர் தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களை எல்லாம் போக்கும் நோக்கில் பருத்தித்துறை புலோலியிலே வல்லிபுரத்தாழ்வாராக எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். அந்த வல்லிபுரத்திலே இன்று தேர்த் திருவிழா.



வணங்குவோருக்கு வரம் அளிக்கும் ஸ்ரீ வல்லிபுரத்தாழ்வார் இன்று சித்திரத் தேரிலே எழுந்தருளி ஆரோகணிக்கிறார். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தலைவனாக மிளிரும் ஸ்ரீ மகா விஷ்ணு இன்று சர்க்கர வடிவில்வழிபடும்அடியவர்குறை தீர்க்கும் கோமானாக அழகிய தேரிலே ஆரோகணித்து அருள் பொழியும் ஆனந்த கோலாகல அற்புத திருக்காட்சியை இன்று நாம் வல்லிபுரத்திலே காணலாம்.

காத்தற் கடவுளாக விளங்கி, கை தொழுவார்க்கருளும்சர்க்கரமூர்த்தியாக இன்று தேரேறி வருகின்ற தேவாதி தேவனான மகா விஷ்ணு மூர்த்தி அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிக்கும் வகையில் வீரத்தோடு புறப்படுகின்றார்.

அவருடைய இன்றைய அருட்காட்சியைக் காண்பதற்கு யாழ்.குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் அடியவர் கூட்டம் இங்கே படையெடுக்கும்.

ஊர் கூடி தேரிழுக்கும் இன்றைய தேர்த்திருவிழா ஓர் அருமையான பக்தி பூர்வமான நிகழ்வாகும். “ கோவிந்தா கோவிந்தா” என்று கோஷம் எழுப்பிய வண்ணம் தேர் வடம் பிடிப்போர் தமக்கு சொர்க்கத்திலே ஓர் இடம் பிடிக்க விரும்பி இன்றைய தேர் விழாவில் பக்தியுடன் கலந்து கொள்வர்.

ஆதலால் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் சக்கர வடிவிலான இன்றைய தேர்த்திருவிழாவை கண்டுதரிசிக்க அன்புள்ளம் கொண்ட அனைவரும் அன்புடன் அழைக்கப் படுகின்றனர்.

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்.

# நீடித்த நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு சிறந்த வாய்ப்பு

## த ஹிந்து சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்) ——————

**ஐக்கிய நாடுகள் சபையின் மனித வுரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையின் பரிந்துரைகளை ஏற்றுச் செயற்படுத்துவதன் மூலம் நீடித்த சமரசம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசிற்கு வாய்ப்பொன்று ஏற்பட்டிருப்பதாக இந்தியாவிலிருந்து வெளிவரும் த ஹிந்து பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டிப்பட்டுள்ளது.**

நியாயத் தீர்ப்புக்கான நேரம்எனும்தலைப்பில்வெளியாகியுள்ள ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மோதல்கள் நிகழ்ந்த சமூகங்களில் கடந்த காலத் தவறுகளுக்கும் வரம்பு மீறிய செயல்களுக்கும் சம்பந்தப்பட்டவர்களைப் பொறுப்பேற்கவைப்பது அத்தனை எளிதான காரியம் அல்ல. ஆயினும் வெளிப்படையாகவும் அர்த்தமுள்ள வகையிலும் நீதி வழங்கப்படுவதற்கு, வேண்டும் என்றே கடந்த காலத்தில் நடத்தப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பான உண்மைகளை வெளிக்கொணர்வது அவசியம்.

மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு அளித்த அறிக்கையில், இலங்கையில் 2009இல் முடிவடைந்த போரில் ஈடுபட்ட இருதரப்பும் செய்த கொடூரமான மனித உரிமை மீறல் குற்றங்கள் விரிவாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்குத் தக்க தண்டனை வழங்கும் பொறுப்பை ஏற்பதில் இலங்கை அரசுக்கு உள்ள கடமையை அறிக்கை வலியுறுத்துகிறது. சர்வதேச நீதிபதிகள், வழக்கறிஞர்கள், விசாரணை அதிகாரிகளைக் கொண்ட விரைவு சிறப்பு நீதிமன்றங்களை நியமித்து, இக்குற்றச் செயல்களுக்குப் பொறுப்பானவர்களை நீதி முன் நிறுத்தி நியாயம் வழங்குவது அவசியம். நடந்த சம்பவங்கள் போர்க் குற்றங்களாகவும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்களாகவும் இருப்பதையே ஐ.நா. அமைப்பின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. சட்ட விரோதமான உயிர்க் கொலைகள், விசாரணைக்கு அழைத்துச் சென்றவர்களைக் ‘காணாமல் போகடிப்பது’, வைத்தியசாலைகள் மீது வேண்டும் என்றே குண்டுகளை வீசியது போன்ற குற்றச்சாட்டுகள் இலங்கை ராணுவத்துக்கு எதிராகக் கூறப்பட்டுள்ளன.

இதேபோல, போர் நடக்கும் பகுதியிலிருந்து வெளியேற முயன்ற மக்களைப் போகவிடாமல் தடுத்தது, 18 வயது நிரம்பாத சிறுவர்களையும் விருப்பமில்லாத இளைஞர்களையும் கட்டாயப்படுத்தித் தங்களுடைய படையில் சேர்த்தது போன்ற குற்றச்சாட்டுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராகக் கூறப்பட்டுள்ளன. திட்டமிட்ட முறையில் - ஒரு அதிகாரக் கட்டமைப்பின் படிநிலைகளின் கீழ் - ஏராளமானோர் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டிருப்பதை அறிக்கை தனது சுயேட்சையான விசாரணைகளின்அடிப்படையில்ஆதாரங்களுடன் நிறுவியிருக்கிறது.

இந்த அறிக்கை தொடர்பாக இலங்கை அரசு வெளியிட்டுள்ள சின்ன அறிக்கையில், ‘உயர்வேக விசாரணை அமைப்பு’ தொடர்பாக எந்தக் குறிப்பும் இல்லை “மனித உரிமை மீறல்கள் இனி இருக்காது, சமரசம் காணப்படும், நல்லிணக்கம் பேணப்படும்” என்ற வாக்குறுதிகள் மட்டுமே உள்ளன.

இடைக் கால ஏற்பாடாக விரைவு நீதிமன்றங்களை நியமித்து, போர்க்குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்ற அறிக்கையின் பரிந்துரையை ஏற்றுச் செயற்படுத்துவதன் மூலம், நீடித்த சமரசம் மற்றும் நல்லிணக்கத்தில் தனக்குள்ள உண்மையான ஈடுபாட்டை இப்போதைய தேசிய அரசு நிரூபிக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இது அத்தனை எளிதானதல்ல என்றாலும், இதை அமுல்படுத்துவதன் மூலமே சிறிசேன-விக்கிரமசிங்க அரசுக்குள்ள உறுதி சோதிக்கப்படும். இந்த நடைமுறைகளை இந்தியாவும் கூர்ந்து கவனிக்கும். ஏனென்றால், நாடு எல்லை கடந்த இத்தகைய விசாரணை நடைமுறை தெற்காசிய நாடுகளுக்கே புதுமையானது. இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் என்று கேட்போருக்கும், உள்நாட்டுக்குள்ளேயேதான் விசாரணை நடைபெற வேண்டும் - வெளியார் தலையீடு கூடாது என்போருக்கும் இடையில் சமநிலை ஏற்படும் வகையில் ஒரு தீர்வு இப்போது கூறப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்டோருக்கு நியாயம் வழங்க வேண்டிய நேரம் இது என்பது எல்லோரும் மனதில் கொள்ள வேண்டியது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## “தேரேறி வருகிறான் மாயவன்”

வேண்டுவோர்க்கு அருள் பொழியும் வல்லிபுர நாதா!
கருடவாகனனே,கார்மேக வண்ணனே!
பாற்கடல்தனில் பள்ளி கொள்ளும் பரந்தாமா!
பக்தர்களைக் காத்திட பத்து அவதாரம் எடுத்தாய்!
பாண்டவர்கள் துயர்தீர்க்க பார்த்தனாய்ச் சென்றாய்!
பண்பாட்டுடன் வாழ்ந்த எம் தமிழினம் -இனி
பார்தனில் சிறப்புடன் வாழ்ந்திட
அதர்மங்கள் புரிவோரை அடியோடு அழித்துவிடு
மாயவா?

நயினை விசு-இராசநாயகம்.

## வல்லிபுரம் தன்னில் தேரேறும் மாயவனே

வல்லிபுர மாயவன் இன்று தேரில் வருகிறான்
நம்துயரம் போக்க இன்று ஆடி வருகிறான்
வெள்ளமெனப் பக்தர்கள் சூழ வருகிறான்
நாளை நமதாகும் என்று கூறி வருகிறான்
கோவிந்தா கோசம் வான் பிளக்க ஓடி வருகிறான்
ஓஇந்தா என்றெமக்கு அருளைத் தருகிறான்

புலோலியூர், வேல்நந்தன்

## என்னையே மறந்தேன்

சங்கு சக்கரத்தைப் பார்த்தேன்-குழலுடன்
உன் குழந்தை முகம் பார்த்தேன்
கண்ணிரண்டும் போதவில்லை கண்ணா
உன்னைக் கண்டதுமே என்னையே மறந்தேன்
தேரினிலே சங்கு சக்கரத்தோடு...
பேரொளியாய் காட்சி தரும் நர்த்தனனே
நாகபடமதனில் வீற்றிருந்த உன்னைக்
கண்குளிரக் கண்டதுமே என்னையே மறந்தேன்

B.சீதாராம்,
பருத்தித்துறை.

## சக்கரத்தாழ்வானே தேரேறிவா

தேடுகின்ற கண்களுக்குள்
ஓடிவரும் கேசவனே
வாடுகின்ற உள்ளங்களை
நாடிவரும் வைகுந்தனே
பாடுபடுகின்ற மனங்களில்
பள்ளி கொள்ளும் பரந்தாமனே
நாடுகின்றவரின் குறைதனை
தீர்த்திடும் இலட்சுமி நாராயணனே
சக்கரத்தாழ்வானே தேரேறிவா

ந.அனந்திகா
சிறுப்பிட்டி

## உறங்காத தேர் வருகுது பாரீர்!

உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது
உலகத்தில் நீதி படிப்பினை தந்த
உத்தம தேர் வருகுது பாரீர்
எத்தனை படிப்பினை வந்தாலும்
பாரதத்தில் கண்ணன் நீதி அன்றும்
ஆரம்ப உலக முதல்
இன்றுவரை நிலைத்து நிற்பதை
இவ்வுலகம் பத்தாவது அவதாரமோ பாரீர்!

அதிபர் ம.கணேசலிங்கம்,
அல்வையூர்.

## குறை தீர்க்க ஓடோடி வருவாய் வல்லிபுர மாயவனே

பாற்கடலில் பள்ளி கொள்ளும்- எம்
கருமை நிறக் - கண்ணா நீ ஓடோடி வா
கருமை நிறக்கண்ணா- நீ
சஞ்சலம் தீர்க்க ஓடோடி வா
கார்மேக வண்ணா கருமை நிறக் கண்ணா
ஆற்றங்கரைக்கு ஓடோடி வா
குறும்புக்கார கண்ணனே- எம்
வல்லிபுர மாயவனே நீ ஓடோடி வா!

கமலநாதன் ஜதீபன்,
அல்வாய்.

# அனுமதி பெறாத தொண்ணூறு பேருந்துகள் வடபகுதியில் சேவையில் ஈடுபடுகின்றன

## மத்திய போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவிப்பு



(குருமன்காடு)

**அனுமதி பெறாத 90 பேருந்துகள் வடக்கு பகுதியில் சேவையில் ஈடுபடுகின்றன. இனிவரும் காலங்களில் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் இன்றி சேவையாற்றுகின்ற பேருந்துகள் அதற்குரிய அனுமதியைப் பெற்று சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்குரிய தண்டப்பணம் அறவிடப்படும் என மத்திய போக்குவரத்துத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

வவுனியாவிற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விஜயம் மேற்கொண்டு அரச மற்றும் தனியார் பேருந்து நிலையம், புகையிரத நிலையம், மத்திய பேருந்து தரிப்பிடம் ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிட்டு அதன் குறைகளை கேட்டறிந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில், 100 மில்லியன் ரூபா செலவில் புதிய பேருந்து தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. அதில் சிற்றுண்டிச் சாலை, சுகாதார வசதிகளுடன் கூடிய பயணிகள் தங்குமிடம், காவலாளிகள் தங்குமிடம் போன்ற வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதுவரை காலமும் வடபகுதியில் 90 பேருந்துகள் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் இன்றி சேவையில் உள்ளன. இனிவரும் காலங்களில் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் இன்றி சேவையாற்றும் பேருந்துகள் அதற்குரிய அனுமதியினை பெற்று சேவையாற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்குரிய தண்டப்பணம் அறவிடப்படும்.

இதுவரை காலமும் இதற்கான தண்டப்பணம் 10 ஆயிரம் ரூபாவாக காணப்பட்டது. இனிவரும் காலங்களில் ஒரு இலட்சம் ரூபாவாக மாற்ற யோசித்துள்ளேன். மேலும் இவ்வாறான செயற்பாட்டினால் வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் கடந்த கால அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் வடபகுதி அபிவிருத்திக்காக பல மில்லியன் ரூபாய்களை ஒதுக்கியுள்ளது.

பல அபிவிருத்தி திட்டங்கள் கடந்த காலத்தில் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் என்னால் தென்பகுதியில் இல்லாத அளவிற்கு வடபகுதியை அபிவிருத்தியில் முன்னுதாரணமான மாகாணமாக மாற்றிக் காட்டுவதே எனது இலக்காகும் என்று கூறினார். (2-12-250-281)

## மாட்டுவண்டி சவாரிப்போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி குறிஞ்சி விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் மாட்டுவண்டி சவாரிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வட்டக்கச்சி கலைவாணி விளையாட்டுத் திடலில் நடைபெறும்.

நான்கு பிரிவுகளாக நடைபெறும் போட்டியில் வெற்றிபெறும் ஒவ்வொரு பிரிவுக்குரிய முதலாவது இடத்திற்கு தங்கப் பதக்கங்களும் அடுத்துவரும் இரண்டாம், மூன்றாம், நான்காம் இடங்களுக்கு பெறுமதியான பரிசுகளும் வழங்கப்படுமென விளையாட்டுக் கழகத் தலைவர் க.கிருஷ்ணபவான் அறிவித்துள்ளார். (2-277)




# சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும்

## மூன்றாம் நாள் அமர்வு

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ சமூக சேவைகளும் புனர்வாழ்வும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் வழிகாட்டலில் வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட 'சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும்' நேற்று முன்தினம் ஆரம்பமாகி இன்று சனிக்கிழமையுடன் நிறைவு பெறுகின்றது.

முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 6 மணிவரை பார்வையிட முடியும். இன்று சனிக்கிழமை நடைபெறும் மூன்றாம் நாள் நிகழ்வு கிழக்கு பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி டாக்டர் என்.வர்ணகுலேந்திரன் தலைமையில் நடைபெறும்.

'சித்த, பாரம்பரிய மருத்துவங்கள் சர்வதேச தரத்தினை எட்டுவதில் ஆய்வுகளின் பங்கு' எனும் தொனிப் பொருளில் இடம்பெறும். இதன் போது ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும்.

இதன்பிரகாரம் 'ஆமவாத சிகிச்சை' எனும்தலைப்பில் டாக்டர் ஆர்.பிரதீப்குமார், டாக்டர் திருமதி பி.காவேரி ஆகியோரும் 'மூட்டு வாதத்தில் அனுபானத்தின் பங்கு' எனும் தலைப்பில் டாக்டர் எஸ்.ஆர். போல்டன் ராஜீவ், ''வைத்தீஸ்வரா கல்லூரியில் கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்களின் கைத்தொலைபேசிப்பாவனை'' எனும்தலைப்பில் தெட்சணாமூர்த்தி சபேசன், கணபதிப்பிள்ளை பிறேமராகவன், ஸ்ரீரஞ்ஜனி சிவபாலன் ஆகியோரும் 'இளைப்பு இருமலும் குளிர்கால காலநிலையும்' எனும் தலைப்பில் வித்தியா கிறீஸ்ரி, உதயகௌரி துரைசாமி ஐயர், ஸ்ரீரஞ்ஜனி சிவபாலன் ஆகியோரும் 'குதிவாதத்தில் தற்கால நிலைமை' எனும் தலைப்பில் வனிதா மகேந்திரன், தர்சினி ரவீந்திரன், துளசி ஸ்ரீராஜா, நதிகா இளையதம்பி, டாக்டர் விவியன் சத்தியசீலன் ஆகியோரும் 'ஐந்து வகை நிலங்களும் மதுமேக நோய்' எனும் தலைப்பில் தர்சினி ரவீந்திரன், துளசி ஸ்ரீராஜா, நதிகா இளையதம்பி, வனிதா மகேந்திரன், டாக்டர் விவியன் சத்தியசீலன் ஆகியோரும் 'ஐந்து வகை நிலங்களும் சரும நோய்களும்' எனும் தலைப்பில் நதிகா இளையதம்பி, துளசி ஸ்ரீராஜா, வனிதா மகேந்திரன், துளசி ரவீந்திரன், டாக்டர் விவியன் சத்திய சீலன் ஆகியோரும் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்கவுள்ளனர்.

ஆய்வுக்கட்டுரைகளின் மதிப்பீட்டுரைகளைப் பேராசிரியர் எஸ்.பவானி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவின் ஓய்வுநிலை விரிவுரையாளர் வைத்திய கலாநிதி டாக்டர்திருமதி ஜி.ஏ.பவானி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவின் தலைவர் வைத்திய கலாநிதி டாக்டர் எஸ்.சிவசண்முகராஜா ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

இறுதியாக பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும். எனவே சுதேச மருத்துவ ஆர்வலர்கள் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2)



வவுனியா தமிழ்ச்சங்கத்தின் அனுசரணையுடன் செந்தணல் வெளியீட்டகத்தின் 14 வெளியீடான வவு.கனகராயன் மகாவித்தியாலய மாணவி கி.தர்சினி எழுதிய மனவெளியின் மலர்வுகள் கவிதை நூல் வெளியீடு கடந்த 23 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு வவு.கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போது...

# ஒன்பது கிராமசேவையாளர் பிரிவுகளில் 100 நாட்கள் வேலைத்திட்டங்கள் பூர்த்தி

நாடுபூராகவும் 100 நாட்கள் வேலைத்திட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய ஒட்டுசுட்டான் பிரதேசசெயலக பிரிவில் ஒன்பது கிராமசேவையாளர் பிரிவுகளில் 100 நாட்கள் வேலைத்திட்டம் நிறைவடைந்துள்ளதாக பிரதேச செயலக தகவல் தெரிவிக்கின்றது.

அதனடிப்படையில் புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்ற குளபுனரமைப்புப் பணி, கருவேலன்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் இடம் பெற்ற பாலம் அமைக்கும் பணி, தட்டயர்மலை கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்ற குளபுனரமைப்புபணி, தண்டுவான் கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்ற குழாய்க் கிணறு அமைக்கும் பணி, ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் இடம் பெற்ற பாலம் அமைக்கும் பணி, மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் இடம்பெற்ற பாலம் அமைக்கும் பணி, இந்துபுரம் கிராம அலுவலர் பிரிவில் இடம் பெற்ற 300 மீற்றர் நீளமான கொங்றீட் வீதிஅமைக்கும் பணி. போன்ற ஒன்பது கிராமசேவை யாளர் பிரிவுகளின் 100 நாட்கள் வேலைத் திட்டங்கள் நிறைவுபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-281)

# 56 இலட்சம் ரூபா நிதியுதவியில் இரண்டு முன்பள்ளிகள் அமைப்பு

(பனிக்கன்குளம்)

யு.என்.ஹபிடாட் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் பனிக்கன்குளம், மாங்குளம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் முன்பள்ளி கட்டடங்கள் விரைவில் அமைக்கப்படவுள்ளன.

இது குறித்து தெரிய வருவதாவது, யு.என்.ஹபிடாட் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் ஒவ்வொரு முன்பள்ளி அமைப்பதற்கும் தலா 28 இலட்சம் ரூபா வழங்கப்பட்டு மேற்படி கிராம அலுவலர் பிரிவுகளில் இரு முன்பள்ளிகள் அமைக்கப்படவுள்ளன.

இதில் பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவிற்கான முன்பள்ளிக் கட்டடத்தை பனிக்கன்குளம் கிராம அபிவிருத்தி சங்கமும் மாங்குளம் கிராம அலுவலர் பிரிவிற்கான முன்பள்ளிக் கட்டடத்தை மாங்குளம் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினரும் மேற்கொள்ளவுள்ளனர்.

இக்கட்டடங்கள் அமைப்பதற்கான ஆரம்பகட்ட நிதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இதற்கான ஆரம்ப வேலைகள் அடுத்த வாரத்தில் இடம்பெற்று அடிக்கல் நாட்டும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

இந்த முன்பள்ளிகளின் கட்டட வேலைகள் அனைத்தும் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திற்கு முன்னர் நிறைவு செய்யப்படும்.

இதுவரை காலமும் இந்த இரு இடங்களுக்கும் முன்பள்ளி கட்டடங்கள் இன்றி சிறார்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. முன்பள்ளிகள் கட்டப்படவுள்ளதால் எதிர்காலத்தில் சிறார்களின் முன்பள்ளிச் செயற்பாடுகள் எதுவித இடையூறுகளும் இன்றி நடைபெறுமென பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (2-281)

# இருவருக்கிடையில் வாய்த்தர்க்கம் கத்திக் குத்தில் முடிவடைந்தது

(பனிக்கன்குளம்)

மீன்வியாபாரத்தில் ஈடுபட்ட இருவருக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கத்திக்குத்தில் முடிவடைந்தது. இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை புதுக்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, இரு மீன் வியாபாரிகளுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தாக மாறியது.

இதனையடுத்து ஒருவர் மற்றவர் மீது வயிற்றுப்பகுதியில் கத்தியால் குத்தியுள்ளார்.

இதனால் கத்திக்குத்துக்கு இலக்கான பிரஸ்தாப நபர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இதேவேளை கத்தியால் குத்தியவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

# மன்னார் மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## கட்டுக்கரைக்குள திட்டமிடல் முகாமைத்துவக் குழு உறுப்பினர்களிடம் பிரதமர் உறுதிமொழி

(பனிக்கன்குளம்)

மல்வத்து ஓயா நீரை அணைக்கட்டின் ஊடாக கட்டுக்கரைக்குளத்தினுள் செலுத்தி தேக்கி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென மன்னார் கட்டுக்கரைக்குளத் திட்டமிடல் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நீர்ப்பாசன அமைச்சர் விஜயமுனி சொய்சா ஆகியோரை சந்தித்து வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனின் ஏற்பாட்டில் கட்டுக்கரைக்குளத் திட்டமிடல் முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள் கடந்த 23 ஆம் திகதி சந்தித்து கலந்துரையாடிய போதே வலியுறுத்தினர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முதலில் கட்டுக்கரை திட்டமிடல் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள், நீர்ப்பாசன அமைச்சர் விஜயமுனி சொய்சாவை சந்தித்து உரையாடினர்.

இதன்போது கட்டுக்கரைக் குளத்தில் உள்ள நீரை நம்பி சுமார் 30 ஆயிரம் ஏக்கர் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆனால் கட்டுக்கரைக்குளத்தில் தேக்கி வைக்கப்படும் நீர் சுமார் ஒரு மாத காலத்திற்கு மட்டுமே போதுமானதாக உள்ளதாகவும் ஏனைய மாதங்களுக்கு நீர்ப்பற்றாக்குறை ஏற்படுவதாகவும் முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள், நீர்ப்பாசன அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

அதேவேளை மழைநீரைக் கட்டுக்கரைக்குளத்தில் சேமித்து வைப்பதற்கு குளத்திற்கான வான்கதவு அமைத்தல் மற்றும் குளத்திற்கு நீர்ப்பாய்ச்சும் வடிகான்கள் தூய்மைப்படுத்தப்பட வேண்டும்.

மல்வத்து ஓயா நீரை அணைக்கட்டினூடாக கட்டுக்கரைக்குளத்தினுள் செலுத்தி தேக்கி வைக்கின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து கட்டுக்கரை திட்டமிடல் முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து உரையாடினர்.

இதன்போது கட்டுக்கரைக் குளத்திற்கான வான்கதவு அமைத்தல், வடிகான்கள் தூய்மைப்படுத்தல் போன்ற விடயங்களை ஆராய்ந்ததோடு மன்னார் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லை கொள்வனவு செய்தல், நெல்லை களஞ்சியப்படுத்தல் போன்ற விடயங்கள் பிரதமரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதேவேளை மன்னார் மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கேட்டறிந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மல்வத்து ஓயா நீரைக் கட்டுக்கரைக்குளத்தில் தேக்கி வைப்பதற்கான வேலைத் திட்டத்தை வெகுவிரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் மன்னார் மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார். (2-281)

## கொட்டதெனியாவ சிறுமி படுகொலைக்கு நீதி கோரி கிளி/ விவேகானந்தா வித்தி.மாணவர்கள் கவனயீர்ப்பு





(கிளிநொச்சி)

கொட்டதெனியாவ அகரங்கஹ பகுதியில் சேயா சந்த வமி (வயது-5) என்ற சிறுமியொருவர் வன்புணர்வுக்குட்படுத்தி கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு நீதிகோரி கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் இணைந்து பாடசாலை வளாகத்தில் ஒன்றுகூடி நேற்று முற்பகல் 11 மணியளவில் பதாகைகள் ஏந்தியவாறு அஞ்சலி செலுத்தியதுடன் கவனயீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

மாணவியின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தியதுடன் மெழுகுவர்த்திகளும் ஏந்தி அஞ்சலி செலுத்தினர்.

கறுப்புக்கொடி அணிந்து பதாகைகள் ஏந்தியவாறு கொலை செய்யப்பட்ட மாணவிக்கு நீதி வேண்டி கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினையும் முன்னெடுத்திருந்தனர்.

அஞ்சலி நிகழ்வில் சேயாவின் கொலைக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதையும் வித்தியாவின் மரணத்தின்போது நீதி நிலைநாட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும் மாணவர்களால் இரங்கல்கள் வாசிக்கப்பட்டன.

இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு, சேயா கடத்தப்பட்டு வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இச்சிறுமிக்கு நடத்தப்பட்ட கொடூர செயலைக் கண்டித்து மாணவர்களாகிய நாம் அஞ்சலி நிகழ்வை நடத்துகின்றோம்.

இதுபோன்ற கொடூரச் சம்பவங்கள் இனிவரும் காலங்களில் நடைபெறா வண்ணம் இருக்க இதனை புரிந்தவருக்கு உயர்ந்த பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இலங்கை வாழ் சமூகத்திற்கு அறைகூவல் விடுக்கின்றோம்.

இதுபோன்ற கொடூரமான சம்பவங்கள் இனிமேலும் தொடரக் கூடாது என்பதே எமது வேண்டுகோளாகும்.

சிறுவர்களாகிய எமது பாதுகாப்பை உறுதிப்படுத்துவது காலத்தின் கட்டாயமாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-271-15)




## யானைகள் அட்டகாசம் மின்வேலி அமையுங்கள்

### பட்டிக்குடியிருப்பு மக்கள் கோரிக்கை

வவுனியா பட்டிக்குடியிருப்பு பிரதேசத்தில் காட்டு யானைகள் வீடுகளுக்குள் புகுந்து சேதம் விளைவிப்பதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே தமது கிராமத்தை சூழ மின்வேலி அமைக்கும் பட்சத்திலேயே தாம் நிம்மதியாக வாழ முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

விவசாயத்தை நம்பி வாழும் இக்கிராம மக்கள் உற்பத்தி பொருட்களை வீடுகளில் வைத்திருக்கும் போது அவற்றை உண்பதற்காக காட்டு யானைகள் வீடுகளுக்குள் புக முற்படுவதாகவும் இதன் காரணமாக அப்பகுதியில் பல வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாலையானதும் குடிமனைகளுக்குள் வரும் யானையை விரட்ட முடியாதுள்ளதாகவும் யானை விரட்டும் போது அது மக்களை நோக்கி வருவதாகவும் தெரிவிக்கும் அப்பகுதி மக்கள் மின்சார வசதிகள் இன்மையால் இரவு நேரங்களில் யானையை அடையாளம் காண முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே தமது கிராமத்தை சூழ மின் வேலி அமைக்கும் பட்சத்திலேயே தாம் நிம்மதியாக வாழ முடியும் என அவர்கள் தெரிவிக்கின்றனர். (2-250)

# பேருந்துமீது கல்வீச்சுத் தாக்குதல்; சாரதி உட்பட பயணி ஒருவர் படுகாயம்

## தனியார் பேருந்து உரிமையாளர்களின் பணிப்புறக்கணிப்பு தொடர்கின்றது



(மல்லாவி)

இலங்கை போக்குவரத்து சபையில் மன்னார் இ.போ.ச.சாலைக்கு சொந்தமான பேருந்து ஒன்று கடந்த 23 ஆம் திகதி புதன்கிழமை இரவு இனந் தெரியாத 10 பேர் கொண்ட குழுவினரால் மன்னார் எழுத்தூர் செல்வாநகர் பகுதியில் வைத்து கல்வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி பேருந்தின் முன்பக்கக் கண்ணாடி சேதம் அடைந்ததுடன் சாரதி உட்பட பயணி ஒருவர் படுகாயம் அடைந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து அரச மற்றும் தனியார் பேருந்து சேவையினர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை இருபகுதியினரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டி பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதனால் பயணிகள் போக்குவரத்து வசதியின்றி பெரும் அவல நிலைக்குட்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 23 ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கி பிற்பகல் 5.30 மணிக்கு வந்தடைந்த இ.போ.ச. பேருந்து பயணிகள் சேவையை நிறைவு செய்துகொண்டு இரவு 8 மணியளவில் மன்னார் இ.போ.ச. பேருந்து தரிப்பிடத்தில் இருந்து மன்னார் டிப்போ நோக்கி பேருந்து பயணித்த வேளை எழுத்தூர் செல்வாநகர் கிராமப்புறப் பகுதியில் வைத்து முகத்தை மூடிக்கட்டிய நிலையில் மோட்டார் சைக்கிளில் வந்த சுமார் 10 பேர் கொண்ட இனந் தெரியாத கும்பல் ஒன்று பேருந்து மீது கல்வீச்சுத் தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச்சென்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது பேருந்தின் முன்பக்கக் கண்ணாடி உட்பட பக்கக் கண்ணாடிகள் சேதமடைந்தன.

கல்வீச்சுத்தாக்குதலின்போது சாரதியும் பெண் பயணியொருவரும் படுகாயம் அடைந்த நிலையில் மன்னார் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த மன்னார் பொலிஸார் சாரதியிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றிரவே சந்தேகத்தின் பேரில் அப்பகுதியைச் சேர்ந்த தனியார் பேருந்து சாரதியொருவரைக் கைது செய்தனர்.

இதனை அடுத்து நேற்றுமுன்தினம் காலை தொடக்கம் கைது செய்த தனியார் பேருந்து சாரதியை விடுவிக்குமாறு கோரி தனியார் பேருந்து உரிமையாளர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதேவேளை தாக்குதலை மேற்கொண்ட ஏனையோரையும் கைது செய்யுமாறும் தமக்குப் பாதுகாப்பை வழங்குமாறும் கோரி இ.போ.சபையின் மன்னார் சாலை பணியாளர்களும் நேற்று முன்தினம் காலை 6 மணி தொடக்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் வெளி மாவட்டங்கள் உட்பட உள்ளூர் சேவை பயணிகளும் சிரமங்களுக்கு உட்பட்டதுடன் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாமல் அவலப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

சம்பவ இடத்திற்கு விரைந்த மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமசிங்க, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ். ஜெயசேகரா, மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜந்த ரொட்கிகோ உட்பட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் ஆகியோர் இருதரப்பினருடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து இணக்கம் ஏற்பட்டு நேற்று முன்தினம் காலை 9 மணி முதல் இ.போ.ச. பேருந்துகளின் சேவைகள் வழமைக்கு திரும்பின.

எனினும் தனியார் பேருந்துகளின் சேவைகள் தொடர்ந்தும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2-15-281)

## இனந்தெரியாத நபர்களின்

# தாக்குதலுக்குள்ளான ஆசிரியர் உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

**யாழ்.நகரில் வைத்து இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்குள்ளான ஆசிரிய தம்பதிகளில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ரி.மாதவமணிவண்ணன் (வயது -44) என்பவரே உயிரிழந்தவராவார். இவருடைய மனைவியான மா.தர்சினி (வயது-41) என்பவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.**

கடந்த 21 ஆம் திகதியன்று யாழ்.நகர்ப்பகுதியில் வைத்து ஆசிரியர்களான கணவன், மனைவி ஆகியோர் இனந்தெரியாத நபர்களின் மோசமான தாக்குதலில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கடந்த நான்கு நாட்களாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி ஆசிரியரான மாதவமணிவண்ணன் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று இரவு 10.30 மணியளவில் யாழ். நகரிலமைந்துள்ள உணவகமொன்றுக்கு குறித்த தம்பதியர் இருவரும் சென்றுள்ளனர்.

இதன்போது உணவகத்திற்கு அண்மித்ததாக நின்று கொண்டிருந்த இளைஞர்கள் சிலர் கணவன், மனைவியை பார்த்து தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால ஆத்திரமடைந்த தம்பதியினர் இளைஞர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்குவாதம் முற்றியதால் தம்பதியர் இருவரையும் இளைஞர் குழு மிக மோசமாகத் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அப்பகுதியில் தேடுதல் நடத்திய போதிலும் தாக்குதல் நடத்தியவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை அண்மைக் காலமாக யாழில் வாள்வெட்டு போன்ற வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-4)




## திருவிழா ஆரம்பம்



கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று சனிக்கிழமை "செபம் வழிபாடுகள் அவசியம்" எனும் தொனிப்பொருளில் திருப்பலி இடம்பெறும். தொடர்ந்து இளையோருக்கான ஒன்று கூடல் நிகழ்வும் தந்தையருக்கான கலந்துரையாடல் என்பனவும் இடம்பெறும். நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலியும் மாலை 5 மணிக்கு நற்கருணை பவனியும் நடைபெறும்.

தொடர்ந்து வரும் நாட்கள் விசேட திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

ஒக்டோபர் 3 ஆம் திகதி "அர்ப்பணமும் குணமாக்கலும்" எனும் தொனிப்பொருளில் நவதின வழிபாடு இடம் பெறவுள்ளது.

4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழா திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

தினமும் நடைபெறவுள்ள திருப்பலிகளை இந்தியாவில் உள்ள வேலும் அருள் உதயம் ஆச்சிரமத்தில் இருந்து வருகை தந்த சிற்றரசு காணிக்கை ராஜ் ஒப்புக்கொடுக்கவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-51)

## 73 ஆண்டுகளாக புனரமைக்கப்படாத

# அராலி மத்தி உள்ளக வீதி புனரமைப்பு

73 ஆண்டுகளாக புனரமைக்கப்படாத அராலி மத்தியில் உள்ள உள்ளக வீதி புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணம் சங்கானை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அராலி மத்தியில் அமைந்துள்ள அல்லியபுலம் வீதி சுமார் 73 ஆண்டுகளாக புனரமைக்கப்படவில்லை.

இந்த அல்லியபுலம் வீதிக்கான நிதியை ஒதுக்கி அதனை நடைமுறைப்படுத்தும் அளவுக்கும் முக்கிய காரணமானவர்கள் இங்குள்ள இளைய சமூகத்தினரின் முயற்சியே ஆகும்.

அந்த வகையில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து 2 மில்லியன் ரூபா செலவில் கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன. இதே போன்று எனது உதவிகள் பாரபட்சம் இன்றி ஐந்து மாவட்டங்களுக்கும் கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## அதிரடிப் படையை அகற்றுமாறு பணிப்பு!

யாழ். நீதிமன்ற வளாகத்தை சுற்றியுள்ள விசேட அதிரடிப்படையினரை அகற்றி பொலிஸாரை பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்துமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் கடந்த புதன்கிழமை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நீதிமன்ற தாக்குதலின் பின்னர் யாழ். நீதிமன்ற வளாகத்தைச் சுற்றி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.


விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பில் இருப்பது மக்கள் மத்தியில் தவறான கண்ணோட்டம் இருப்பதால் அவர்களை அகற்றி பொலிஸாரினை பாதுகாப்பு கடமையில் ஈடுபடுமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-9)

## மருந்தாளர் தினம் யாழில்



மருந்து நிறுவனமான அஸ்ரோன் நிறுவனத்துடன் இணைந்து வட இலங்கை மருந்தியலாளர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் உலக மருந்தாளர் தினம் நேற்றைய தினம் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் மருந்தியலாளர்கள் கருத்துரைகளை வழங்கியதுடன் 70 வயதிற்கு மேற்பட்ட மருந்தாளர்கள் 13 பேர் கௌரவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வில் வடபகுதியிலுள்ள மருந்தாளர்கள் பலர் கலந்து கொண்டனர். (இ-9)





சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் நூலக தின புத்தகக் கண்காட்சி நேற்று நகராட்சிமன்ற பொது நூலகத்தில் நடைபெற்றது. நகராட்சி மன்றத்தின் செயலாளர் ந.சண்முகதாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் க.சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்ததுடன் நூலக வளாகத்தினுள் அமைந்துள்ள வள்ளுவர் சிலைக்கு மலரஞ்சலியும் செலுத்தியுள்ளார்.

## யாழில் பாடசாலைகளிலிருந்து

# இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைகிறது

### அரச அதிபர் தகவல்

யாழ்.மாவட்டத்தில் பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்து வருவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ் மாவட்டத்தில் உள்ள சிறுவர்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் யாழ் மாவட்ட அலுவலகத்தால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் தொகை படிப்படியாக குறைவடைந்து செல்கிறது.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் சுற்றுநிருபத்தில் 16 வயது வரை கட்டாயக் கல்வி எனும் சட்டத்தின் அடிப்படையில் பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டு வருகின்றோம்.

கடந்த 2013 ஆம் ஆண்டு 123 மாணவர்களும் 2014 ஆம் ஆண்டு 96 மாணவர்களும் 2015 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை 39 மாணவர்களும் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலிருந்து இடைவிலகியிருப்பதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இத்தரவுகள் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவின் ஊடாக பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

இப் பதிவுகளின் அடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச மட்டத்திலும் மாணவர்கள் இடைவிலகுவதற்கான காரணங்கள் கேட்டறியப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள், பாடசாலைக்கான உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் பெற்றோர், ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மாணவர் மத்தியில் அறிவூட்டல் கருத்தரங்குகளும் மேற்கொண்டு வருகின்றோம்.

இச் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு படிப்படியாக சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# கலப்பு நீதிமன்ற விசாரணை இலங்கைக்கு தேவையில்லை

## மாகாண சபை உறுப்பினர் அஸாத் சாலி தெரிவிப்பு




(கொழும்பு)

**கலப்பு நீதிமன்ற விசாரணை முறை இலங்கைக்கு தேவையில்லை. இலங்கையில் நடந்த பிரச்சினை இல்ங்கையிலேயே விசாரிக்கப்பட வேண்டும். சர்வதேசம் அதற்கு தேவையான ஒத்துழைப்பை வெளியில் இருந்து தரலாம் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அஸாத் சாலி தெரிவித்துள்ளார்.**

மேலும் பிரச்சினைக்கு தீர்வு காண உள்ளக விசாரணை பொறி முறையே ஒரே தீர்வாகும். அதனை அரசாங்கம் முன்னெடுக்கும் என பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்தமை வரவேற்கத்தக்கது எனவும் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,ஜனவரி 8 ஆம் திகதிக்கு பிறகு இலங் கையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மனித உரிமைகள் மீறாமல் இன ங்களுக்கிடையில் பிரச்சினைகள் ஏற்படாமல் அரசாங்கம் பாதுகாத்து வருகினறது.

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் ஜீ.எஸ். பி.பிளஸ் இல்லாமல் போனது அத்துடன் ஐ.நா.வின் தணிக்கை குழுவர திட்டமிட்டிருந்தது. ஆனால் இப்போது சர்வதேசம் இலங்கை தொடர்பில் நல்லெண்ணம் கொண்டு வருகின்றது.

இலங்கைக்கு வந்திருந்த ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியை சந்தித்த போது இலங்கைக்கு இல்லாமல் செய்யப்பட்டிருந்த ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை மீளவும் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார். அதேபோன்று இன்று முழு உலக நாடுகளும் இலங்கையில் ஏற்பட்டுவரும் மாற்றம் குறித்து மிகவும் ஆவலுடன் கதைத்து வருகின்றன.

இலங்கைக்கு உதவ வேண்டும் என எதிர்பார்க்கின்றன. அதேபோன்று ஐ.நா. சபை இலங்கைக்கு எதிரான அறிக்கையை தேர்தல் காலத்தில் வெளியிட இருந்த போது அதை செப்டெம்பர் வரை காலம் தாழ்த்தி எங்களுக்கு அவகாசம் தந்தது. ஆனால் தற்போது கலப்பு நீதிமன்றம் அமைத்து விசாரிக்க வேண்டும் என ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் யுத்தம் செய்த இரு தரப்பும் தவறி ழைத்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் செயற்பாடு காரணமாக ஐ.நா.சபையின் பொருளாதார தடை ஏற்பட இருந்தது. ஜீ.எஸ்.பி. சலுகையை இழந்தோம். கலப்பு நீதிமன்றமோ வெளிநாட்டு ஆணையாளர்களோ இலங்கைக்கு வந்து விசாரணை மேற் கொள்ள வேண்டியதில்லை.

ஏன் என்றால்? இது இலங்கைக்குள் நடந்த பிரச்சினை. இலங்கையில் உள்ள சட்டத்தரணிகளைக் கொண்டே விசாரிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் அரசாங்கம் இருக்கின்றது.

அதனால் தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பிரச்சினைக்கு தீர்வுகாண உள்ளக விசாரணை பொறிமுறையே ஒரே தீர்வாகும். அதனை அரசாங்கம் முன்னெடுக்கும் என உறுதியாகவே தெரிவித்தமையையிட்டு நன்றி கூறுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## மோட்டார் சைக்கிள், ஆட்டோ பதிவுகள் திடீரென அதிகரிப்பு

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடம் மோட்டார் சைக்கிள் மற்றும் ஆட்டோக்கள் அதிகளவில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.


இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 2,75885 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் 2 இலட்சத்து 43 ஆயிரத்து 164 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 84 ஆயிரத்து 591 ஆட்டோக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் 79 ஆயிரத்து 038 ஆட்டோக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி தெரிவித்தார். (இ-7)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(கரணவாய்)

அகில இலங்கை சமாதான நீதவானாக அல்வாயைச் சேர்ந்த அருணாசலம் அமிர்த நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு மாவட்ட மேலதிக நீதவான் சஸ்மி சிங்கப்புலி முன்னிலையில் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் "அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் தற்போது கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க நெறியாளர் சபை உறுப்பினரும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஓய்வுநிலை மருந்தக உத்தியோகத்தருமாக கடமையாற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-60)

## ஒரு கலைஞருடனான சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மொழிபெயர்ப்புக் கற்கைநெறி மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட **ஒரு கலைஞருடனான சந்திப்பு** எனும் நிகழ்வில் கிழக்கிலங்கை பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் சி.மௌனகுருவினை கலைப்பீட மொழி பெயர்ப்புக் கற்கைநெறி மாணவர்கள் சந்திக்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பேராசிரியர் சி.மௌனகுருவின் நெறியாள்கையில் உருவான காண்டவதனம் எனும் நிகழ்வும் கே.பாலேந்திராவின் நெறியாள்கையில் உருவான நெட்டை மரங்கள் எனும் அரங்க நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் கி.பா:13<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:MSC/ பொறியியளாளர்<br>தொ.இ: B/4988 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா:63செவ் 7 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/ சொந்தத்தொழில்<br>தொ.இ: G/2318 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 39<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:NVQ/தனியார் தொழில்<br>தொ.இ: B/4991 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 28 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:CIMA/தனியார் தொழில்<br>தொ.இ: G/2322 |
| பிறப்பு: 1985<br>இந்துநட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 15<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/4994 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 38செவ 2 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர<br>தொ.இ: G/2326 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 35செவ் 8 ல<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/தனியார்<br>தொ.இ: B/4994 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 52சூரிசெவ் 11 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/2350 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# அமெரிக்க - ரஷ்ய ஜனாதிபதிகள் நேருக்கு நேர் சந்திக்க திட்டம்

(வோஷிங்டன்)

ஐ.நா. சபையில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள கூட்டத்தின்போது ரஷ்ய ஜனாதிபதி புடினை நேருக்குநேர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த ஒபாமா முடிவு செய்துள்ளதாக தகவல்வெளியாகியுள்ளது.



அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுக்கு இடையே பல ஆண்டுகளாக பனிப்போர் நடந்துவருகிறது.

இரு நாடுகளும் தங்களை வல்லரசாக காட்டிக்கொள்வதற்காக பல முயற்சிகளை எடுத்துவருகின்றன.

இதன் காரணமாக இரு நாடுகளும் எலியும் பூனையுமாக இருந்து வருகின்றன. இந்நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை ஐ.நா. சபையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் பேசவுள்ளார்.

அவரை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சந்தித்து சிரியா, உக்ரைன் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதம் நடத்தவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையும் இந்த சந்திப்பை உறுதி செய்துள்ளது. இந்த சந்திப்பின் போது உக்ரையின் விவகாரம் குறித்து ஒபாமா கேள்வி எழுப்பக்கூடும் என்று கூறப்படுகிறது.

மேலும் சிரியாவுக்கு ரஷ்யா ஆயுத உதவி அளித்து வருவதாக கூறப்படுகிறது.

எனவே இது குறித்தும் புடினுடன் நேருக்கு நேர் விவாதம் நடத்த ஒபாமா முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-7)

## தொழுகையின்போது குண்டுத்தாக்குதல்

## யேமன் பள்ளிவாசலில் 25 பேர் பலி



யேமனிய தலைநகர் சனாவிலுள்ள பள்ளிவாசலொன்றில் தற்கொலைக் குண்டு தாரியொருவர் கடந்த வியாழக்கிழமை நடத்திய தாக்குதலில் குறைந்தது 25 பேர் பலியாகியுள்ளதுடன் 36 பேருக்குமதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

அல் பாலிலி பள்ளிவாசலில் ஹஜ் பெருநாளையொட்டி இடம்பெற்ற தொழுகையின் போது இரு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தத் தாக்குதலை தாமே நடத்தியதாக ஐ.எஸ். தீவிரவாதிகள் உரிமை கோரியுள்ளனர். தாக்குதலுக்குள்ளான இந்தப் பள்ளிவாசல் பொலிஸ் பயிற்சி நிலையமொன்றுக்கு அண்மையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சவுதி அரேபியாவில் நாடு கடந்த நிலையில் வாழ்ந்த யேமனிய ஜனாதிபதி அப்திரபக் மன்சூர் ஹாடி தாய்நாடு திரும்பியதற்கு இரு நாட்கள் கழித்து இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல் நடவடிக்கைகளையடுத்து அவர் நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்.

இதனையடுத்து சவுதி தலைமையிலான கூட்டமைப்பு நாடுகளின் படையினர் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக வான் தாக்குதல்களை முன்னெடுத்துள்ளனர்.

இதனையடுத்து ஏடன் உள்ளடங்கலான நகர்களிலிருந்து கிளர்ச்சியாளர்கள் பின்வாங்கிச் சென்றுள்ள போதும் அவர்கள் தொடர்ந்து அந்நாட்டின் தலைநகரை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர்.

கடந்த மார்ச் 26 ஆம் திகதியிலிருந்து யேமனில் தரை வழியாகவும் வான் வழியாகவும் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களில் 2,200 பொதுமக்கள் உட்பட 4,900 பேர் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கிறது. (3-7)

## சிரிய அமைதிப் பேச்சுக்களில் ஜனாதிபதி இடம்பெறவேண்டும்

### ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா கருத்து

(பிரசல்ஸ்)



சிரியாவில் கடந்த 4 ஆண்டுகளாக நடந்து வருகிற உள்நாட்டுப்போர், அந்த நாட்டு மக்களின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கி விட்டது. பல இலட்சம் மக்கள் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள்.

இந்த அகதிகள் பிரச்சினை, ஐரோப்பிய நாடுகளுக்கு தலைவலியாக அமைந்துள்ளது.

இது தொடர்பாக விவாதிப்பதற்காக பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் ஐரோப்பிய யூனியன் உச்சி மாநாடு நடைபெற்றது. அதன் பின்னர் ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல், நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர், "சிரியாவில் உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்தாக வேண்டும். அமைதி ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்த வேண்டும். அனைத்து தரப்பினருடனும் நாங்கள் பேச இருக்கிறோம். அமெரிக்கா, ரஷ்யா மட்டுமல்ல, பிராந்திய கூட்டாளிகளான ஈரான் மற்றும் சவுதி அரேபியா போன்ற சன்னி நாடுகளுடனும் பேசுவோம்" என்று கூறினார்.

ஆனால் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் பதவி விலக வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டேயும் இதே கருத்தை கூறியுள்ளார். (3-7)




## புர்கினா பாசோ நாட்டில் அதிரடி ஆட்சி கவிழ்ப்பு



புர்கினா பாசோவில் சென்ற வாரம் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பை நடத்திய தரப்பின் தலைவர்கள், அந்நாட்டின் இராணுவத்துடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டுள்ளனர்.

கவிழ்க்கப்பட்ட இடைக்கால சிவிலியன் அரசாங்கம் மீண்டும் அதிகாரத்துக்கு திரும்புவதற்கு வழிவகுப்பதாக இந்த ஒப்பந்தம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இந்த நாட்டை ஆண்டிருந்த மரபு வழித் தலைவரது இல்லத்தில் கைச்சாத்தான இந்த ஒப்பந்தத்தின் கீழ், அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பை நடத்திய ஜனாதிபதியின் காவற்படை என்ற விசேட படைப்பிரிவினர் தமது பாசறைக்குத் திரும்புவோம்என உறுதியளித்துள்ளனர்.

பதிலாக, நாட்டின் தலைநகரில் குவிக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் அவ்வூரிலிருந்து ஐம்பது கிலோமீற்றர்கள் தள்ளிப் போய்விடுவதற்கு சம்மதித்துள்ளனர்.

இந்த அதிகாரப் பரிமாற்றத்தை மேற்பார்வையிடுவதற்காக நைஜீரிய ஜனாதிபதி உள்ளிட்ட பல ஆபிரிக்கத் தலைவர்கள் நேற்று முன் தினம் பிற்பகல் புர்கினா பாசோவுக்கு விரைந்தனர். (3-7)

## சீனாவில் 600 அடி உயரத்தில் கண்ணாடிப்பாலம் அமைப்பு

### பயந்துகொண்டே பயணிக்கும் சுற்றுலாப்பயணிகள்



சீனாவில் உயரமான இரண்டு மலை உச்சிகளை இணைக்கும் விதமாக கட்டப்பட்டுள்ள கண்ணாடி பாலத்தை சுற்றுலா பயணிகள் பீதியுடனே கடக்கும் காட்சி ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவின் ஹூனான் பகுதியில் ஷினுஷாய் தாவரவியல் பூங்கா அங்குள்ள Stone Budha எனப்படும் மலையின் இரு உச்சிகளை இணைப்பதற்காக 590 அடி உயரத்தில் மரப்பாலம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. இந்நிலையில் சுற்றுலாப் பயணி களை கவரும் விதத்தில் முழுக்க முழுக்க கண்ணாடியினாலான பாலம் தற்போது அங்கு கட்டப்பட்டுள்ளது. சுற்றுலா பயணிகளின் பயன்பாட்டிற்காக நேற்று முன் தினம் அந்த கண்ணாடிப் பாலம் திறந்துவிடப்பட்டது. இந்த பாலத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் கண்ணாடி வீட்டின் ஜன்னலில் பயன்படுத்தப்படும் கண்ணாடியை விட 25 சதவீதம் உறுதியானது என்று பூங்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 600 அடி உயரத்தில் முழுவதும் கண்ணாடியினால் ஆன அந்த பாலத்தை பலரும் பீதியுடனேயே கடந்து செல்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# ஐ.நா. செயலர் ஆழ்ந்த இரங்கல்

(நியூயோர்க்)

மெக்காவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 700க்கும் மேற்பட்டவர்கள் பலியானர்கள். 800க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவத்திற்கு ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

மெக்கா புனித ஹஜ் பயணத்தின் போது. மினா நகரில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 3 இந்தியர்கள் உட்பட 717 பேர் பலியானார்கள். மேலும் 800-க்கும் அதிகமானோர் காயம் அடைந்தனர்.

இஸ்லாமியர்களின் 5 முக்கிய கடமைகளில் ஹஜ் புனித பயணமும் ஒன்றாகும். மெக்காவுக்கு அருகே உள்ளது மினா நகரம். ஹஜ் புனித பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்கள் இறுதி நிகழ்ச்சியாக மினாவுக்கு சென்று அங்குள்ள சாத்தான் தூண் மீது கல் எறிவார்கள். நேற்று முன்தினம் அங்கு கல் எறியும் நிகழ்ச்சி நடைபெற்ற போது திடீரென்று நெரிசல் ஏற்பட்டது. சாத்தானை நோக்கி செல்லும் பாதையில் 204 ஆவது தெருவின் அருகே ஜமாரட் பாலத்தின் நுழைவுப் பகுதியில் இந்த நெரிசல் ஏற்பட்டது. நெரிசலில் சிக்கி ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர். இந்த சம்பவத்தில் 717 பேர் பலியானார்கள். மேலும் 800-க்கும் அதிகமானோர் காயம் அடைந்தனர்.

இந்த துயரமான சம்பவத்திற்கு உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்தனர். இந்நிலையில் இந்த துயரமான சம்பத்திற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பும் இரங்கல் தெரிவித்துள்ளது.

ஐ.நா.சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் தனது இரங்கல் செய்தியில் கூறியதாவது.

இந்த சம்பவம். தன்னை மிகவும் துயரத்திற்குள்ளாக்கியுள்ளது. இந்த வருடாந்திர ஹஜ்பயணத்தின் முடிவில் பரிசுத்த ஈத் அல் - அதா முதல் நாளில் நடந்தது மிகவும் வேதனை தருகிறது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உண்மையான ஆழ்ந்த இரங்கலை ஐநா சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார். (3-7)

# பிரதமர் மோடி இரங்கல்

(புதுடில்லி)

பிரதமர் நரேந்திரமோடி தற்போது அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். சவுதி அரேபியாவில் உள்ள மினா நகரில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 700க்கும் அதிகமான ஹஜ் பயணிகள் பலியானது குறித்து அவர் மிகுந்த துயரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், "மெக்காவில் இருந்து மிகுந்த துயரம் அளிக்கும் செய்தி வந்துள்ளது. நெரிசலில் சிக்கி ஏராளமானோர் இறந்தது மிகுந்த வருத்தம் அளிக்கிறது. இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு, காயம் அடைந்தவர்கள் விரைவில் குணம் அடைய பிரார்த்திக்கிறேன்" என்று தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (3-7)

# காஷ்மீரில் கொடிகளைக்காட்டி இளைஞர்கள் போராட்டம்

## பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

ஜம்மு. காஷ்மீர் மாநிலத்தில் உள்ள ஸ்ரீநகரில் பாகிஸ்தான். தீவிரவாத இயக்க கொடிகளைக் காட்டியபடி போராட்டம் நடத்தும் இயக்கங்கள் செயற்படுகின்றன. இந்த இயக்கங்கள் படிக்கும் இளைஞர்களை தீவிரவாத பாதைக்கு இழுத்து செல்கின்றன. இது தொடர்




இளைஞர்களை விரட்ட பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசி வருகின்றனர்.


ஜம்மு காஷ்மீரில் பிரிவினைவாதிகள் பேரணிகளின் போது பாகிஸ்தான் கொடிகள் மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கங்களின் கொடிகளை ஏந்திச்செல்லும் செயல்கள் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கும் தீவிரவாத பாகவும் நம்பத்தக்க செய்திகள் அவ்வப்போதுவெளியாகிவருகின்றன.

மாநிலத்தில் குறிப்பாக வெள்ளிக்கிழமை என்றால் அமைதியை சீர்குலைக்கும் வகையில் ஆங்காங்கே சில வாலிபர்கள் பாகிஸ்தான் நாட்டு கொடி மற்றும் ஐ.எஸ்.தீவிரவாத இயக்கத்தின் கொடிகளைக் காட்டுவது வழக்கமாகி விட்டது. கடந்த சில மாதங்களாக இது போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகிறது.

எப்போதும் வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்ததும் ஐ.எஸ். தீவிரவாத இயக்கம். லஷ்கர்-இ-தொய்பா இயக்கம் மற்றும் பாகிஸ்தான் நாட்டின் கொடிகள் காட்டப்பட்டு வந்தன. ஆனால் நேற்று தொழுகைக்கு முன்னதாகவே வாலிபர்கள் இத்தகைய கொடிகளை காட்டி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அங்கு பதற்றம் நிலவுகின்றது. ஸ்ரீநகரின் இட்காக் பகுதியில் இத்தகைய கொடிகள் நேற்று காட்டப்பட்டுள்ளது. கொடியைக் காட்டிய இளைஞர்கள் பொலிஸார் மீது கற்களை வீசினர். இதனை யடுத்து அங்கு பாதுகாப்பை பலப்படுத்த கூடுதலாக பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இளைஞர்களை கட்டுப்படுத்த பொலிஸார் போராடி வருகின்றனர்.

தீவிரவாத இயக்கங்களின் கொடியை காட்டியபடி போராட்டம் நடத்தும் இளைஞர்களை விரட்ட கண்ணீர்ப்புகைக்குண்டுகளையும் பொலிஸார் வீசி வருகின்றனர். (3-7)

# மூன்று நாள் யோக பயிற்சி ஆயிரம் விதவைகள் பங்கேற்பு



(லக்னோ)

உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள விருந்தாவனில் தங்கியுள்ள கணவனை இழந்த பெண்கள் உடலளவிலும். மனதளவிலும் ஆரோக்கியத்துடன் வாழ வலியுறுத்தும் வகையில் மூன்று நாள் யோகா பயிற்சி முகாம் தொடங்கியது.

பல ஆண்டுகளாக குடும்பத்தினரால் புறக்கணிக்கப்பட்டு கைவிடப்பட்ட கணவனை இழந்த பெண்களில் ஏராளமானோர் உத்தரபிரதேசத்திலுள்ள இந்துக்களின் புனித நகரங்களான வாரணாசி மற்றும் விருந்தாவனில் கைவிடப்படுகின்றனர். இவர்களில் பலர். இங்குள்ள கணவனை இழந்த பெண்களுக்கான ஆசிரமங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

வெள்ளை உடை அணிவிக்கப்பட்டு. அனைத்து விதமான பண்டிகைகள். கொண்டாட்டங்களிலும் இருந்தும் விலக்கி தனிமையில் வசிக்க வைக்கப்படுகிறார்கள். போதிய சாப்பாடு. உடை. இருப்பிடம் போன்ற அடிப்படை தேவைகள் கூட சரிவர கிடைக்காமல் உள்ள அவர்களுக்கு சில தொண்டு நிறுவனங்கள் உதவிசெய்து வருகின்றன.

இந்நிலையில். இவர்கள் மன வலிமையுடனும் உடல்நலத்துடனும் வாழ்வதற்காக மூன்று நாள் யோகாசன பயிற்சி முகாம் நடத்த சுலாப் இண்டர்நேஷனல் என்கிற தொண்டு நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

நிதிஆயோக் ஆலோசகர் தேபிரதா தாஸ் தொடக்கி வைத்த இந்த முகாமில் சுமார் ஆயிரம் கணவனை இழந்த பெண்கள் பங்கேற் றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# போப் ஆண்டவரிடம் கடிதம் கொடுத்த சிறுமி சோபியா



அமெரிக்காவில்போப்ஆண்டவர் பிரான்சிஸ் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் வோஷிங்டனில் தனது திறந்தவெளி வாகனத்தில் சென்று மக்களை சந்தித்தார். அவரை பார்ப்பதற்காக மக்கள் பெருந்திரளாக கூடினர். தன்னை பார்க்க வந்த குழந்தைகளை பெற்றோரிடமிருந்து வாங்கி, அவர் அன்புடன் கொஞ்சினார்.


அங்குள்ள அரசியலசாசன வீதியில் வரும்போது. போப் ஆண்டவரை 5 வயது சிறுமி ஒருத்தி நெருங்கி சென்றபோது. பாதுகாவலர்கள் தடுத்தனர். ஆனால் அந்த சிறுமியை அவர் தன்னிடம் அழைத்து வருமாறு கூறினார்.

அவர்கள் அழைத்து சென்ற போது. அவர் அந்த குழந்தையை அரவணைத்து கொஞ்சி முத்தமிட்டார். அப்போது அந்த சிறுமி தன் வசமிருந்த ஒரு கடிதத்தை போப் ஆண்டவரிடம் அளித்தார். இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

அந்த சிறுமியின் பெயர் சோபியா குரூஸ். மெக்சிகோவைச் சேர்ந்த பெற்றோருக்கு. அமெரிக்காவில் பிறந்தவள்.

அவள் போப் ஆண்டவரிடம் அளித்த கடிதத்தில். "என் தந்தையை போன்றவர்கள் உரிய ஆவணங்களின்றி அமெரிக்காவில் தங்கி இருக்கலாம். ஆனால் அனைவரும் அமெரிக்காவுக்காக உழைத்திருக்கிறார்கள். அவர்கள் கண்ணியத்துடன் வாழ்வதற்கு தகுதி படைத்தவர்கள். அவர்கள் மரியாதையுடன் வாழ்வதற்கு உரியவர்கள். அவர்கள் குடியுரிமை சீர்திருத்தம் பெற வேண்டியவர்கள். இதற்கு நீங்கள் உதவ வேண்டும். ஆதரவு தர வேண்டும்" என கூறி இருக்கிறாள். (3-7)

# 105 வயதில் ஓடி சாதனை




ஜப்பானில் 105 வயதைக் கடந்த ஹிடோகிசி மியாஸாகி என்பவர் அதிவேகமாக ஓடி கடந்த புதன்கிழமை உலக சாதனை படைத்தார்.

100 மீற்றர்களை 42.22 விநாடிகளில் ஓடிக் கடந்த அவர். 105 வயதுடையவர்களுக்கான பிரிவில் உலகின் மிக வேகமான ஓட்டப் பந்தய வீரர் என கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றார்.

ஓட்டப் பந்தயத்தில் 105 வயதுடையவர்களுக்கான பிரிவையே இவர்தான் ஏற்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனை வயதில் அவர் இவ்வளவு வேகத்தில் ஓடியிருப்பது மருத்துவ உலகில் ஒரு விந்தை எனக் கூறப்படுகிறது.

எனினும். தனது வேகத்தில் தனக்கு திருப்தி இல்லை என்று கூறியுள்ள மியாஸாகி. கூடுதலாகப் பயிற்சி மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில். "உலகின் மிக வேகமான ஓட்டப் பந்தய வீரர் உசைன் போல்ட்டுடன் போட்டியிடுவதே எனது இலட்சியம்" என்றார் அவர்.

ஏற்கனவே. 100 வயது நிரம்பியவர்களுக்கான 100 மீற்றர் போட்டியில் 29.83 விநாடிகளில் கடந்த இவர் படைத்த சாதனை இதுவரை முறியடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# 14 இந்தியர்கள் உயிரிழந்தனர்



(புதுடில்லி)

மெக்கா கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களில் 14 பேர் இந்தியர்கள் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது. உயிரிழந்த 14 பேர் மற்றும் காயமடைந்த 13 பேரின் பட்டியலை வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

சவுதி அரேபியாவின் மெக்கா நகரில் ஒரே நேரத்தில் இலட்சக்கணக்கானவர்கள் திரண்டதால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் சிக்கி மொத்தம் 714 பேர் உயிரிழந்துள்ளனர். 800 க்கும்மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்த கூட்ட நெரிசலில்சிக்கிஉயிரிழந்தவர்களின் விபரங்கள்அடங்கிய பட்டியலை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. (3-7)

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்- 63

## சித்தமருத்துவ மாநாடும் கண்காட்சியும் - 2015



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

எம் இனிய உறவுகளே!

வடமாகாணத்தில் மீண்டும் ஒரு சித்தமருத்துவ மாநாடும் கண்காட்சியும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (24.09.2015) கல்மடு கிராமத்தில் ஆரம்பமானது. முதன் முறையாக "மாகாண மூலிகை கிராமம்" ஒன்றின் உருவாக்கத்தில் நாம் அனைவரும் கலந்து கொண்டது மகிழ்ச்சியைத்தந்தது. வடமாகாண முதலமைச்சர் கௌரவ நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட மாகாண மூலிகை கிராமத்தின் தோற்றம் சுதேச் வைத்தியத்துறையின் எதிர்கால பணிகளை விரிவுபடுத்தியிருப்பதோடு அதனது பயன்பாட்டினை மக்கள் பெறுவதற்கும் சுதேசவைத்தியத்தின் மகத்துவத்தை இன்னும் அறிந்துகொள்வதற்கும் உதவியிருக்கின்றது. எமது பாரம்பரிய வைத்தியத்தின் நுணுக்கங்களை மக்கள் அறிந்திட, பயன்படுத்திட இன்னும் அதன்பால் ஈர்க்கப்படுவதற்கு வழிகோலியிருக்கின்றது. வட மாகாணத்தில் பரந்துபட்டிருக்கும் தாவரங்களின் பல்வகைத்தன்மை பற்றிய முழுமையான விபரங்களை இன்னும் அறிந்து கொள்ள முடியாத நிலையில் இப்பிரதேசத்திலுள்ள அரியவளங்களான மூலிகைகளை முழுமையாக இனங்கண்டு அவற்றை பாதுகாப்பதற்கும், வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட முயற்சிகளினூடாக இம மூலிகைக் கிராமத்தின் ஆரம்பம் முன்னுதாரணமாகியிருக்கின்றது. வடமாகாண சித்தமருத்துவத் துறையின் முழுமையான ஒழுங்கமைப்பில் நவக்கிரியில் அரச மூலிகைத்தோட்டம் 10.06.2013 இல் சித்தமருத்துவக் கண்காட்சியும் கருத்தரங்குமாக நடைபெற்றது. சித்தமருத்துவ மாகாண பணிப்பாளர் வைத்திய கலாநிதி சியாமாதுரைரட்ணத்தினதும் அத்துறைசார்ந்த சித்தமருத்துவ வைத்தியர்கள் மற்றும் அவரது திணைக்கள உத்தியோகத்தர்களது அயராத உழைப்பின் பெறுபேறாகவே இக்கண்காட்சியும் கருத்தரங்கும் நடைபெற்றது எனலாம். எமது பாரம்பரிய முறைகளுடன் பாரம்பரிய மருத்துவத்திற்கான முக்கியத்துவத்தை நாம் கொடுக்க தவறிவிட்டதை பலரும் சுட்டிக்காட்டும் இவ்வேளையில் மூலிகைக் கிராமத்தின் தோற்றுவாய் இன்னும் இது சார்ந்த பலவிடயங்களை அனைவரும் தெரிந்துகொள்ள ஊக்கியாக அமைகின்றது.

எமது பாரம்பரிய வைத்தியத்தின் முக்கியத்துவத்தையும் வலிமையையும் எடுத்துக் கூறும் களமாகவே இவ்விழாவினை காணலாம். பல அரிய மூலிகைகளை விதம்விதமான வடிவங்களில் வளர்த்து இங்கே அழகுற காட்சிப்படுத்தியிருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

"உணவே மருந்து, மருந்தே உணவு" என்பது வேதவாக்கு. நாமனைவரும் விவசாயத்தின் பக்கத்திலிருந்து மிகுந்த அக்கறை கொள்ளவேண்டியதனைத்தும் இதனுள்ளே அடக்கம். நாம் வாழ்கின்ற சூழல் மிகவும் முக்கியமானது. அதிலும் இச்சூழலில் உள்ள உயிரினங்கள் தவிர தாவரங்கள் அனைத்துமே எமக்கு ஏதோ வகையில் பயன்தரக்கூடியன. குறிப்பாக நாம் உண்ணும் உணவில் மருத்துவத்தன்மை நிறைந்தே இருக்கின்றது. அதனை இன்னும் சிறப்பாக்கி அனைத்துவகை உணவுகளையும் உண்ணும் நிலைக்கு நாம் வரும்போது தான் எமக்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்கள், விற்றமின்கள் என்பனவற்றை நாம் பெற முடியும். எமக்குவரும் நோய்களை குணப்படுத் துவதற்கு இயற்கையின் வரப்பிரசாதமான மூலிகைகள் பெரிதும் பயன்படுகின்றன. மேலைத்தேய மருத்துவத்தினால் இயலாததை மூலிகைகளைக் கொண்டு மாற்றியிருக்கின்றார்கள். மேலும் மேலைத் தேய மருத்துவத்திற்கான மருந்துப்பொருட்கள் தாவரங்களிலிருந்தே கண்டுபிடிக்கப்படுகின்றன. இத்தகைய மதிப்புள்ள சித்தமருத்துவத்துறை மக்களிடையே பிரபல்யமடையவதற்கு இம்மருத்துவத்துறை பற்றிய நம்பிக்கையும் விழிப்புணர்வும் முக்கியமானதாகும். இவ்விரண்டையும் மையமாக வைத்து இம்மூலிகைக் கிராமத்தின் எழுச்சி அமைந்திருப்பது நல்லதொரு ஆரம்பமாகவே கொள்ளலாம். மாகாண சுகாதார அமைச்சர் சத்தியமூர்த்தி குறிப்பிட்டபடி இம்மூலிகை கிராமத்தில் சித்த வைத்தியசாலையின் அவசியம் குறிப்பிடப்பட்டது. சித்தமருத்துவத்துறையை மேம்படுத்துவதற்கு பல விடயங்களை பல பக்கத்திலிருந்து செய்யவேண்டி யிருக்கின்றது. இத்துறைசார்ந்த வைத்தியர்கள் அவசியம் சுதேச வைத்தியக் கலையான நாடிபிடித்து நோயை இனங்காண முயலவேண்டும். பாரம்பரியமாக வைத்தியம் செய்யும் சுதேச மருத்துவர்கள் நாடிபிடித்து நோயை இனங்காணும் வழிமுறையை அனுபவத்தை விருத்திசெய்தல் வேண்டும். இந்த இடத்தில் பாரம்பரிய வைத்தியத்தை கடைசி வரைசெய்து நாடிபிடித்து வைத்தியம் செய்யும் கலையை சித்தவைத்திய மாணவர்களுக்கு கற்பித்த ஆசானும் முன்னைநாள் மாகாண சுதேச பணிப்பாளருமாக கடமையாற்றி பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினருமாக இருந்து தன்கடமையில் கண்ணாகி அண்மையில் இறைபதமடைந்த வைத்திய கலாநிதி றோமகேஸ்வரனை நினைந்து கொள்வது சாலச்சிறந்தது. பலருக்கு வழிகாட்டியாகியவர் அவர்.

இவ்வழிமுறையில் பல வைத்தியர்கள் தமது வைத்தியத்தை செய்தாலும் ஏனையவர்களும் இதனை பின்பற்ற வேண்டும். அதுவே இவ்வைத்திய முறை மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்யும். சித்தர்கள் அருளிய முறைகளை முறையே கடைப்பிடித்து நோயைக் குணமாக்கும் கலையை கற்றுக் கொள்ளவேண்டும் என்ற எதிர்பார்ப்பு பலரிடம் பலமாக இருக்கும் நிலையில் அதுபற்றிய சிந்தனையை சிறப்பை எண்ணிப்பார்ப்பது மிகவும் முக்கியமானது.

சித்தவைத்தியத்துறையில் ஆயுர்வேதம், சித்தவைத்தியம், யுனானி வைத்தியம் இன்னும் மூலிகை மருத்துவம் ஆகியனகிளைகளாக இருப்பினும் அவற்றை அழியவிடாது பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்குமானது. இவ்வைத்திய முறைகளுக்கிடையே ஒற்றுமை, வேற்றுமையிருப்பினும் ஒவ்வொன்றும் தனித்துவமானவையாகவே கருதவேண்டும். மேலும் மூலிகைகளின் கிடைதன்மை, அவற்றைசரியாக இனங்காணல், அவற்றினது பரம்பல், இன்னும் தேவைப்படும் மூலகைகளை விருத்திசெய்தல் என்பனவற்றை முக்கியப்படுத்தி வருங்காலத்தில் மூலிகைப்பயிர்களை இன்னும் அழியவிடாது பேணிப்பாதுகாப்பதோடு அவற்றின் பயன்பாட்டையும் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். மேலைத்தேய வைத்திய முறைகளால் இயலாததை மூலிகை மருத்துவத்தால் குணமாக்க வேண்டும். இதற்காக சுதேச வைத்திய முறைகளுக்கு முழுமையான சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன் அவர்களது மருத்துவத்திற்கும் முக்கி யத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

நமதுநாட்டில் பலவகையான மூலிகைத்தாவரங்கள் உள்ளன. அருமை பெருமையாகவுள்ள இம் மூலிகைகளை அழியவிடாது பாதுகாத்தல் மிகமுக்கியமானது. மேலும் சித்தவைத்தியத்தின் முக்கியத்துவத்தையும் ஆளுமையையும் சிறப்பையும் இது போன்றமூலிகைக் கிராமங்களின் உருவாக்கத்தின் மூலமாகமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். மூலிகை சார்ந்த ஆய்வுகளை முடுக்கிவிட்டு அதனது பயன்பாட்டைமக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும். இது பற்றிய ஆய்வுகள் விஞ்ஞானத் துறை, விவசாயத்துறை மற்றும் மருத்துவத்துறைகளில் செய்யப்பட்டாலும் இவையனைத்தையும் சித்தமருத்துவத்துறையில் நடைபெறவேண்டியதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். இதற்காக சித்தவைத்தியத் துறையுடன் இணைத்து அதனை தரமுயர்த்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்தவைத்திய நிறுவனமாக தரமுயர்த்தப்படுகின்றது. சித்தவைத்திய பாடத்திட்டத்தில் மாணவர்களது ஆராய்ச்சியும் உள்ளடக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண குடாநாட்டில் பரவலாக வடமாகாண சித்தவைத்தியத்துறையினால் மூலிகைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியது. அதிலும் அராலியில், நவக்கிரியில், திருநெல்வேலியில் தற்போது கல்மடுவில் என பல இடங்களிலும் இத்தோட்டங்கள் அமைக்கப்பட்டிருப்பது மாணவர்கள் மக்கள் விவசாயிகள் எனப்பலரும் வந்துபடிப்பதற்கு ஏதுவாக இருக்கின்றது. கல்மடுவினை மூலிகைக் கிராமமாக மீளப்புதுப்பித்தது முன்னுதாரணமாகும். இக்கிராமத்தை வடமாகாணத்திற்குரிய" மூலிகைத் தொழில்நுட்பக் கிராமமாக மாற்றியமைக்க வேண்டும். இதற்கான வசதிவாய்ப்புக்களையும் மாகாணசபையும் சுதேச அமைச்சும் ஆராயவேண்டும். மேலும் வடமாகாணத்திலுள்ள மூலிகைகளை பூகோள தகவல் ஒழுங்கு (Geographical Positioning System) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவற்றை இலத்திரனியல் வரைபடத்தில் குறித்து வைத்திருப்பது எதிர்காலத்தில் அவற்றைப் பேணிப்பாதுகாக்க உதவும். இதற்கான சிறியளவிலான ஆய்வினை ஆரம்பித்திருந்தாலும் வடமாகாணத்திலுள்ள மூலிகைகளின் வகைகள், கிடைதன்மை, பரம்பல் என பல விடயங்களை தகவலாக பதிவு செய்ய வேண்டியதன் அவசியத்தையும் இதில் வலியுறுத்த விரும்புகிறேன். விவசாயத்தின் பக்கத்தில் மூலிகைகளின் சிறப்பைப் பயன்படுத்தி பீடைகளையும் நோய்களையும் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை ஆய்வு மூலம் கண்டறிய முயற்சிகள் நடை பெறுகின்ற அதேவேளையில் பலதுறைகளிணைந்த ஆய்வுகளுக்கும் களமமைக்க வழிசெய்தல்"வேண்டும். பல்துறை வாய்ப்புக்களையும் பலசெய்திகளையும் தாங்கி நடைபெறும் வடமாகாண சித்தமருத்துவ மூலிகைக் கிராமத்தின் எழுச்சியும் கண்காட்சியும் சிறப்பாக அமைந்திருக்கின்றது இனியொரு பசுமைப்புரட்சியில் மூலிகைத் தாவரங்களுக்கான முக்கியத்துவத்தை அதிகரித்து, அவற்றை அறிந்து தெரிந்து எமது உணவினுள் உள்வாங்கி முழுமையான ஊட்டச்சத்துள்ள சுகாதாரமான உணவை உண்பதற்கு வழிகோலவேண்டும். அதே வேளையில் கல்மடு கிராமத்தை மூலிகை மற்றும் தொழில்நுட்ப கிராமமாக பரிணமிப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். மாற்றத்திற்கான ஆரம்பப்புள்ளியாக கல்மடு கிராமத்தை தெரிவு செய்து அதிலுள்ள வளங்கள், மனிதவளம் மற்றும் மக்களின் எதிர்பார்ப்பு என்பவற்றினை முழுமையாக அறிந்து இக்கிராமத்தை மூலிகை மற்றும் தொழில்நுட்ப கிராமமாக பரிணமிக்கும் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கின்றேன். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அனைத்து துறைகளையும் இதில் உள்வாங்கி இம்மாற்றத்தை இங்கு ஏற்படுத்துவதற்கு நாமனைவரும் முன்னிற்க வேண்டும். இதில் கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாயபீடம் மற்றும் பொறியியல் பீடங்களின் பங்களிப்பு அவசியமானதாகும். பல்துறை விற்பன்னர்களை இக்கிராமத்திற்கு வரவழைத்து அவர்களின் ஆலோசனைகளுடன் இக்கிராமத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். சுற்றுலாத்துறையின் இணைப்பு இக்கிராமத்திற்கு அவசியமாகும். அதுசார்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறைகளை இக்கிராமத்தை நோக்கி நகர்த்தவேண்டும். தேசத்தின் அபிவிருத்தி கிராமங்களின் வளர்ச்சியில் தங்கியிருக்கின்றதென்பதனை நாமனைவரும் உணர்ந்தால் அந்த தொடக்கப் புள்ளியாக கல்மடு கிராமத்தை நாம் வைத்து அபிவிருத்தியை முடுக்கிவிடலாம். மறைந்தமேதை அப்துல் கலாமின் கிராமத்தை அபிவிருத்தி செய்யும் கனவும் இதனையே குறித்துச் சொல்கின்றது. வாயளவில் பேச்சில் இவற்றையெல்லாம் நாம் பேசுவதைவிட செயலில் செய்துகாட்டும் காலமாக வருங்காலத்தை மாற்றிக்காட்டுவோம். கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த காற்றாடி மூலம் தண்ணீர் பெறும் அமைப்பை பலரும் கவனிக்கத் தவறியதாக தெரிகின்றது. காற்றாடியும் காற்றின் வேகம் குறைவாக இருந்ததனால் பெரிதாக சுழலவில்லை. இன்னும் முயற்சியுங்கள் இளைஞர்களே! குறையை கண்டு பிடித்து நிறைவுசெய்யுங்கள். உங்கள் முயற்சி என்றோ ஒருநாள் பலனளிக்கும். உங்களையும் இந்த உலகம் திரும்பிப் பார்க்கும். மாற்றம் மனதளவில் மக்களுக்குள் இருந்துவரவேண்டும். இந்த மாற்றம் நிச்சயமாக மாகாணத்தின் அபிவிருத்திக்கான அணிகலனாக தேசத்தின் விருத்திக்கான அடிக்கல்லாக இருக்கும்.



இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 60

# 35 கிலோ கிராம் கஞ்சாவுடன் முன்னாள் ராணுவ மேஜர் கைது

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கெலனிகம பிரதேசத்தில் வைத்து. 35 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் முன்னாள் இராணுவ மேஜர் ஒருவர் வளானகலால் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெல்லவாய பிரதேசத்திலிருந்து கொழும்பிற்கு எடுத்து வந்து மீண்டும் கொழும்பிலிருந்து எடுத்துச் செல்லும் போதே இந்தப் போதைப் பொருளை அதிகாரிகள் மீட்டுள்ளனர். இராணுவ அடையாள அட்டை ஒன்றை வைத்திருந்த குறித்த நபர் மாதம் ஒன்றுக்கு 90 ஆயிரம் ரூபா குத்தகை செலுத்த வேண்டிய அடிப்படையில் அதிநவீன கார் ஒன்றை கொள்வனவு செய்து அதன் ஊடாகவே போதைப் பொருள் கடத்தியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.


மேலும் மீட்கப்பட்ட கஞ்சாவின் சந்தைப் பெறுமதி 7 இலட்சம் ரூபா என அதிகாரிகள் தெரிவித்தனர்.

2012ஆம் ஆண்டு பணி இடைநிறுத்தப்பட்ட இராணுவ மேஜர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்க யோசனைக்கு இலங்கை அனுசரணை!

(கொழும்பு)

**இலங்கை தொடர்பில் நேற்று முன்தினம் ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட போர்க்குற்ற யோசனைக்கு தாமும் அனுசரணை வழங்க இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**



நல்லிணக்கத்தை மேம்படுத்துவது என்ற அடிப்படையில் அமெரிக்க சார்பு நாடுகளால் நேற்று முன்தினம் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது.

இந்த யோசனையை அடுத்து, எதிர்காலத்தை எந்த அச்சமும் இன்றி எதிர்கொள்ள முடியும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது அவர் இதனைத் தெரிவித்தார். இலங்கையினால், சர்வதேச சமூகத்துடன் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் உள்நாட்டு பொறிமுறை தொடர்பான இணக்கப்பாட்டை எட்டமுடிந்துள்ளது.

இலங்கையின் உள்நாட்டு பொறிமுறைக்குள் சர்வதேச நீதிபதிகளும் பங்கேற்கும் வகையில் இது அமைந்துள்ளது என்று ரணில் தெரிவித்தார்.

எனவே இந்த யோசனைக்கு அனுசரணை வழங்க இலங்கை அரசாங்கமும் தீர்மானித்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை உரிய அரசியல் அமைப்பு மாற்றங்களை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணவும் அரசாங்கம் இணங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.(இ-7)

# மகிந்தவின் முறைகேடுகள் தொடர்பில் மக்களிடம் சாட்சியங்களை பெற முடிவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முறைகேடுகள் மற்றும் ஊழல் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்களிடம் சாட்சியங்களைக் கோர முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாரிய முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சுயாதீன தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பப்பட்ட மகிந்தவின் தேர்தல் விளம்பரங்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட முறைகேடான செயற்பாடுகள் காரணமாக சுமார் இரண்டு கோடி ரூபா அந்த நிறுவனத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனினும் இதுகுறித்து வாக்குமூலம் அளித்துள்ள மகிந்த ராஜபக்ஷ, தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பு என்றும் தனக்கு எந்தவித தொடர்பும் இல்லை என்று நிராகரித்திருந்தார்.

இந்நிலையில் மகிந்தவின் முறைகேடுகள் தொடர்பில் பொதுமக்கள் சாட்சியங்களை கோர ஜனாதிபதி ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இதன் மூலம் பொதுமக்களும் தங்களுக்குத் தெரிந்த தகவல்களை ஆணைக்குழு முன்னிலையில் வழங்க முடியும் என்பதுடன், பொதுமக்களின் பெரும்பாலான சாட்சியங்கள் ஒழுங்கான முறையில் வழங்கப்படுமிடத்து மகிந்த கைது செய்யப்படவும் வாய்ப்புள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# மாற்றங்களை ஏற்படுத்த இதுவே சிறந்த தருணம்

## அநுரகுமார தெரிவிப்பு

அரசியல் மாற்றங்களை இலங்கையில் ஏற்படுத்த தற்போதைய சூழ்நிலையே மிகவும் சிறந்த தருணம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். மக்கள் விடுதலை முன்னணியினால் கொண்டுவரப்பட்ட 20 முன்மொழிவுகளின் முக்கியத்துவம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிலையில், 20 முன்மொழிவுகள் கொண்ட திட்டம் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிகழ்வில், பல்



கலைக்கழக விரிவுரையாளர்கள், கலைஞர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் தொழில் உட்பட சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## வாழ்க்கை ஒரு தவம்!

சேதம் அடையக்கூடிய ஐந்து உறுப்புக்களையும் பாதுகாப்பான வலிய ஓட்டுக்குள் ஆமை இழுத்துக் கொள்வது போல உள்ளச் சமநிலை என்ற பாதுகாப்பில் ஐம்புலன்களும் ஒடுங்கவேண்டும் என்று சொல்கிறது கீதை. 'பின்னாளில் மகாகவி பாரதி பக்தி உடையார் காரியத்தில் பதறார்' என்று சமூகத்தின் செவிகளில் தேன் பாய்ச்சிய கருத்தும் இதுவே.

பதறாத காரியம் சிதறாது. என்று பல காலம் எழுதிய கவிதை –அதுதான் பழமொழி–படித்தது உண்டே. உணர்ச்சி மேலோங்கிய படபடப்பு, பரபரப்பு, காரியத்தின் மேன்மையைக் கெடுத்து விடுகிறது. பெரும்பாலும் உணர்ச்சி தவறாத முடிவுகளில் தள்ளி விடுகிறது. கோபம், பச்சாதாபம் போன்ற உணர்ச்சிகளின் தூண்டுதலால் எடுக்கப்பட்ட முடிபுகள் தாம் நம் வாழ்வில் சரிவுக்கான காரணங்கள்.

சமநிலையில் எடுக்கப்பட்ட முடிபுகள், சமவெளியில் உருவான நாகரிகம் போல...பதற்றம் இல்லாத மனநிலையில் விளைந்த தீர்மானங்கள் தீர்க்கமானவை, சத்தியமானவை, நியாயமானவை, சமுகத்திற்கு அவசியமானவை.

துன்பதிற்கும் உயிருக்கும் பண்டமாற்று செய்யும் வாழ்க்கைச் சந்தையில் சில பேர் இன்பத்துக்கும் உயிரை விற்கிறார்கள். இது பெரிய வேடிக்கை அல்லவா? இரண்டு இலட்சம் ரூபாய் லாட்டரி குலுக்கலில், ஓர் இருதய நேயாளிக்குப் பரிசு கிடைத்து விட்டது. பரபரப்பாக செய்தியை அவரிடம் சொல்ல வந்த குடும்பத்தாரை டாக்டர் கடிந்து கொண்டார். திடீரென்று சொன்னால் இந்த மகிழ்ச்சியை அவர் இதயம் தாங்காது என்று விளக்கி, தாமே சொல்லுவது என்று தீர்மானித்தார்.

மெல்ல மெல்ல நலம் விசாரித்தார். வெவ்வேறு விஷயம் பேசி விட்டு சிரித்தபடி கேட்டார்.

உங்களுக்கு லாட்டரியில் இருநூறு ரூபாய் விழுந்தால் என்ன செய்வீர்கள்?

எங்கே விழப் போவுது...விழுந்தா நீங்க எழுதின மருந்து எல்லாத்தையும் வாங்குவேன். என்றார் நோயாளி.

ஒரு பத்தாயிரம் விழுந்தால்... இழுத்தார் டாக்டர்.

வீடு ஒழுகுது. ரிப்பேர் செஞ்சிடுவேன்... என்றார் அவர்.

இலட்ச ரூபாய் விழுந்தால்?

பொண்ணு கல்யாணத்தை முடிச்சிடுவேன். கவலை இல்லை.

இரண்டு இலட்ச ரூபாய் நிஜமாகவே விழுந்தால் என்ன தான் செய்வீர்கள்? உண்மையைச் சொல்லுங்கள் என்று இறுதியாக விஷயத்துக்கு வந்தார் டாக்டர்.

என்ன செய்வேன்... எவ்வளவு நல்ல டாக்டர் நீங்க... சாவிலிருந்து என்னைக் காப்பாற்றியவர். அதனால் ஒரு இலட்சம் ரூபாய் உங்களுக்கே கொடுத்து விடுவேன். என்றார் நோயாளி. அடுத்த விநாடி ஆ என்ற அலறல். நெஞ்சைப்பிடித்தபடி மயங்கி விழுந்தார் டாக்டர்! அந்த இன்ப அதிர்ச்சியைத் தாங்காமல் டாக்டரது இருதயம் நின்று போய் விட்டது!

சுகமும் துக்கமும் இரண்டுமே ஆபத்தானவை தான். சமநிலை தான் சரியான வாழ்க்கைவழி. ஒரு நிமிட ஆத்திரத்தில் கொலை செய்து விட்டு வாழ்நாள் எல்லாம் வருந்துவது... ஒரு நொடி இரக்கத்தால் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு விட்டு வாழ்வெல்லாம் அவளையும் அழ வைத்து தானும் அழும் முட்டாள்தனம்... ஒரு கண இன்பம் கருதி ஒரு முழு வாழ்க்கையை நாசமாக்கும் வெறி... இவை யாவும் ஸ்திதப்ரக்ஞனுக்கு இல்லை. அவனது வாழ்க்கை முழுவதும் ஒரு தவம். ஒரு யோகம்... ஒரு பரிசுத்தமான யாகம்!

# தமிழ் சினிமா வரலாறு

12

## கே.சுப்பிரமணியம் செய்த புரட்சி!

...இந்த சமயத்தில் ஒரு பெண் துறவி வந்து சாரங்கதரனுக்கு கை- கால் வருமாறு செய்கிறார். கிழ மன்னன் திருந்துகிறான். சாரங்கதரன்- சித்ராங்கி திருமணம் நடைபெறுகிறது.

இந்த மாறுதலுடன் படத்தின் பெயரும் நவீன சாரங்கதரா என்று மாற்றப்பட்டது.

நவீன சாரங்கதரா படம் வெளிவந்து ஓகோ என்று ஓடியது. பாகவதர் பாடிய சிவபெருமான் கிருபை வேண்டும் என்ற பாடல் பட்டி தொட்டி எல்லாம் ஒலித்தது.

கல்கத்தாவைச் சேர்ந்த இந்து பாலா என்ற பாடகி பெண் துறவியாகத் தோன்றி மீரா பஜன் பாடல்களை அருமையாகப் படினார்.

சுப்பிரமணியம்- பாகவதர்- எஸ்.டி.சுப்புலட்சுமி கூட்டணி மீண்டும் வெற்றிபெற்றது.

### முன்னோடி

பாகவதரை மட்டும் அல்ல இசைவாணி எம்.எஸ்.சுப்புலட்சுமி, கனவுக்கன்னி டி.ஆர்.ராஜகுமார் ஆகியோரை அறிமுகப் படுத்தியவரும் கே.சுப்பிரமணியம் தான்.

அத்துடன் அந்தக் காலத்திலேயே புரட்சிகரமான கருத்துக்கள் கொண்ட சேவாசதனம் தியாகபூமி முதலிய படங்களை உருவாக்கியவரும் அவரே. எனவே தமிழ்ப்பட உலகின் தந்தை என்று போற்றப் படுகிறார்.

பாகவதரை திரை உலகுக்கு அளித்த கே.சுப்பிரமணியம், பவளக் கொடி, நவீன சாரங்கதரா ஆகிய படங்களை அடுத்து பக்தகுசேலா என்ற படத்தை தயாரித்தார்.


பாலயோகினி படத்தில் பேபி சரோஜா

இதில் கிருஷ்ணன், குசேலரின் மனைவி ஆகிய இரு வேடங்களில் எஸ்.டி.சுப்புலட்சுமி நடித்தார்.

எஸ்.டி. சுப்புலட்சுமியின் முல்லைச் சிரிப்பு அக்காலத்தில் மிகவும் புகழ்பெற்றது.

ஆண் வேடத்தில் கிருஷ்ணனாக அவர் அற்புதமாக நடித்தது, அனைவரையும் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது.

இப்படத்தில் குசேலராக நடித்தவர் பாடலாசிரியர் பாபநாசம் சிவன்.

27 குழந்தைகள் பெற்று வறுமையுடன் போராடிய ஏழை பிராமணர் வேடத்துக்கு அவர் மிகவும் பொருத்தமானவராக இருந்தார்.

### பாலயோகினி

சாதி வெறியை சாடும் சமூக சீர்திருத்த கதை ஒன்றை பாலயோகினி என்ற பெயரில் படமாக்க விரும்பினார் கே.சுப்பிரமணியம். வேலை இல்லாத் திண்டாட்ட பிரச்சினையையும் படம் பிடித்துக் காட்டக்கூடிய விதத்தில் கதை அமைந்தது. இதில் ஒரு சிறுமியின் கதாபாத்திரம் முக்கியமானது.


எம்.எஸ்.சுப்புலட்சுமி, எஸ்.டி.சுப்புலட்சுமி, பேபி சரோஜா ஆகியோருடன் கே.சுப்பிரமணியம் (1937)

அந்த வேடத்தில் தன் தம்பி விசுவநாதனின் மகளான பேபி சரோஜாவை நடிக்க வைத்தார். படத்தில் விதவையாக பிராமண விதவைப் பெண் ஒருவரையே நடிக்க வைத்தார்.

படம் பெரிய வெற்றியைப் பெற்றது. குறிப்பாக பேபி சரோஜா பெரும் புகழ்பெற்றார்.

அந்தக் காலத்தில் ஆங்கிலப்படங்களில் ஷெர்லி டெம்பிள் என்ற குழந்தை நட்சத்திரம் பிரமாதமாக நடித்து உலகப்புகழ்பெற்றிருந்தார்.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 282

## அஹங்காரத்தை விடுதல்

...இந்த போதனையின் மீது மீண்டும் மீண்டும் தியானம் செய்யுங்கள். உங்களிடம் உண்மை ஒருநாள் உதயமாகும்.

இன்னொரு விடயம்.... உங்கள் வாழ்க்கையிலிருந்து எதையும் விலக்காதீர்கள்.

நீங்கள் வாழ்க்கையில் எதையோ தவறவிடுகிறீர்கள் என்று ஒருபோதும் எண்ணாதீர்கள்.

ஆன்மீகம் என்பது எதையும் ஒருபோதும் விலக்குவதல்ல. எப்பொழுதும் எல்லாவற்றையும் அரவணைத்துக் கொள்வது.

உங்கள் வாழ்க்கையிலிருந்து எதையாவது விலக்குவீர்களானால் எதையோ தவறவிடுகிறீர்கள் என்று பொருள்.

அதற்கு பதில் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து ஒன்று சேர்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் அப்பொழுது முழுமையாகிவிடுவீர்கள். முழுமையாகும்பொழுது புனிதமாகிவிடுவீர்கள்!

சில விடயங்களில் உங்களுக்கு ஆர்வம் இல்லையென்றால் அது வேறு விடயம்.

அவற்றை நீங்கள் உங்கள் வாழ்க்கையில் சேர்த்துக்கொள்வதைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை.

வெறுமனே விழிப்புணர்வுடன் செயற்பட்டு மேலே சென்று கொண்டேயிருங்கள்.



புரிந்துகொள்ளுங்கள்... ஒரு விஞ்ஞானியானவன் வெளியுலகில் தான் கண்டுபிடித்ததை மற்றவர்களும் அனுபவிக்க அதை மீண்டும் உருவாக்குவதற்காக ஒரு சூத்திரத்தை உருவாக்குகிறான்.

ஒரு குருவோ உள்ளுலகில் தான் அனுபவித்ததை மற்றவர்களும் அனுபவிப்பதற்காக அந்த அனுபவத்தை மீண்டும் உருவாக்குவதற்காக, ஒரு சூத்திரத்தை உருவாக்குகிறார்.

அவர் தனது விழிப்புணர்வில் தான் அனுபவித்த ஆனந்தத்தை மற்றவர்களும் அனுபவிப்பதற்காக அதை மீண்டும் உருவாக்குவதற்கான ஒரு சூத்திரத்தை உருவாக்குகிறார். நான் இப்பொழுது உங்களுக்கு இறுதி யான ஆனந்தம் அல்லது நித்யானந்தத்தை உணர்வதற்கான ஒரு சூத்திரத்தை தருகிறேன்.

சொல்லுங்கள்...?

ஸவாமிஜி, நாங்கள் எவ்வாறு எங்கள் அஹங்காரத்தை அழிப்பது?

முதலில் உங்களிடம் அஹங்காரம் செய஥்படும் நிலையிலோ அல்லது சாத்வீகமாகவோ ஏதோ ஓர் வடிவில் இருக்கிறது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுங்கள்.

பிறகு அது நாம் இதுவரையில் விவாதித்த பல்வேறு வழிகளிலும் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

உங்களுடைய எல்லா குற்ற உணர்வு, ஆசைகள், பயம், பணிவு, சுய முக்கியத்துவம் ஆகிய அனைத்துமே உங்களுடைய நான் மற்றும் எனது என்னும் திட உணர்வால் நிகழும், அஹங்காரத்தின் பல்வேறு வடிவங்கள்தான். இதை நீங்கள் புரிந்துகொண்டால் கவனிப்பவராகிவிடுவீர்கள். அதனால் முழு வாழ்க்கையுமே ஒரு நாடகம்தான் என்பதைப் புரிந்துகொள்வீர்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# சர்வதேச விசாரணை முடிந்துவிட்டதாக சில அரசியல்வாதிகள் குழப்புகின்றனர்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜனா குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஐ.நா.வினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் இலங்கையில் இறுதிக்கட்டத்தில் நடந்த போருக்கு சர்வதேச விசாரணை தேவை, அது கலப்பு நீதிமன்றம் ஊடாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் சர்வதேச விசாரணை முடிந்துவிட்டதாக சில முதிர்ந்த அரசியல்வாதிகள் மக்களை குழப்பிவருவதாக கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்(ஜனா) குற்றம்சாட்டியுள்ளனர்.**

நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு, கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2013ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வடக்கு மாகாணசபையினால் அங்குள்ள முன்பள்ளிகளுக்கு ஆறாயிரம் ரூபா வேதனம் வழங்கப்படுகின்றது. ஆனால அதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையினால் இங்குள்ள முன்பள்ளிகளுக்கு எந்தவித வேதனங்களும் வழங்கப்படவில்லை.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஆற்றவேண்டிய சில வேலைத்திட்டங்கள் எங்களது இயலாமை காரணமாக அந்தவேலைத்திட்டங்கள் முதலமைச்சரினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்காரணமாக எமது பாடசாலைகளும் மக்களும் புறக்கணிக்கப்படும் நிலை கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கு உள்ளூராட்சி சபைகள் ஊடாக ஒதுக்கீடுகளைப் பெற்று முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வேதனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இன்று தமிழர்கள் மத்தியில் ஒரு குழப்பமான சூழ்நிலையினை எமது அரசியல்வாதிகள் உருவாக்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். புரையோடிப்போயுள்ள எமது இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைகளை மேற்கொண்ட போர்க்குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைக்க வேண்டுமாக இருந்தால் அதற்கு சர்வதேச விசாரணை தேவையென நாங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றோம். தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மேலாக தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

ஆனால் சில முதிர்ந்த அரசியல்வாதிகள் சர்வதேச விசாரணைகள் நடைபெற்றுவிட்டது, சர்வதேச விசாரணை இனி எதற்கு என கூறுகின்றனர். ஆனால் ஐ.நா.வினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் இலங்கையில் இறுதிக்கட்டத்தில் நடந்த போருக்கு சர்வதேச விசாரணை தேவை, அது கலப்பு நீதிமன்றம் ஊடாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ள நிலையில் சர்வதேச விசா ரணை முடிந்து விட்டதாக மக்களை குழப்புகின்றனர்.


நாங்கள் இதுதொடர்பில் தெளிவாக இருக்க வேண்டும். கடந்த காலத்தில் இலட்சக்கணக்கான உயிர்களை இழந்த நாங்கள் மீண்டும் ஒரு இழப்பினை சந்திக்கக் கூடாது என நினைப்போமானால் நாங்கள் ஒன்றுபட்டு சர்வதேச விசாரணை ஊடாக இணைந்த வடகிழக்கில் நிரந்தர தீர்வினைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தான நகர்வு இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 200 | 200 |
| தக்காளி | 100 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 50 |
| கோவா | 80 | 50 | 80 | 70 |
| கரட் | 100 | 50 | 120 | 60 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 140 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 100 | 120 |
| பாகற்காய் | 150 | 100 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 70 | 60 | 80 | 70 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 | 70 |
| பீற்றூட் | 40 | 20 | 50 | 40 |
| கறிமிளகாய் | 100 | 60 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 80 | 100 |
| போஞ்சி | 150 | 200 | 160 | 160 |
| கத்தரித்தம்புள்ள | 60 | 50 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 25 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 160 | 200 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-70 | 40-45 | 50 |
| இராசவள்ளி | 140 | 200 | — | — |
| வெங்காயப்பூ | 200 | 150 | 200 | 120 |
| முள்ளங்கி | 40 | 40 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 500

சகிரா சகிரா




வினோதா சிவனேசராசா




ரதீனா சுரேஸ்




கிரேஷி கிருஷ் கிருஷ்ணா



விச்சு ஹானி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மக்கள் புரட்சி வெடிக்கட்டும்

## சுதந்திர தமிழீழம் மலரட்டும்




**"தமிழீழ மாமண்ணில் என்றென்றும்**
**புலிவீரர் நடந்த கால் தடமிருக்கும்**
**தமிழ் மாந்தர் உள்ளவரை**
**என்றென்றும் அவர் நெஞ்சில்**
**மாவீரர் படமிருக்கும்!!!"**

### தியாகதீபம் மாவீரன் திலீபனின் 28 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று

மக்கள் புரட்சி வெடிக்கட்டும்...! சுதந்திர தமிழீழம் மலரட்டும்...!! என முழக்கமிட்டு நல்லூரில் உண்ணா நோன்பில் இருந்தான் அந்த மாவீரன். 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி தமிழினத்தின விடுதலைப் போராட்டத்தில் மகத்தான சரித்திரம் படைத்த நாள் தமிழ் மக்களின் நியாய மானநேர்மையானஐந்துஅம்சகோரிக்கைகளை முன்வைத்து 15. 09.1987 தொடக்கம் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளர் திலீபன் உண்ணா விரதப் போராட்டம் தொடங்கி பன்னிரண்டு நாளாக தொடர்ச்சியாக 265 மணித்தியாலங்களை முடித்துக் கொண்ட வேளையில் 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.58 மணியளவில் தமிழீழ மண்ணிற்கு தன் உயிரை ஈர்ந்து தமிழ் மக்களை மீளாத் துயரில் ஆழ்த்தினான்.

ஈழத் தமிழ் மக்கள் சார்பிலான கோரிக்கைகளை 13-09-1987 அன்று இந்தியா உயர் ஸ்தானிகரின் கையில் நேரடியாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி 24 மணித்தியால அவகாசமும் கொடுத்திருந்தார்கள் ஆனால் 15-09-1987 வரை எதுதப் பதிலும் தூதுவரிடமிருந்து கிடைக்காத காரணத்தினால் சாகும்வரை உண்ணாவிரதமும் மறியல் போராட்டமும் நடத்துவதேயென தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்களின் கூட்டத்தில் 13-09-1987 அன்று தீர்மானிக்கப்பட்டது. அதன்படிதான் திலீபனின் தியாகப் பயணம் ஆரம்பித்தது.

1.பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் தடுப்புக் காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர விடுவிக்கப்பட வேண்டும்.

2.புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

3.இடைக்கால அரசு நிறுவப்படும் வரை "புனர்வாழ்வு" என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

4.வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

5.இந்தியா அமைதிப்படையின் மேற்பார்வையில் ஊர்க்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப் பெறப்பட்டு தமிழ்க் கிராமங்கள் பாடசாலைகள் ஆகியவற்றில் குடி கொண்டுள்ள இராணுவ பொலிஸ நிலையங்கள் மூடப்பட வேண்டும்.

என்ற ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் உண்ணா விரதத்தை ஆரம்பித்தார்.

வல்லாதிக்க அரசுகளின் மௌனத்தால் பதினொரு நாட்கள் பார்த்தீபனின் வேட்கை தொடர்ந்தது. பதினோராவது நாள் உயிருடன் இருக்கிறாரா இறந்து விட்டாரா என்றே தெரியாத அளவுக்கு இருந்தார் திலீபன். அனிச்சையாக அவரது உடல் அசைவதன் மூலமே அவர் இன்னும் தோழர். திலீபன் உயிருடன் இருக்கிறார் என்று தெரிந்தது. அவர் கோமா நிலையல்இருந்தார். பெரிய கட்டில்ஒன்றை கொண்டுவந்து அதில் அவரை மாற்றினார்கள். அப்போது தான் அவர் படுக்கையிலேயே சிறுநீர் கழித்திருந்ததை பார்த்தார்கள். திலீபனுக்கு வேறு உடை மாற்றினார்கள். "ஓ மரணித்த வீரனே! உன் ஆயுதங்களை எனக்குத் தா. உன் சீருடைகளை எனக்குத் தா " என்ற பாடல் ஒலிக்கிறது அந்த பாடலைக் கேட்டுக் கொண்டே கோமாவில் விழுந்தார்.

அந்த இரவு அழுதுகொண்டே விடிந்தது. தொடர்ந்து இரு நூற்றி அறுபத்தி ஐந்து மணி நேரம் ஒரு சொட்டுத் தண்ணீரும் ஒரு பருகை உணவும் இல்லாமல் தனது திடமான கோரிக்கையை மட்டும் நெஞ்சில் வைத்திருந்த வீரன் சரியாக காலை 10.58 இற்கு வீர மரணம் அடைந்தான். அதிகாரத்துவம் அவனை சாகவிட்டுவிட்டது. ஆனால் அதுவே பெரும் கிளர்ச்சியாக உருவெடுத்தது. மீண்டும் அந்த மக்களை ஆயுதம் தாங்கிய போராட்டத்திற்கு வழி வகுத்தது. திலீபனின் மரணம் மனிதநேயம் தழைக்கும் இடத்தில்தான அகிம்சை வெல்லும் உலகுக்கு உணர்த்தியது.

என்னால் பேச முடியவில்லை, ஆயினும் என் மனம் மகிழ்ச்சியில் மிதக்கின்றது. நீங்கள் பல்லாயிரக் கணக்கில் இந்தப் புரட்சிக்குத் தயார் பட்டுவிட்டதை என் கண்கள் பார்க்கின்றன. நான் திருப்தி அடைகிறேன். இன்று பேச முடியாத நிலை இருக்குமென நினைத்தேன. ஆனால், நீங்கள் தந்த உற்சாகம்தான் என்னை இப்போதும் வாழ வைத்துக் கொண்டுள்ளது. நான் நேசித்த தமிழீழ மண் ணில் வாழ்கின்ற ஒவ்வொரு மக்க ளும் இந்தப் பெரும் புரட்சிக்குத் தயா ராக வேண்டும். நான் நேற்றும் கூறிவிட்டேன் எனது இறுதி ஆசை இதுதான். நான் மீட்கப்பட முடியாத நிலைக்குச் சென்றுவிட்டதை உணர்கிறேன்.

ஆனால் பெரும் பணியை உங் களிடம் விட்டுச் செல்கிறேன். நான் மிகவும் நேசித்த என் தோழர்கள் என் சகோதரிகள் எல்லாவற்றிலும் மேலாக என் தலைவன் பிரபாகரன் உங்களுடன் இருக்கிறார். நீங்கள் பரிபூரணமாகக் கிளர்ந்தெழவேண்டும். மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! இப் புரட்சி நாள் என்னுயிருக்கு மேலாக நேசிக்கும் என் மக்களுக்குக் கிடைக்கட்டும். எமது எதிர்கால சந்ததி வாழ ஒரு நாடு தேவை. அல்லாவிட்டால் நாளை எங்களைப்போல்தான் எமது எதிர்கால சந்ததியும் துன்பப்படும் வருத்தப்படும். என தனது இறுதி உரையில் கூறுகின்றான் காந்திய தேசத்திற்கு அகிம்சையை கற்பித்த பார்த்தீபன்.

அவன் வார்த்தைகள் இன்றும் உலகை சுடுகின்றன. தனது இனத்துக்கு நீதி வேண்டி பன்னிரண்டு நாட்கள் உணவின்றி உயிர் துறந்துள்ளான் இந்த மாபெரும் தியாகம் வேறு எங்காவது இந்த உலகின் மூலையில நடந்துள்ளதோ? சற்று நில் தமிழினமே உனது வரலாற்றை உன் பெருமையை அறிந்து செல்! எங்களிலும் இப்படியொருவன இருந்துள்ளான். நாங்கள் திலீபனின் பரம்பரை. இளைஞர சமுதாயமே உன்வயதல் தான் அவனும் உயிர் துறந்தான். இதை உணர்ந்து செயற்படு. திலீபன் மட்டுமல்ல ஆயிரமாயிரம போராளிகள் உனக்காக உயிர் துறந்து கனவுகளுடன் காத்திருக்கிறார்கள்.

**உ. சாளின்**

# அமைச்சர் நியமனங்களுக்கு எதிர்ப்பு

கல்வித்துறைசார் அமைச்சர் நியமனங்களுக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்கத்தினர் இந்த எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர. கல்விசார் அமைச்சுக்களுக்கான துறைகள் ஒதுக்கீடு தொடர்பில் திருப்தியடைய முடியாது என தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக எவ்வித தர்க்க ரீதியான அடிப்படையுமின்றி துறைகள் பகிரப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் பேராசிரியர் பிரிமால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்வி மற்றும் பெருந்தெருக்கள் ஆகியனவற்றை இணைத்து ஓர் அமைச்சாக்கப்பட்டுள்ளது.

தனியார் பாடசாலை மற்றும் கல்வி நிறுவன உரிமையாளர் ஒருவர் பல்கலைக்கழக கல்வி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான நிலைமைகளினால் சிக்கல்கள் ஏற்படக்கூடும். குறிப்பிட்ட சிலரின் தேவைகளுக்காக இவ்வாறு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.


கல்வித்துறையில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு அரச கல்வித்துறையை குறித்த அமைச்சர் எவ்வாறு பாதுகாப்பார் என்பது கேள்விக்குறியேயாகும்.

அரச கல்வித்துறையை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு உண்டு.

இந்தக் கடப்பாட்டினை அரசாங்கம் ஒரு போதும் உதாசீனம் செய்துவிடக் கூடாது.

கல்வித்துறையில் நிலவி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தேசிய ரீதியில் விரிவாக கலந்துரையாடல் நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் அவர் இதனைக் தெரிவித்தார். (இ-7)




# அவன்கார்ட் ஆயுதக் களஞ்சியம் தொடர்பில் முழுமையான விசாரணையின் பின்பே பாராளுமன்றுக்கு அறிவிக்கப்படும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



**அவன்கார்ட் ஆயுதக் களஞ்சியம் தொடர்பில் முழுமையாக விசாரணைகள் நடத்தப்பட்ட பின்பே அரசாங்கத்தின் நிலைப்பாடு பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அவன்கார்ட் ஆயுதக் களஞ்சியம் தொடர்பாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. கடந்த செவ்வாய்க் கிழமை பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன் வைத்து உரையாற்றினார்.

இதன்போது மேற்கண்ட விடயம் தொடர்பாக பல கேள்விகளை எழுப்பியிருந்தார்.

அநுரகுமார திஸாநாயக்க எம்.பியின் கேள்விகளுக்கு பிறிதொரு தினத்தில் பதிலளிக்கப்படும் என சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல அப்போது பதிலளித்தார்.

இந்நிலையில்புதன் கிழமை நடைபெற்ற சபை அமர்வின் போதும் அவன்கார்ட் விவகாரம் தொடர்பில் அநுர குமார திஸாநாயக்க கருத்து வெளியிட்டார்.


அவன்கார்ட் ஆயுதக் களஞ்சியசாலை சட்ட பூர்வமானது என்று சட்டமா அதி பர், சபை முதல்வர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர். முன்னாள் கடற்படைத் தளபதிகூட இப்படித்தான் கூறியுள்ளார்.

எனவே இந்த விவகாரம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்று வினா எழுப்பினார். இதற்கு பதிலளித்த பிரதமர் அவன்கார்ட் விவகாரம் தொடர்பில் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவை பற்றி ஆராய வேண்டும் முழுமையாக விசாரணைகள் முடிந்த பின்னர் அரசின் நிலைப்பாடு பாராளுமன்றுக்கு அறிவிக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (இ-7)

# பிரித்தானியா, ரஷ்யாவுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட வேண்டுமாம்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்



விடுதலைப் புலிகள் அமைப்பை தோற்கடித்த விதம் குறித்து இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் அமைப்பு வழக்கு தொடுக்குமாயின் நாசி இராணுவத்தை தோற்கடித்த பிரித்தானியா மற்றும் ரஷ்யாவுக்கு எதிராகவும் வழக்கு தொடுக்கப்பட வேணடும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார.

விடுதலைப் புலிகள் அமைப்பை அவர் ஆக்கிரமிப்பு அமைப்பு எனவும் கூறியுள்ளார். பத்தரமுல்லையிலுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் அலுவலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

கடந்த அரசாங்கமும், படையினரும் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து நாட்டை மீட்கும் நடவடிக்கையை மேற்கொண்டனரே தவிர ஆக்கிரமிப்பை மேற்கொள்ளவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் அதிகாரிகள் குளிரூட்டிய அறைகளிலிருந்து கொண்ட உருவாக்கிய இவ்வாறான அறிக்கைமூலம் நாட்டில் கட்டியெழுப்பட்டுள்ள நல்லிணக்கம் மற்றும் அமைதி சீர்குலையும். இதனால், பரிந்துரை செயற்படுத்துவது நல்லிணக்கத்திற்கும் அமைதிக்கும் செய்யும் குந்தகமாகும் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். (இ-7)

### விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சின் வணிகக் கப்பற்துறை செயலகத்தில் பின்வரும் பதவிகளுக்கு தகைமைபெற்ற இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுகின்றன.

சமுத்திர இயந்திர காவலர் பொறுப்பு உத்தியோகத்தர் (வரையறுக்கப்படாத) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். 21 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

வணிகக் கப்பற்துறை பணிப்பாளர் அதிபதி, வணிகக் கப்பற்துறை செயலகம், இலக்கம் 43/89, பிறிஸ்ரல் கட்டடம், 1 ஆம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு 01 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர் வரும் ஒக்டோபர் 26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும் மேலதிக தகவல்களை நேற்றைய தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

# சிறுமி கொலைச் சம்பவம் கொட்டதெனியாவில் பொலிஸார் குவிப்பு

சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சாட்சிகளை பதிவு செய்துகொள்வதற்காக சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு சந்தேக நபரை அழைத்துச் செல்வதில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பிரதேசத்தில் இடம் பெறுகின்ற எதிர்ப்பு நடவடிக்கை காரணமாகவே சந்தேக நபரை அழைத்து செல்லவில்லைஎன்று கொட்டதெனியாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரை சம்பவ இடத்திற்கு அழைத்து செல்ல இருப்பதை அறிந்த பிரதேசவாசிகள் அங்கு கூறியிருப்பதாகவும் இந்நிலையில் பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காகவும் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட படைப்பிரிவினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

சிறுமி கொலைச் சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேக நபர் கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராணுவத்தினரின் நீர்க்காகம் சிறப்பு கண்காட்சி ஒத்திகை நிகழ்வு







இராணுவத்தினரின் நீர்க்காகம் சிறப்பு கண்காட்சி ஒத்திகை நிகழ்வு நேற்று கடந்த புதன்கிழமை மாலை ஏறாவூர் புன்னைக்குடா கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விசேட முகாமில் நடைபெற்றது.

இலங்கை இராணுவத்தின் இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விமானப்படை அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

எட்டு நாடுகள் கலந்து கொண்ட இந்த பயிற்சி கண்காட்சி ஒத்திகை நிகழ்வில் 58 வெளிநாட்டு படையினருடன் இலங்கை படையினரும் இணைந்திருந்தனர்.

இதன்போது அமைக்கப்பட்டிருந்த சிறப்பு முகாமினை முப்படையும் இணைந்து தாக்குதல் நடத்தி கைப்பறும் வகையிலான ஒத்திகை நிகழ்வு நடைபெற்றது.

மேலும், விமானப்படை குண்டு வீச்சு தாக்குதல் நடத்தியதுடன் கடற்படையின் டோரா படகுகள் தரையிறக்கம் தாக்குதலையும் நடத்தியது.

அத்துடன், எம் 17 ஹெலிகொப்டர் மற்றும் தாக்குதல் ஹெலிகொப்டர்களும் தாக்குதல் நடவடிக்கையில் ஒத்திகைகளை மேற்கொண்டது.

இறுதியில் இலங்கை இராணுவத்துடன் இணைந்து பயிற்சிகளை பூர்த்தி செய்த வெளிநாட்டு படையினருக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. (இ-7)




# மியாவ்... மியாவ்...!

ஒரு ஊர்ல ஒரு குட்டிப் பையன் இருந்தான். அவன் பேரு சஞ்சீவ். அவனுக்கு ஒரு முக்கியமான ஃப்ரெண்டு இருந்தான். அவன் பேரு டாமி.

என்னடா இது நாய்க் குட்டிப் பேரா இருக்குன்னு நினைக்கிறீங்களா? ஆனால். இது பூனைக் குட்டி.

சின்ன வயசுல இருந்து இந்தப் பூனையும் அவனும் நல்ல ஃப்ரெண்ட்ஸ். சஞ்சீவும் டாமியும் ஜாலியா விளை யாடுவாங்க. என்னதான் விளையாண்டாலும் டாமி மாதிரி தன்னால விளையாட முடியலையேன்னு சஞ்சீவுக்கு ஒரே கவலை. ஆனால், டாமி வீட்டுச் சுவர் மேலே ஏறும், குதிக்கும். எங்கே வேணா லும் போகும். வரும்.

காலை எழுந்ததும் அவுங்க அம்மாவும் அப்பாவும் சஞ்சீவை ஸ்கூலுக்குக் கொண்டு போய் விட்டிருவாங்க. ஆனால் டாமி ஜாலியா சுவர் மேல ஏறிச் சுத்திக்கிட்டு இருக்கும். சஞ்சீவ் ஸ்கூலுக்குக் போற ப்ப, டாமி அவனைப் பார்த்துக் கேலி செஞ்சு சிரிக்கும்.

சஞ்சீவ் ஸ்கூல்ல இருந்து திரும்பி வந்தா, அவுங்க அம்மா விளையாட விடமாட்டாங்க. ஸ்கூல் ஹோம் ஒர்க்கை செய்ய சொல்லுவா ங்க. ஆனால், இந்த டாமி பாலைக் குடிச்சுட்டு ஜாலியா சுத்திட்டிருக்கும். சஞ்சீவுக்கு டாமி மாதிரி தானும் சுத்தணு ம்னு ஆசை. ஆனால் ஒண் ணும் பண்ணா முடியாதே?



அதுக்கு சஞ்சீவ் ஒரு ஐடியா பண்ணான். டாமிகிட்ட நைஸா பேசினான். " நீ ஒரு வாரம் என்னை மாதிரி மாறி ஸ்கூலு க்குப் போ, நான் உன்னை மாதிரி மாறி இங்கேயே இருக்கேன்"ன்னு சொன் னான். டாமிக்கும் சஞ்சீவ் மாதிரி யூனிபார்ம், ஷூ, டை எல்லாம் கட்டணும்னு ஆசை. அதனால உடனே 'ஓகே'ன்னு சொல்லிடுச்சு.

மறுநாள் காலை எழுந்த தும். டாமி, சஞ்சீவா மாறி ஸ்கூலுக்குப் போச்சு. சஞ்சீவ், டாமியா மாறி பக்க த்து வீட்டுச் சுவர் மேல போய் நின் னுட்டு இருந்தான். டாமி ஸ்கூலுக்குப் போன பின்னாடி சஞ் சீவ் ஒவ்வொரு வீடா குதிச்சு குதிச்சு ஜாலியா சுத்தினான.

இப்படியே ஒரு வாரம் போனது. சஞ்சீ வுக்குப் பூனை மாதிரி சுத்துறது பிடிக்கல. பக்கத்து வீட்ல இருக் கிற சேட்டைக்காரப் பூனைகள் எல்லாம் சஞ்சீவ்கிட்ட அடிக்கடி சண்டைக்கு வந்துச்சு ங்க. ஆனால் டாமிக்கு ஸ்கூலுக்குப் போறது, ஹோம் ஒர்க் பண்ற தெல்லாம் ரொம்பப் பிடிச்சுப் போச்சு.

ஒரு வாரம் முடிஞ்சதும் சஞ்சீவ் டாமிகிட்ட வந்து, "போதும் எனக்குப் போரடிக் கிது. நாம திரும்பவும் மாறிட லாம்"னு சொன்னான். ஆனால் டாமி, "நான் உன்ன மாதிரி ஸ்கூலுக்குப் போறேன். நீ என்ன மாதிரியே மியாவ்... மியாவ்..ன்னு கத்திக்கிட்டு சுத்து"ன்னு சொன்னுச்சு. சஞ்சீவ் முடியாதுன்னு டாமியை மிரட்டினான். ஆனால் டாமி, "முடியவே முடியாது"ன்னு சொல்லிட்டு வீட்டுக்குள்ள ஓடி போயிடுச்சு. சஞ்சீவுக்கு என்ன பண்றதுன்னு தெரியாம, "மியாவ்... மியாவ்..."ன்னு கத்திகிட்டு வீட்டைச் சுத்திச் சுத்தி வந்தான்.!

---

09.2015
26

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1255 - அசிசியின் புனித கிலாராவுக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்டது.
- 1580 - சேர் பிரான்சிஸ் டிரேக் உலகைச் சுற்றி வந் தார்.
- 1687 -ஏதென்ஸ் நகரத்தை முற்றுகையிட்ட ஒட்டோ மான் படையினரிடமிருந்து நகரைக் கைப் பற்ற மரோசினி தலைமையிலான வெனிசி யப் படையினர் குண்டுத் தாக்குதலை நடத்தி யதில் ஏதென்ஸ பார்த்தினன் நகரம் பகுதி யாக அழிந்தது.
- 1777 - பிரித்தானியப் படைகள் பிலடெல்பியா நகரை முற்றுகையிட்டுக் கைப்பற்றினர்.
- 1783 -மாசசூசெட்சில் ஆயுதக் கிளர்ச்சி ஷேய்சின் கிளர்ச்சி ஆரம்பம்.
- 1907 - நியூசிலாந்து, நியூபவுண்லாந்து இரண்டும் பிரித்தானியப் பேரரசின் டொமினியன்க ளாயின.
- 1918-முதலாம் உலகப் போர்: அமெரிக்க வரலாற்றி லேயே அதிக இரத்தம் சிந்திய போர் மியூஸ்-ஆர்கன் தாக்குதல் பிரான்சில் ஆரம்பம்.
- 1934-ஆர்.எம்.எசு. குயீன் மேரி நீராவிக்கப்பல் வெள் ளோட்டம் விடப்பட்டது.
- 1944-இரண்டாம் உலகப் போர்: மார்கெட் கார்டன் நடவடிக்கை தோல்வியடைந்தது.
- 1950 - ஐக்கிய நாடுகள் படைகள் வடகொரியாவிட மிருந்து சியோல் நகரை மீண்டும் கைப் பற்றினர்.
- 1950 - இந்தோனேசியா ஐ.நாவில் இணைந்தது.
- 1960 -ஐக்கிய அமெரிக்காவில் முதல் தடவையாக அரசுத் தலைவருக்காகப் போட்டியிடும் வேட்பாளர்களின் தொலைக்காட்சி நேரடி விவாதம் ரிச்சார்ட் நிக்சனுக்கும் ஜோன் எஃ ப். கென்னடிக்குமிடையில் இடம்பெற்றது.
- 1960 - பிடெல் காஸ்ட்ரோ சோவியத் ஒன்றியத்துக் கான தமது. ஒத்துழைப்பை அறிவித்தார்.
- 1962 - ஜேர்மன் அரபுக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1973-அட்லாண்டிக் மேலான தனது முதலாவது இடைநிறுத்தல் இல்லாத பயணத்தை கொன கோர்ட் விமானம் பறந்து காட்டியது.
- 1983 -அணுவாயுதம் ஒன்று ஏவப்பட்டது என்ற அறிக்கை ஒரு கணினித் தவறு என்பதை சோவியத் இராணுவ அதிகாரி ஸ்டானிசுலாவ் பெத்ரோவ் கண்டுபிடித்து அணுவாயுதப் போரொன்று இடம்பெறுவதைத் தவிர்த்தார்.
- 1984 - ஐக்கிய இராச்சியம் ஹொங்கொங்கை சீனா விடம் கையளிக்க ஒப்புக்கொண்டது.
- 1987 - தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப் பினர் லெப்டினன் கேணல் திலீபன் இந்திய அமைதிப் படையிடம் ஐந்து கோரிக்கை களை முன்வைத்து நீரும் அருந்தா உண்ணா நோனபு இருந்து உயிர் துறந்தார்.
- 1997 -இத்தாலியில் இடம்பெற்ற நிலநடுக்கம் அசிசி யின் பிரான்சிசு தேவாலயத்தின் ஒரு பகுதி யைச் சேதப்படுத்தியது.
- 2008-சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த இவெசு ரொசி ஆங்கிலக் கால்வாயை ஜெட் இயந்திரம் பூட்டப்பட்ட இறக்கை மூலம் கடந்த முதலா வது மனிதர் என்ற பெயரைப் பெற்றார்.

### பிறப்புகள்

- 1833 - சார்ல்ஸ் பிராட்லா, ஆங்கில அரசியல்வாதி (இ. 1891)
- 1890 - பாபநாசம்.சிவன், கர்நாடக இசை அறிஞர் (இ. 1973)
- 1908 - பெரியசாமி தூரன், கர்நாடக இசை அறிஞர் (இ. 1987)
- 1913 - திருக்குறள் வீ.முனிசாமி, தமிழறிஞர்(இ. 1994)
- 1932 - மன்மோகன் சிங், இந்தியப் பிரதமர்
- 1981 - செரீனா வில்லியம்ஸ், அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை

### இறப்புகள்

- 1895 - லூயி பாஸ்டர், வேதியியல் அறிஞர் (பி. 1822)
- 1954 - தேசிக விநாயகம்பிள்ளை, கவிமணி (பி. 1876)
- 1959 - எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, இல ங்கை பிரதமர், (பி. 1899)
- 1976 - லாவொஸ்லாவ் ரூசிக்கா, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- 1978 - மான் சீக்பான், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1886)
- 1987- திலீபன், தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் (பி. 1963)

---

### திலீபன்



திலபன் எனும் பெயரில் அறியப்படும் பார்த்திபன் இராசையா என்பவர் 1963 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி பிறந்தார்.

இவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு ஆரம்பக்கால உறுப்பினரும் முக்கிய உறுப்பினராகவும் இருந்தவராவர்.

இவர் இலங்கை, யாழ்ப்பாணம், ஊரெழு எனும் ஊரைச் சேர்ந்தவர். இவரின் மறைவின் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் லெப்டினன் கேணல் திலபன் எனும் நிலை வழங் கப்பட்டது.

இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து காந்திய வழியில் நீரும் அருந்தா உண்ணாவிரதம் இருந்து, அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படா சமயம் உறுதியுடன் அவ் உண்ணா விரதத்தில் உயிர் துறந்தவர்.

இவரை இந்திய அரசு இறக்கவிட்டது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையே பின்னர் ஏற்பட்ட போருக்கு ஒரு முக்கிய காரணம்.

1987 செப்டெம்பர் 15 ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை முன் வைத்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு லெப்டினன் கேணலாக, யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த திலபன் மரணம் எய்தினார்.

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை தீமை செய்வதை நிறுத்துங்கள். - டால்ஸ்டாய்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மகிந்தவைக் காப்பாற்றியவர்கள் தண்டனை வழங்குவரா?

இலங்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் விடுத்த அறிக்கை, அது தொடர்பில் கலப்பு நீதிமன்றம் பற்றிய பரிந்துரை என்ற தொடரில், இப்போது மாற்றங்கள் ஏற்பட்டு வருகிறது.

இந்த மாற்றங்கள் என்ன? பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதனால் நீதி கிடைக்குமா? என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

ஆக, இலங்கை குறித்த ஐ.நா மனித உரிமைகள் பேரவை தொடரில் நடைபெறுகின்ற விவாதங்கள் இலங்கை அரசுக்கு உதவி செய்வதாக அமைகிறதே தவிர பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதாகத் தெரியவில்லை.

கலப்பு நீதிமன்றம், உள்ளகப்பொறிமுறை இப்போது இன்னொன்று என்பதெல்லாம் இலங்கை அரசுக்கு உதவுகின்ற நோக்கில் ஏற்படுத்தப்பட்ட திட்டங்கள் என்பது இப்போது புரிந்திருக்கும்.

இலங்கையில் நடந்த போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கோரிக்கையெல்லாம் சர்வதேச விசாரணை வேண்டும் என்பதுதான்.

எனினும் அது பற்றி எங்கள் அரசியல் தலைமைகள் உட்பட யாரும் கவனம் செலுத்துவதாக இல்லை. ஆனால் சர்வதேச விசாரணை தவிர்ந்த வேறு எந்தவொரு விசாரணையும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எந்த விமோசனத்தையும் தராது என்பது சர்வ நிச்சயம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை அவர்கள் இலங்கையின் தற்போதைய அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தரும். அந்தத் தீர்வு 2016இல் சாத்தியமாகும் என்று நம்புகின்றனர்.

இந்த நம்பிக்கையை வலுப்படுத்துவதாக கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு வழங்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைமை பதவி அமைந்துள்ளதாக சம்பந்தப்பட்டவர்களால் கருதப்படுகிறது.

இருந்தும் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை நம்புவது போல இனப்பிரச்சினைக்கான தீர்வை இந்த அரசாலும் எட்ட முடியாது என்பதை அடித்துக் கூறமுடியும்.

இலங்கை அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தரும் என்ற நம்பிக்கையில் சர்வதேச விசாரணை தேவை என வலியுறுத்தி நிலைமையைக் குழப்பக் கூடாது என்று கூட்டமைப்பு கருதலாம்.

ஆனால் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு என்பது சர்வதேச விசாரணை ஊடாகவே எட்டப்படும் என்ற உண்மையை உணர்வதில் நம்மவர்கள் தவறிழைக்கின்றனர்.

இதை நீங்கள் எப்படி சொல்ல முடியும். இதற்கு ஆதாரம் என்ன? என்று யாரேனும் கேட்டால் அதில் நியாயம் இருக்கிறது.

இங்குதான் ஓர் உண்மை உணரப்பட வேண்டும். அதாவது ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் கலந்து கொண்ட இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஒரு செய்தியைச் சொல்லியுள்ளார். அந்தச் செய்தி மின்சார நாற்காலியில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்றி விட்டேன் என்பதுதான்.

ஆக, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிவிட்டு இவ்விதம் சொல்லப்படுமாக இருந்தால், கலப்பு நீதிமன்றம் அல்லது இலங்கையர்களும் வெளிநாட்டு நீதிபதிகளும் இணைந்து நடத்தும் விசாரணை என்பன எந்த வகையிலும் குற்றவாளிகளைக் காப்பாற்றுமே தவிர, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியையும் தராது இனப்பிரச்சினைக்குத் தீர்வையும் வழங்காது.

ஒருவேளை ஜெனிவாவில் உரையாற்றிய அமைச்சர் மங்கள சமரவீர, போர்க்குற்றவாளிகளுக்கு மின்சார நாற்காலி காத்திருக்கிறது என்று கூறியிருந்தால், அட! மனுசன் ஜெனிவாவில் வைத்து இப்படிக் கூறியிருப்பதால், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்று நம்பமுடியும். ஆனால் தமிழ் மக்களின் இழப்புகளுக்கு எல்லாம் மூலகாரணமாக இருந்த முதலாவது குற்றவாளியையே காப்பாற்றி விட்டேன் என்று கூறும்போது கலப்பு; கலப்பும் கலப்பும் என்ற எந்தப் பொறிமுறையும் நமக்கு நீதியைத் தராது என்பதை உணர்ந்து கொண்டால் மட்டுமே தமிழினம் தப்பிப் பிழைக்க முடியும்.

## 5 வயது சிறுமி கொலை

# பாடசாலை மாணவன் கைது; மனித உரிமை ஆர்வலர் கவலை

கொடதேநியாவ பகுதியில் வசித்து வந்த 5 வயது சிறுமியின் கொலை சம்பந்தமாக பாடசாலை மாணவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டது குறித்து குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

மாணவர் ஒருவரைக் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்ததன் மூலம் பொலிஸார் சர்வதேச சட்ட விதிமுறைகளை மீறியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் பிரதீபா மகாநாம ஹேவா குற்றம்சாட்டியுள்ளார்.

சம்பந்தப்பட்ட மாணவனின் செல்போனில் ஆபாசப் படங்கள் இருந்ததாக குற்றம்சாட்டியே பொலிஸார் அவரை கைது செய்ததாகக் கூறிய டாக்டர் பிரதிபா மகாநாம ஹேவா, எந்த சந்தேகமுமின்றி இவ்வாறு கைதுசெய்வது இலங்கை அரசியல் யாப்பை மீறும் ஒரு செயலென்று தெரிவித்தார்.

மனித உரிமைகள் சம்பந்தமாக சர்வதேச ரீதியில் நாடு பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ள நிலையில் ஏற்பட்டுள்ள இந்த சம்பவம் மேலும் சிக்கல்களை ஏற்படுத்து மென்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இந்தச் சிறுமியின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட பாடசாலை மாணவன் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆனால், விசாரணைகளின் போது ஏற்பட்ட சந்தேகத்தின் காரணமாகவே சம்பந்தப்பட்ட மாணவனை கைதுசெய்ததாக பொலிஸ் செய்தித் தொடர்பாளர் பிரியந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இந்த மாணவனை ஒரு சந்தேக நபராகவே பொலிஸார் கணித்து வருவதாக கூறிய அவர், ஆதாரங்கள் இல்லாத பட்சத்தில் அவர் நிச்சயமாக விடுதலை செயப்படுவாரென்றும் கூறினார். (செ-12)

## 10 வயது சிறுவன் தாக்கப்பட்டு கொலை

(கொழும்பு)

அத்துருகிரிய, கப்புறுகொடை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் 10 வயதுடைய சிறுவன் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 11.10 மணியளவில் இந்த கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொலை செய்யப்பட்ட சிறுவனின் கை, கால்கள் மற்றும் கழுத்து போன்ற பகுதிகள் வெவ்வேறாகும் அளவிற்கு கொடூரமான முறையில் இந்தக் கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேலும் சம்பவம் இடம்பெற்ற போது வீட்டில் யாரும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பான கொலைக் குற்றவாளிகளை இனம்காணும் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-12)

## கப்பல் சேவைகள்

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பல கப்பல் சேவைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் வை கே சிங்ஹா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர் கொழும்பு- தூத்துக்குடி மற்றும் கொழும்பு - கொச்சி ஆகிய இடங்களுக்கு சேவைகளை நடத்த திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## "விரலிசை நாதம்"

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் ஆரம்பச் சித்தரான கடையிற் சுவாமிகளின் 124ஆவது வருட குருபூஜை தினத்தை முன்னிட்டு ஸ்ரீ சிவ குருநாதகுருபீடம், மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமம் (வேதாந்தமடம்) நடத்தும் விரலிசை நாதம் இசை நிகழ்ச்சி நாளை 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.15 மணிக்கு மடத்தின் கனகரத்தினம் சுவாமிகள் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருமதி விதுர்ஷா கோபிகிருஷ்ணா குழுவினரின் (சாகித்திய வீணாலயா) வீணை இசையுடன் கே. ஆனந்தகோபனின் மிருதங்க இசையும் இசைக்கப்படவுள்ளது. (செ)

## உண்டியல் உடைப்பு சந்தேக நபர் கைது

(கரணவாய்)

மாதா கோயில் உண்டியலை உடைத்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று காலை 6.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

புலோலி மத்தி புலோலியில் உள்ள மாதா கோயிலின் உண்டியலை உடைத்தார் என்ற சந்தேகத்தில் பொதுமக்கள் நபர் ஒருவரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபர் பருத்தித்துறை பதில் நீதிபதி பி.குமாரசாமி முன்னிலையில் பொலிஸாரால் ஆஜர்ப்படுத்தப்பட்டார். விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் பிரஸ்தாப சந்தேக நபரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (செ-12,60)

# ரக்னா பாதுகாப்புச் சேவை தொடர்ந்து செயற்படும்!

## பாதுகாப்புச் செயலர் கருணாரத்ன

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர கோத்தபாய ராஜபக்ஷவின் ரக்னா லங்கா பாதுகாப்புச் சேவை நிறுவனம் தொடர்ந்து செயற்படும் என்று பாதுகாப்புச் செயலாளர் கருணாரத்ன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

பாரிய முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் சாட்சியமளித்துள்ள பாதுகாப்புச் செயலாளர் கருணாரத்ன ஹெட்டியாரச்சி, ரக்னா லங்கா நிறுவனம் மூலமாக அரசாங்கத்துக்கு பாரிய வருமானம் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. அதன் காரணமாக ரக்னா லங்கா நிறுவனத்தில் உள்ள சிறுசிறு குறைபாடுகளைக் களைந்து அதனை ஒரு வர்த்தக நிறுவனமாக நடத்திச் செல்ல ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார் என்று பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் ரக்னா லங்கா நிறுவனத்தின் இணை நிறுவனமான எவண்ட் கார்ட் நிறுவனம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் எதுவித கருத்தையும் தெரிவிக்கவில்லை. அமைச்சரவையின் அனுமதி இன்றித் தொடங்கப்பட்டுள்ள இந்த நிறுவனம் சட்டவிரோத ஆயுதங்களுடன் மிதக்கும் ஆயுதக்களஞ்சியமொன்றை நடத்தி வருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



### ஞானத்திலிருந்து விடுதலை

இதுவே உண்மையான கண்டுபிடித்தல் ஆகும். நமது ஆன்மீகப் பயணத்திற்கு நமக்குத் தேவை பகவானின் அருள் நமக்குத் துணை செய்யத் திறந்த மனத்துடன் இருப்பதே. நமது ஞானம் அனுபவமாக ஆகாவிட்டால் அது நமது அகம் பாவம் தன்னை வெளிப்படுத்திக்கொள்வதற்கு உரமாக அமைந்தது. நமது ஆன்மீக வளர்ச்சியைத் தாமதப் படுத்தும் ஒரு நல்ல ஞானியென்பவர் அனைத்து மக்க ளைக் காட்டிலும் மிகவும் பணிவானவராக இருப்பவர்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



தியாகத்தால் அன்றி எதையும் சாதிக்க முடியாது. மனிதன் செய்யத் தக்கனவற்றுள் மிகவுயர்ந்த மிகப் புனிதமான செயல் அதைக் கெடுக்காமலிருப்பதே.

நீங்கள் உண்மையிலேயே என் குழந்தைகளானால் எதற்குமே அஞ்சமாட்டீர்கள். எதற்காகவும் நிற்க மாட்டீர்கள். சிங்கங்களெனத் திகழ்வீர்கள். நாம் இந்தியாவையும் உலகம் முழுவதையுமே விழித்தெழச்செய்தாக வேண்டும். கோழைத்தனம் உதவாது.

ஸ்ரீஇராமகிருஷ்ணரை வழிபடுபவர்கள் நீசர்களாக இருந்தாலும் கணநேரத்தில் பெரிய மகான் ஆகிவிடுவார்கள். பெண்களானாலும் சரி, ஆண்களானாலும் சரி.

ஸ்ரீஇராமகிருஷ்ணர் பெண்களின் ரட்சகர், பாமரர்களின் ரட்சகர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் அனைவரின் ரட்சகர். ஒவ்வொரு வீட்டிலும் ஸ்ரீஇராமகிருஷ்ணரின் வழிபாட்டைப் புகுத்துங்கள். பிராமணர், சண்டாளர், பெண், ஆண் அனைவருக்கும் அவரை வழிபடும் உரிமை உண்டு. கும்பத்தில் அவரைப் பூஜிக்கட்டும், சிலை செய்து வழிபடட்டும், மந்திரம் இருக்கட்டும் அல்லது இல்லாமல் போகட்டும். எப்படி எந்த மொழியில் யார் வேண்டுமானாலும் பக்தியுடன் அவரை வழிபடுபவர்கள் பேறு பெற்றவர்கள்.

பிரமச்சரியம் உள்ளவனது மூளையின் ஆற்றல் அளப்பரியதாகிறது. அவன் மகத்தான சங்கல்பம் உடையவன் ஆகிறான். பிரமச்சரியம் இல்லாமல் ஆன்மீக சக்தி வருவதில்லை.

# மட்டுவில் மோகனதாஸ் வி.கழக கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## இந்து இளைஞர், பாரதி சம்பியன்



மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் A பிரிவில் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் B பிரிவில் நாயன்மார் கட்டு பாரதி விளையாட்டுக் கழகமும் சம்பியனாகியது

மட்டுவில் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி நேற்று முன் தினம் இரவு 7மணிக்கு கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டி யில் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை ஏதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது. இப்போட்டியில் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று A பிரிவில் சம்பியனாகியது.

B பிரிவிற்கான இப் போட்டியில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழகம் மோதியது. இப் போட்டியில் நாயன்மார் கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் 3:2 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று B பிரிவில் சம்பியனாகியது.

(பாரதி விளையாட்டுக் கழகம் 20 ஆண்டுகளுக்கு பிறகு நடந்த ஆட்டத்தில் நாயன்மார் கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் தான் சம்பியனாகியது என்று பாரதி விளையாட்டுக் கழக முன்னணி வீரர் ஜெயம் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது) (க)

## உதைபந்தாட்டம் சமநிலையில் முடிபு

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் அணிக்கும் துணவி நியூஸ்ரார் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எந்தவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (க)

## சென்றலைட்ஸை வென்றது யூனியன் விளையாட்டுக்கழகம்



சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தை 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது யூனியன் விளையாட்டுக்கழகம்.

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III க்கான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 27.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 129 ஓட்டங்களை பெற்றது.

பந்துவீச்சில் யூனியன் விளையாட்டுக்கழகம் சார்பாக தயாளன் 4 விக்கெட்டினை கைப்பற்றினார்.

பின்னர் 130 ஓட்டங்கள் என்ற இலகுவான வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யூனியன் விளையாட்டுக்கழகம் 20.2 ஓவர்களில் 5விக்கெட்டினை இழந்து 131 ஓட்டங்களை பெற்று 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் யூனியன் விளையாட்டுக்கழகம் சார்பாக சுயந்தன் 52 ஓட்டங்களை பெற்றார். (க)

## தேசிய மட்ட கூடைப்பந்தாட்ட போட்டிக்கு காரைதீவு பிரதேச செயலக அணி



இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் நடத்தப்படும் விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியில் மாவட்ட மட்ட போட்டிகளில் வெற்றிபெற்று காரைதீவு பிரதேச செயலக அணி நேரடியாக தேசியமட்ட போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளது.

பாண்டிருப்பில் இடம்பெற்ற அம்பாறை மாவட்ட மட்ட போட்டிகளின் இறுதிப்போட்டியில் காரைதீவு பிரதேச செயலக கூடைப்பந்தாட்ட அணி 39-16 என்ற புள்ளிகள் அடிப்படையில் பொத்துவில் பிரதேச செயலக அணியை வெற்றி கொண்டது.

இம்முறையுடன் காரைதீவு பிரதேச செயலக கூடைப்பந்தாட்ட அணி தொடர்ச்சியாக ஐந்தாவது முறையாக தேசியமட்ட போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## கருணாகரன், றோயல் அடுத்த சுற்றுக்கு தகுதி

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரில் வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக்கழகம் மற்றும் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் என்பன வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக்கழகம் மோதியது. 1:1 என்ற கோல்கணக்கில் முடிவுக்கு வந்தது முதலாவது பாதி.

இடைவேளையின் பின்னர் இரட்டிப்பு வேகம் காட்டினர் இரு அணியின் வீரர்களும். குறிப்பிட்ட நிமிடத்தில் கருணாகரன் சார்பாக பதிவானது இரண்டாவது கோல். அதுவே ஆட்டத்தின் இறுதிக்கோலுமானது. 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது கருணாகரன்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் உடற் கல்வி ஐக்கிய விளையாட்டுக்கழகமும் மோதின. இதில் முழுமையான ஆதிக்கத்தை நிலைநாட்டிய றோயல் அணி 8:2 என்ற கோல் கணக்கில் பெருவெற்றி பெற்றது. (க)

## சந்தேக...

பாடாகவே அவர்கள் 10 அல்லது 15 மோட்டார் சைக்கிள்களில் கூட்டமாக பாடசாலை விடும் நேரம், டியூட்டரிகளுக்கு மாணவிகள் செல்லும் நேரங்களில் வீதிகளில் மற்றவர்களுக்கு இடைஞ்சல் தரும் வகையில் ஓடித் திரிகின்றார்கள்.

இந்த நிலைமை கட்டுப்படுத்தப்பட வேண்டும். இவர்களைக் கைது செய்து, அவர்களின் மோட்டார் சைக்கிள்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்தாலே யாழ் நகரத்தின் 90 வீதமான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் என நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

**ஊர்காவற்றுறை**

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுபபதிகாரி நீதிபதி முன்னால் ஆஜராகி, அந்தப் பிரதேசத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து விளக்கமளித்தபோது,

வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி போன்ற பகுதிகளில் கடல் மண் களவாக ஏற்றிச் செல்வது அதிகரித்திருப்பதாகச் சுட்டிக்காட்டிய நீதிபதி இளஞ்செழியன், இதில் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதுடன், அவர்களுடைய வாகனங்களையும் கைப்பற்றுமாறு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், இந்தப் பகுதிகளில் இறைச்சிக்காக மாடுகள் சட்டத்திற்கு முரணான வகையில் கடத்தப்பட்டு, பொது இடங்களில் வைத்து வெட்டப்படுகின்றன.

இவ்வாறு வெட்டப்பட்ட மாடுகளின எலும்புக் கூடுகள் காணப்படும் புகைப்படங்களை ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கையளித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இத்தகைய குற்றச் செயல்க ளில் ஈடுபடுவதாகக் கூறப்படுபவர்களின் பெயர் விபரங்களையும் நீதிபதி அவரிடம் வழங்கியுள்ளார்.

**வாள்வெட்டு ரவுடிக் குழுவின் தலைவா**

நீதிபதியின் முன்னிலையில் ஆஜராகிய மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தகவல் தெரிவிக்கையில், வாள்வெட்டு ரவுடித்தனத்தில் ஈடுபடுகின்ற குழுவின் தலைவர் தனது பொலிஸ் நிலைய நிர்வாகப் பிரிவைச் சேர்ந்தவர் என கண்டறியப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் தற்போது வெளிமாவட்டம் ஒன்றில் தலைமறைவாகியிருப்பதாகவும், அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நீதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

**கோப்பாய் பிரதேசம்**

கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நீதிபதி முன்னிலையில் ஆஜராகிய போது, கோப்பாய் பகுதியில் தற்போது 90 வீதம் குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்கள் தலையெடுக்காத வண்ணம் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் குற்றச்செயல்கள் இடம்பெற்றால், அதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய அவசியமான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பல்வேறு பொலிஸ் நிலையங்களினதும் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் ஆஜராகிய போது, யாழ்.குடாநாடு அமைதியாக இருக்க வேண்டும்.

குற்றச் செயல்கள் இருக்கக் கூடாது. குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் இது தான் பொலிஸாருக்குரிய பெருமை தரத்தக்க விடயம்.

பொலிஸாரின் கௌரவத்தைக் கெடுத்து நீதிமன்ற ஆட்சிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் நபர்களுக்கு எதிராக தாமதமின்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

யாழ்.மாவட்டத்தில் ரவுடிகள் தெருச் சண்டியர்கள் வாள்வெட்டுக்காரர்களைக் கைது செய்து குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துமாறு மேல் நீதிமன்றம் வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபருக்கு நேரடியாகக் கட்டளை பிறப்பித்ததையடுத்து,

மாவட்டத்தின் பல இடங்களிலும் பொலிஸார் தீவிரமாகச் செயற்படுவதாகவும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் பொதுமக்களின் பாதுகாப்புக்காகவும் அவர்கள் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுவதைக் காண முடிகின்றது என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (செ-4)

# இறுதிக் கட்டப்போரில் இராணுவம் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியது

## பிரகீத்தின் மனைவி சாட்சியம்

விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்தினர் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியதாக ஊடகவியலாளர் பிரகீத்தின் மனைவி சந்தியா எக்னெலிகொட சாட்சியமளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக ஜெனிவா சென்றுள்ள சந் தியா, இதுகுறித்த சாட்சியமொன்றை அளித் துள்ளார்.

இறுதிக்கட்டப் போரின்போது இராணுவத்தினர் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியமை குறித்து கடத்திக் காணாமல் செய்யப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட அறிந்திருந்ததாக அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான போரில் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தியமை தொடர்பில் இராணுவம் தொடர்ந்தும் மறுத்து வரும் நிலையில் சந்தியா எக்னெலிகொடவின் சாட்சி பெரும் திருப்பு முனையாக அமைந்துள்ளது. (செ-12)

# ஐ.நா வரைவு தீர்மானத்துக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவு

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் தாக்கல்செய்யப்பட்டுள்ள வரைவுத் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் அமைக்கப்படவிருக்கும் நீதிப் பொறிமுறையில் வெளிநாடுகள் மற்றும் பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த நீதிபதிகள், புலனாய்வாளர்கள், வழக்கறிஞர்கள் இடம்பெற வேண்டும் என இந்த வரைவுத் தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதை வரவேற்பதாக கூறியுள்ளது.

இலங்கையில் நீதிக்குக் கிடைத்த முக்கியமான வெற்றி இது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. இம்மாதிரியான ஒரு நீதிமன்றத்தை உருவாக்குவதிலும் அதனை செயல்பட வைப்பதிலும் அரசுக்கும் சர்வதேசப் பங்காளிகளுக்கும் உதவப் போவதாக கூட்டமைப்பு கூறியுள்ளது.

இந்த வரைவு அறிக்கைக்கு சம்மதம் அளித்து, மனித உரிமைப் பேரவையில் இணைந்து பிரேரித்துள்ள இலங்கை அரசுக்கும் கூட்டமைப்பு பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளது.

இந்த ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கான தீர்மானத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மொழியானது பாதிக்கப்பட்ட சிலருக்கு உவப்பானதாக இருக்காது என்பதைத் தாங்கள் உணர்ந்திருப்பதாகவும் கூட்டமைப்பு கூறியுள்ளது.

இருந்தபோதும், நல்லிணக்கத்தை நோக்கிய நீண்ட பாதையில் இந்த வரைவுத் தீர்மானம் ஒரு தொடக்கப்புள்ளியாக அமையும் என தாங்கள் நம்புவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (செ-12)

## 40 ஆயிரம்...

யில் இலங்கையில் பொதுமக்களுக்கு எதிராக அநியாயங்கள் நடந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அதனை தடுத்திருக்க வேண்டும். அது இந்தியாவின் கடமையெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நாட்டின் இறையாண்மை என்பதும் அதுவே எனக் குறிப்பிட்டுள்ள அவர், ஒவ்வொரு நாடும் தமது குடிமக்களை காப்பாற்ற வேண்டும் என்பதோடு, அதனை செய்ய குறித்த நாடுகள் தவறும் பட்சத்தில் நட்பு நாடுகள் தலையிட்டு பொதுமக்களை காப்பாற்ற வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் மிகத் தெளிவான சர்வதேச சட்டங்கள் இருப்பதாக குறிப்பிட்ட அவர், இந்தியா இந்த விடயத்தில் தவறிழைத்துள்ளதாகவே தான் கருதுவதாகவும் கூறியுள்ளார்.

இந்தியா தலையிட்டு சமரசத்தை ஏற்படுத்தியிருந்தால், 40 ஆயிரம் பொது மக்களின் உயிரிழப்பை தடுத்திருக்கலாம் எனவும், தென்னாபிரிக்கா போன்று அது உள்நாட்டு பிரச்சினை என இந்திய தெரிவித்திருப்பதை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

40 ஆயிரம் அப்பாவி பொதுமக்கள் கொலை செய்யப்படுவது உள்நாட்டு பிரச்சினை அல்லவெனவும் அது சர்வதேச விவகாரம் எனவும் அவர் இந்த செவ்வியின்போது மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## ஆசிரிய...

ணன் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் நள்ளிரவு உயிரிழந்துள்ளார்.

இவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் அருகில் உள்ள இரகசிய கமரா ஒன்றில் சிக்கியுள்ளனர். இந்த கமரா ஆதாரத்தின் மூலம் வேலணையை சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் குடும்பஸ்தர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட நால்வர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.நகரப்பகுதி கடைக்கு சென்ற தம்பதியரை தகாத வார்த்தைகளால் வசைபாடிய குறித்த ரவுடிக்கும்பல், அதனை தட்டிக் கேட்க குடும்பஸ்தர் முயன்ற போது அவர்கள் இருவர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். அருகில் உள்ள அலுமனியம் பொருத்தும் கடையொன்றில் காணப்பட்ட இரும்புகளாலும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மேற்படி தம்பதியினருக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதியே திருமணம் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

(மற்றுமொரு செய்தி உள்ளே)

# இலங்கையின் நல்லிணக்க முயற்சிக்கு கொன்சவ்வேட்டிவ் கட்சி துணை நிற்கும்

## கனேடிய அமைச்சர் நிக்கல்சன் அறிவிப்பு

இலங்கையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் பணியில், மீண்டும் தெரிவு செய்யப்படும் கனடாவின் கொன்சவேட்டிவ் அரசானது, உலக நாடுகளை உந்தித் தள்ளும் தலைமைப் பணியைத் தொடர்ந்தும் உறுதியுடன் முன்னெடுக்குமென அமைச்சர் றொபர்ட் நிக்கல்சன் நேற்று அறிவித்துள்ளார்.

மிகவும் குழப்பமான ஆட்சியை நடத்திய மகிந்த அரசுக்கு தனது எதிர்ப்பைக் காட்டும் முகமாக, 2013ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற 23ஆவது கொமன்வெல்த் தலைவர்களின் மாநாட்டை கனேடியப் பிரதமர் ஸ்ரிபன் காப்பர் புறக்கணித்தார். ஐ.நா செயலாளர் நாயகம் நியமித்த பொறுப்புக்கூறலுக்கான வல்லுநர்களின் அறிக்கைக்கு எதிராகவும், சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கு எதிராகவும், மகிந்த அரசின் கொடூரமான நடவடிக்கைகள் தொடர்ந்தன.

இலங்கைத் தமிழருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை உறுதிப்படுத்தியும், இனப்படுகொலையாகக் கருதப்படுமளவுக்கு அங்கு இழைக்கப்பட்ட எண்ணிக்கையற்ற கொலைகளை ஆவணப்படுத்தியும், சித்திரவதை, சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகள், பாலியல் வன்முறைகள், சொத்துகளை அபகரித்தல் மற்றும் போர்க்குற்றமாகக் கருதக்கூடிய ஏனைய பல்வேறு குற்றங்களையும், ஐநா மனித உரிமை ஆணையாளர் அண்மையில் அறிக்கை மூலம் உறுதி செய்துள்ளார்.

சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் விரும்பும் இலங்கையர்களுக்கு, தொடர்ந்தும் கனேடிய நாடு தனது ஈடு இணையற்ற பலமான ஆதரவை வழங்க, மீண்டும் தெரிவு செய்யப்படும் கொன்சவேட்டிவ் அரசு துணை நிற்கும் என நிக்கல்சன் குறிப்பிட்டார். மேலும் அவர் தெரிவு செய்யப்படும் கொன்சவேட்டிவ் அரசானது, பாகுபாடற்ற, நீதியும் சுதந்திரமும் கொண்ட சர்வதேச செயற்பாடுகளை, இலங்கை மக்கள் நம்பிக்கை கொள்ளும் வகையில் முன்னெடுக்க அனைத்துலக ரீதியில் முயற்சியும் முதலீடும் செய்யும் என்றார்.

மீண்டும் தெரிவு செய்யப்படும் கொன்சவேட்டிவ் அரசானது, இலங்கையில் சுதந்திரமான பன்னாட்டு விசாரணையை மேற்கொள்ள அழுத்தத்தைக் கொடுப்பதுடன், அங்கு நீதியை முன்னெடுக்கவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் அனைத்துலக நாடுகளுடன் இணைந்து பாடுபடும். இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்ட காணிகளை மீண்டும் உரியவர்களுக்கே ஒப்படைக்கவும், இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் சொந்த இடங்களுக்கு சென்று வாழவும், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் விதவைகளுக்கும் புனர்வாழ்வு மற்றும் உதவிகளை வழங்கவும், அவசிய உதவிகள் தேவைப்படும் சமூகங்களுக்குத் துணை செய்யவும், மீண்டும் தெரிவு செய்யப்படும் கொன்சவேட்டிவ் அரசு அயராது பாடுபடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இலங்கையில் ஜனநாயகம் நிலைக்கவும் கடினமான சவால்களை எதிர்கொள்ளும் சிவில் சமூகங்கள் தமது பணியை செவ்வனே ஆற்றவும், தெரிவாகும் கொன்சவேட்டிவ் அரசானது தமது பங்களிப்பினை வழங்கும் என அண்மைக் காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற தேர்தல்களில் இலங்கையின் சிவில் சமூகங்கள் ஆற்றிய பணிக்கு கனடா அதிகளவு உதவி செய்தது போன்று, இலங்கையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதில் தொடர்ந்தும் கொன்சவேட்டிவ் அரசானது தனது ஆழமான அர்ப்பணிப்பினை அதிகரித்த அளவில் வழங்கும் என அமைச்சர் றொப் நிக்கல்சன் தெரிவித்தார். (செ-12)

## ஹெரோயினுடன் 5 பேர் கைது

25 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் ஐந்து பேரை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

வத்தளை பிரதேசத்தில் வைத்து இந்த நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த ஐந்து பேரும் சர்வதேச போதைப் பொருள் வர்த்தக நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் தொடர்ச்சியாக விசாரணை நடத்தப்பட உள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (செ-12)

## ரி.ஐ.டியினரால்...

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர் என்ற குற்றச்சாட்டால் இவர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இவர் கைது தொடர்பில் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் பிரஸ்தாப நபரின் குடும்பத்துக்கு எழுத்துமூலமான கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவரின் கைது தொடர்பில் நேற்றைய தினம் மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-4)

## ஐ.நாவின் பரி...

எனினும் தற்போது அந்த தனிமை உடைக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

2009-ம் ஆண்டில் மனித உரிமைகள் பேரவையில் யோசனை ஒன்றின்மூலம் வெற்றி கண்டதாக அன்றைய அரசாங்கம் மகிழ்ச்சி வெளியிட்ட போது அதனால சபையின் இணக்கத்தை எட்ட முடியவில்லை.

அத்துடன் 2012,13,14-ம் ஆண்டுகளில் இலங்கைக்கு எதிராக சபையின் தீர்மானங்கள் அமைந்தன

எனினும் 2015-ம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் மூலம் இலங்கையில் நல்லிணக்க முயற்சிகள் மேம்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்

நியூயோர்க்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தில் மங்கள சமரவீர இந்தக் கருத்துக்களை வெளியிட்டார். (செ-12)

## நவம்பர் 20...

யோசனைகளும் கவனத்தில் கொள்ளப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் பதவிக்கு வந்த 100 நாள் அரசாங்கம், இடைக்கால வரவு செலவுத் திட்டம் ஒன்றை சமர்ப்பித்திருந்ததுடன் சில அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## நிலச்சரிவு...

இந்தச் சம்பவத்தில் 4 வீடுகள் சேதமடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த பகுதியில்பெய்து வரும் கன மழையின காரணமாகவே இந்த மண் சரிவு ஏற்பட்டுள்ளது. (செ-12)

## சுன்னாகத்தில்...

இடம்பெற்றுள்ளது.

குறித்த நகைகளின் பெறுமதி சுமார் மூன்று லட்சம் ரூபாயுக்கு மேல் என தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் சுன்னாகம் மேற்கு மூர்த்தியான கூடல் பகுதியில் உள்ள ஒழுங்கையில் நேற்று பிற்பகல் 4.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் குறிப்பிட்ட பெண்ணின்கழுத்தில்உள்ள நகைகளை அறுக்க முற்பட்ட நிலையில் அவர் அதனை எதிர்த்து நின்றுள்ளார்.

இந் நிலையில் மோட்டார் சைக்கிளை விட்டு இறங்கி, குறித்த பெண்ணைப பிடித்து அவருடைய கழுத்தில உள்ள சங்கிலி மற்றும் தாலிக் கொடியையும் அறுத்து சென்றுள்ளார்கள்.

அதே இடத்தைச் சேர்ந்த சுபாசினி பிரதீபன் (வயது 32) என்பவரின் நகைகளே இவ்வாறு அறுத்து செல்லப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக பாதிக்கப்பட்ட பெண்ணால் சுன்னாகம் பொலிஸ்நிலையத்தில முறையிடப்பட்டுள்ளது.

இந்த இழுபறியின போது பெண்ணினுடைய கைகளில்காயம ஏற்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது.(செ-12)



A/L பெறுபேற்றுக்காக காத்திருக்காமல்
O/L உடன் UK Certified Business & Hotel Management with ENGLISH
Beginner's Level
Advanced Learners
IELTS Preparatory
கற்கைநெறியில் இணைந்து - 6 மாதங்களில் உள்நாட்டில் தொழில்வாய்ப்பு
OR
சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியா சென்று இலட்சக்கணக்கில் சம்பாதியுங்கள் (பயிற்சிக்காலத்தில் 15000 ரூபாய் வரை சம்பாதிக்கலாம்!)
(C-2304)
Student Visa – Work Visa – PR
Arrangements for Engineering – Medicine – IT – Business & Many More Education Streams
SIKARAM Any Visa to Any Country
இதுவரை கற்கைநெறியில் இணைந்து பயன்பெற்றவர்கள் பற்றி அறிந்துகொள்ள
www.sikaram.lk
Tel: 077 36 16 798 / 021 222 00 11
Sikaram Institute of Hospitality & English
#275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின் புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m



BRITISH COLLEGE OF HIGHER STUDIES வழங்கும்
After AL What Next ?
உங்களின் கனவும் பெற்றோரின் ஆசைகளும் நிறைவேற
பல்கலைக் கழகமா? உயர்கற்கை நெறியா? புதிய தொழில் வாய்ப்பா?
உங்களின் ஆங்கில அறிவை நனவாக்குவதே ஒரே வழி
அதை மேம்படுத்துவதே எமது நோக்கு
Spoken English with Grammar 1½ Months
100% பயிற்சி
சர்வதேசத் தரம் கொண்ட பாடத்திட்டங்களை உள்ளடக்கி மிகவும் இலகுவான விளக்கங்களுடன் அனைவருக்கும் பயனுள்ள வகையில் கற்பிக்க வகை செய்திருக்கின்றோம். ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே இந் நெறி நடாத்தப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும்ஆங்கிலம் கற்க
100% வெற்றி
Diploma In English 2½ Months
ஒரு தொழில் தேடுவதாயினும், உயர் கல்வியினைத் தொடருவதாயினும், ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதுள்ளது. இவை யாவையும் கருத்தில் கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கபடுகிறது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.
* வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
* எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
* Excellent Teachers' Panel & Individual Attention
* கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.
* ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்கட்கு தனிப்பட்ட கவனமும், கூடுதல் பயிற்சிகளும் வழங்கப்படும்
Spoken English with Grammar: Rs.10'000 (crossed out) Rs.7'500
Diploma in English: Rs.14'000 (crossed out) Rs.9'500
Batches Start On
28.09.2015 @ 9.00 am
29.09.2015 @ 9.00 am
30.09.2015 @ 2.00 pm
01.10.2015 @ 9.00 am
02.10.2015 @ 9.00 am
(C-2299)
BCHS
No.15, Chirambiyady Lane (off Stanley Road), Jaffna (Near Ariyakulam & Above Sathosa SM)
Tel : 021-2224550, 0777222422, 0776555677



வேலையாள் தேவை
யாழ்.நகரில் இயங்கி வரும் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக வேலைகள் தெரிந்த 20-45 வயதிற்குட்பட்ட பெண் எழுதுவினைஞர் தேவை. ஆரம்பச் சம்பளமாக 10, 000/- வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0765529093
(1800)



விளம்பரத்துறையில் வேலை வாய்ப்பு
ஊதியம் சராசரியாக மாதம் 30,000
யாழ்ப்பாணத்தினை தலைமையகமாக கொண்ட எமது நிறுவனத்திற்கு முழுநேரமாக / பகுதிநேரமாக விளம்பரம் செய்யக்கூடியவர்கள் வடமாகாணத்தின் அனைத்து ஊர்களிலிருந்தும் தேவைப்படுகிறார்கள்

• அடிப்படை கல்வித்தகமை : O/L • சிறந்த தொடர்பாடல் திறமை • நேர்த்தியான உடையலங்காரம்
• வாடிக்கையாளரிடம் அன்பாகவும் மரியாதையாகவும் நேர்த்தியாகவும் பழகும் திறமை • நாணயம்
• வேலை நேரம்: உங்கள் விருப்பப்படி எந்தநாளும் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் செய்யலாம்.
• ஊதியம் சராசரியாக மாதத்திற்கு 30,000 (உங்களின் திறமைக்கும் உழைப்பிற்கும் ஏற்ப கூடலாம், குறையலாம்)
திறமையானவர்கள் உடன் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
6 மாதத்தின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.
V2 TRAVELS & TOURS
(C-2302)
நேர்முகத்தேர்வு : 27-09-2015
காலை 10 மணி முதல் 3 மணிவரை(ஞாயிற்றுக்கிழமை)
தொடர்புகளுக்கு : 0768226243
யாழ்ப்பாணம் 49A,சப்பல் லேன்,யாழ்ப்பாணம்.



ஆங்கில பயிற்சிநெறி ஆரம்பம்
2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
6 மாதகால விசேட ஆங்கிலப் பயிற்சிநெறி
Spoken English with Grammar
ஆரம்பம்:
27.09.2015 காலை 10.00 மணி
தரம் 6இல் ஆங்கில மூலம் கற்கவிருக்கும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.
தவறாது பங்குபற்றி பயனடையுங்கள்.
இடம்: நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக)
தொடர்புகளுக்கு: 0775388471




கந்தன் கருணை
முருகன் அடியார்களுக்கு
கந்தசஷ்டியை முன்னிட்டு யாழ். நகரில் இருந்து முதல் முறையாக ஆறுபடை வீடு தரிசனம்
தரிசனம் 10 நாட்கள்.... புறப்படும் திகதி 11/11/2015
ஆறுபடை வீடுகளில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முருக படைத் தரிசனத்துடன் கடைசி 2 நாட்கள் திருச்செந்தூரில் நடைபெறும் உலகப் பிரபல்யம் பெற்ற சூரன் போர் காட்சியை கந்த அடியார்கள் காண ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் போகும் வழியில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களையும் தரிசனம் செய்யலாம்.
20% விசேட கட்டணக் குறைப்புடன் 75,000/= SL. Rs
சென்னையில் ஒருநாள் சொப்பிங்க்கு ஒதுக்கப்படும்
எங்கள் கட்டணத்தில் உள்ளடக்கப்பட்டவை
→ இருவழி விமான கட்டணம்
→ இருவழி விமான நிலையத்துக்கான போக்குவரத்து கட்டணம்
→ மூன்று நேர உயர்தர சைவ உணவுகள்
→ இருவர் தங்கக்கூடிய இணைந்த குளியலறை
→ 2 தண்ணீர் போத்தல்/ காலை, மாலை தேநீர்
முக்கிய குறிப்பு:
10 யாத்திரிகர்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
தொலைபேசி இல :
021 221 7070
077 354 5115
தொடர்புகளுக்கு : சன்ஜெயா ருவறிசம்
SUNJUYA TOURISUM
713, Hospital Road, Jaffna.
(1890)



பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கிறீர்களா?
தீர்வு
இயேசு கிறிஸ்துவிடம்!
செப்டெம்பர் 25-26-27
வெள்ளியிலிருந்து ஞாயிறு வரை
தினமும் மாலை 4.00 மணிக்கு
யாழ்ப்பாண மாநகர சபை மைதானத்தில்

(1879)
Bless Sri Lanka: 0775 540 839 யாழ்ப்பாணம்: 0775 033 200


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.